


15/1/63

# தமிழிலும் ஆங்கிலத்திலும்



- தட்டெழுத்து
- சுருக்கெழுத்து
- கணக்குவைப்பு

ஆகியன பயிலச் சிறந்த ஒரே ஸ்தாபனம்

# கொமேசியல் கல்லூரி


# COMMERCIAL COLLEGE

19, திருமலை வீதி, மட்டக்களப்பு.

கிளை : பிரதான வீதி, கல்முனை.

301


தந்தி : **சரஸ்வதி**



**கல்முனையில் பிரபல நகை வியாபாரிகள்**

நயம், நம்பிக்கை, நாணயமுள்ள

நவநாகரிக உயர்தர தங்க நகைகளுக்கு



# T. S. N. SP. அருணசலம் செட்டியார்

**212,** மெயின் வீதி, கல்முனை.

# தேனமுத இலக்கிய மன்றம்

போஷகர் :

திருமதி. எம். எஸ். இரத்தினசிங்கம்

பிரதம ஆலோசகர் :

திரு. ஆர். அழகுசுந்தரம்

மட்டக்களப்பு :

தலைவர் : திரு. மு. நாகரெத்தினம்

உபதலைவர் : திரு. கே. இராஜரெத்தினம்

இணைச் செயலாளர்கள் :
திரு. தி. சக்திதாசன்,
திரு. செ. இராஜேந்திரன்

பொருளாளர் : செல்வி கிளேயார் பாத்லெட்

கல்முனை :

தலைவர் : திரு. கே. இராஜரெத்தினம்

உபதலைவர் : திரு. த. இராஜதுரை

இணைச் செயலாளர்கள் :
திரு. சு. கிருஷ்ணமூர்த்தி
செல்வி கு. குணநாயகி

பொருளாளர்கள் :
செல்வி கோ. கந்தையா
திரு. ஜனாப் முகம்மது மூசா



# தேனமுதம்

## ஆண்டு மலர்



கலசம் 10 | மார்கழி—1962 | கலவை 1

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வாழ்த்துச் செய்திகள் | | 7 |
| ஆசையும் நாணமும் | --கி. வா. ஜகந்நாதன்-- | 13 |
| பாரதியைக் கண்டேன் | --கவிஞர் இராஜபாரதி-- | 17 |
| மன்றத்து நிகழ்ச்சிகள் | | 18 |
| தேனமுதம் ஒரு கண்ணோட்டம்-- | | 19 |
| உண்மை சொல்லு | --எம். எஸ். பாலு-- | 21 |
| படகுக் காரன் | -- அழ வள்ளியப்பா -- | 22 |
| ஆவதும் பெண்ணால் | --பா. பாலேஸ்வரி-- | 23 |
| நகைச்சுவை | --விடிவெள்ளி-- | 27 |
| நான் கொண்ட காதல் | --பி. சரோஜாதேவி-- | 30 |
| வாழவேண்டும் | --வாழையர் அமுதன்-- | 33 |
| மோதல் | --திமிலை மகாலிங்கம்-- | 34 |
| காதல் உயிர் | --காசி ஆனந்தன்-- | 40 |
| சாந்தி | --திமிலைத் துமிலன்-- | 41 |
| காதல் தவிப்பு | --வேலு-- | 52 |
| புழுகுப் புகழர் | --தேனுடன்-- | 53 |
| கவிதைப் பெண் | --கலியுகன்-- | 56 |
| வாக்கு | --ஈழத்து ஸ்ரீ-- | 57 |
| விந்தை இறைவன் | --ஜீவா-ஜீவரத்தினம்-- | 60 |
| நியமனம் | --கண்ணகி-- | 61 |
| சிரிப்பு | --முருகையன்-- | 65 |
| இளமை நினைவுகள் சில | --மாஸ்டர் சிவலிங்கம்-- | 67 |
| கண் கவர் காஷ்மீர் | --நடிகையர் திலகம் சாவித்திரி-- | 71 |
| நிலைத்த எண்ணம் | --மட்டுநகர் முத்தழகு-- | 74 |
| காதல் நினைவு | --தமிழோவியன்-- | 75 |
| அன்புள்ளம் | --எஸ். ராஜம் புஷ்பவனம்-- | 76 |
| நெஞ்சில் முகிழ்ந்த மலர் | --எருவில் மூர்த்தி-- | 81 |
| க்ஷணப்பித்தம் | --எம். ஏ. ரஹுமான்-- | 82 |
| தேனமுதம் | --நாகூர் ஏ. பாவா-- | 83 |
| பொலநறுவைப் பிரயாணம் | --கே. இரா-- | 85 |
| வாயாற் பேசாள் | --சோமலிங்கம்-- | 89 |
| இன்பப் பொங்கல் | --முகிலன்-- | 90 |
| மட்டக்களப்பில் திருமணச் சடங்கு | --வி. சு. கதிர்காமத்தம்பி-- | 91 |
| இனி ஒலிக்காது | --அ. ஸ. அப்துஸ்ஸமது-- | 94 |
| சமரச வாழ்வு அமைப்போம் | --திமிலைக் கண்ணன்-- | 97 |
| நீயும் ஒரு பெண்ணோ | --ஈழத்து நாதன்-- | 98 |
| கூடார சினிமா | --நவம்-- | 99 |
| பிதற்றல் | --இர. சிவலிங்கம்-- | 103 |
| வாழ்க்கை | --அன்புமணி-- | 107 |
| மூன்று பிடிமண் | --ஏ. யூ. எம். அப்துல் கரீம்-- | 111 |
| உரை நடையின் மறுமலர்ச்சி | --கிரீதரன்-- | 115 |
| அன்பளிப்புச் செய்தவர்களின் பட்டியல் | | 117 |

# தேனமுதம்

ஆசிரியர் குழு

ஆசிரியர் :

திரு. திமிலை மகாலிங்கம்

உதவி ஆசிரியர்கள் :

திரு. என். எஸ். அருள்ராசா
(தேனுடன்)

திரு. ஜனுப் நாகூர் ஏ. பாவா

செல்வி பீ. கோணேஸ்வரி

கல்லூரியின் ஸ்தாபகரும்
மன்றத்தின் போஷகருமாகிய



திருமதி எம். எஸ். இரத்தினசிங்கம்
அவர்கள்

# வணக்கம்

ஈழத்து இலக்கிய வட்டாரத்திலே முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மறுமலர்ச்சி ஏற்பட்டு வருவதைப் பலராலும் அவதானிக்க முடிகிறது. இத்தகைய இலக்கிய மறுமலர்ச்சியின் பிரதிபலிப்புகளில் ஒன்றுதான் இம்மலரும் என்று கூறலாம்.

தேனமுதத்தின் மேலாடையாக ஈழத்துக் கலைக்கழகத்தின் தலைவர் காலாநிதி வித்தியானந்தன், மட்டக்களப்பு மாவட்டத்தின் முதல் பிரதிநிதி செ. இராஜதுரை; ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. திருஞானசம்பந்தன், வித்துவான் பண்டிதர் வி. சி. கந்தையா, வண. இரத்தினராஜா முதலியோரின் ஆசிச் செய்திகள் அழகூட்டி நிற்கின்றன. ஆடையை அகற்றிய மறுகணத்தில் தாய்த் தமிழ் நாட்டின் தமிழ்ச் செல்வர் கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன், அழ. வள்ளியப்பா ஆகியோரின் படைப்புகள் தித்திக்கும் ருசி தந்து நிற்கின்றன. ஈழத்துத் தலைசிறந்த கவிஞர்களான திமிலைத் துமிலன், இராஜபாரதி, முருகையன் முதலியோரின் கவிதை மலர்கள் அமுதத்தின் சுவையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன என்பதை ரசிகர்கள் காணமுடியும்.

வளர்ந்த எழுத்தாளர்களுடன் வளர்ந்துவரும் இலக்கிய பரம்பரையினரின் கதை, கவிதை, கட்டுரைகள் இடையிடையே கலந்து தேனமுதத்தின் இனிமையை சுவைத்து ரசிக்க உதவுகின்றன. சிறுகதை, கவிதை, நாடகம், நகைச்சுவை ஆகிய துறைகளில் ஈழத்தின் உச்சி விழிம்புக்கு உயர்ந்திருக்கும் பலரின் சிருஷ்டிகள் சுவைத்து இன்புற மிகமிகப் பொருத்தமானவையே. இவை தவிர சினிமா வானிலே தென்னகத்து கிளியோபாட்ரா, கன்னடத்துப் பைங்கிளி என்றெல்லாம் வர்ணிக்கப்படும் நடிகை சரோஜாதேவி, நடிகையர் திலகம் சாவித்திரி ஆகியோரின் கட்டுரைகள் சினிமா ரசிகர்களின் மனதுக்கு மகிழ்ச்சியை ஊட்டும் என்பதில் சந்தேகம் இல்லை.

பல வருடங்களாகத் தட்டச்சு ரூபத்திலே வெளிவந்து கால மாறுதலில் நண்பன்—அமுதம்—தேனமுதம் என்று பெயர் மாற்றம் அடைந்த இப்பத்திரிகை இலக்கிய வானிலே ஒரு குறிப்பிடத்தக்க சிருஷ்டியாக அமைந்திருப்பதற்கு கொமேஷல் கல்லூரியின் ஸ்தாபகர் (மன்றத்தின் போஷகர்), ஆலோசகர், மற்றும் மன்றத்தின் செயற்குழுவினர்; ஆசிரியர் குழுவினர் ஆகியோரின் ஒத்துழைப்பும் இலக்கிய உணர்ச்சியுமே காரணம். நயமான இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நிதியுதவியளித்தவர்கள், விளம்பரதாரர்கள், எழுத்தாளர்கள் ஆகியோருக்கு என்றும் நாம் கடமைபட்டவர்களே.

எல்லாவற்றிற்கும் மேலாக இம்மலரை அழகுற உரிய காலத்திலே அச்சிட்டு உதவிய ஆசீர்வாதம் அச்சகத்தார் எமது நன்றிக்குப் பாத்திரமானவர்கள். அச்சிடும் விஷயத்தில் ஆவன செய்து எமது ஆசையை நிறைவேற்றி உதவிய கவிஞர் கா. பே. முத்தையா (விடிவெள்ளி) அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

தேனமுதத்தைச் சுவைத்து இன்புறத் துடிக்கும் உங்களுக்கும் மலருக்கும் இடையே இன்னும் குறுக்கே நிற்க விரும்பாமல் மலரை உங்களிடம் சமர்ப்பிக்கிறோம். தாராளமாகச் சுவையுங்கள்.

வணக்கம்.



—ஆசிரியர்.

## எங்களிடம்

மேல்நாட்டு, உள்நாட்டுக் குடிவகைகள்,
சங்கீத உபகரணங்கள்,
பரிசுப் பொருட்கள்,
பள்ளிக்கூட உபகரணங்கள்



ஆகியன மலிவான விலையில் கிடைக்கும்.

## இன்றே விஜயம் செய்யுங்கள்

# பெற்றிக்கலோ ஸ்டோர்ஸ்



317

27, மெயின் வீதி,
மட்டக்களப்பு.

---

## மட்டக்களப்பிலே
## மனோரம்மியமான ஹோட்டல்

- ◉ பிரதேசக் குடிவகைகள்
- ◉ திருப்தியான பலவகைச் சாப்பாடுகள்

திருப்திக்கு உகந்தபடி உண்டுகளித்து இன்புறலாம்.

## இன்றே வாருங்கள்

# கிராண்ட் ஈஸ்டர்ண் ஹோட்டல்

லேடி மன்னிங் டிரைவ், மட்டக்களப்பு.



# தேனமுதம் வாழ்த்துக்கள்

வணக்கம். தேனமுத இலக்கிய மன்றத்தினர் ஆண்டுமலர் வெளியிட விருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கையெழுத்துப் பத்திரிகையாக இதுவரை ''தேனமுதம்'' வெளிவந்தாலும் ஒவ்வொரு இதழிலும் காணப்படும் கருத்துச் செறிவுள்ள கட்டுரைகளும் கதைகளும் கவிதைகளும், கண்ணைக் கவரும் ஓவியங்களும் வாசகர்களைக் கவர்ந்துள்ளதை நாடறியும். தமிழ் கூறும் நல்லுலகின் தரமான இலக்கிய ஏடுகளில் தேனமுதமும் ஒன்றென்று கூறினால் அது மிகையாகாது.

''தேனமுதம்'' ஆசிரியர் திரு. திமிலை மகாலிங்கத்தையும் உதவி ஆசிரியர்களையும் நான் பாராட்டுவதுடன், அவர்களது இலக்கியப் பணியில் தொடர்ந்து வெற்றி பெற வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

ரீ. பாக்கியநாயகம்
தலைவர்
தமிழ் எழுத்தாளர் சங்கம்,
மட்டக்களப்பு

5-11-62.

◉

தேனமுதம் ஆண்டு மலராக வெளிவருவது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். தேனமுத இலக்கிய மன்றத்தினரின் அயராத ஆர்வத்திற்கு மலர் சான்றாகும். கிழக்கிலங்கை இலக்கியத்திற்கும் கலைகளுக்கும் பெயர் போனது; ஆர்வமிக்க இளைஞரின் முயற்சிகளை நாம் அடிக்கடி பார்த்ததுண்டு; கேள்விப்பட்டதுண்டு. அதற்கு உதாரணமாகந் 'தேனமுதம்' கடந்த சில காலமாகத் தட்டச்சுத் தாளாக வெளிவந்திருக்கிறது.

மலர்மணமிகுந்து, குணம் சிறந்து மலர வேண்டும் என வாழ்த்துகிறேன். உங்கள் முயற்சி வெல்க; தமிழ் வாழ்க.

**கலாநிதி.** சு. வித்தியானந்தன்

◉

கொமேசியல் கலாசாலையின் பத்தாண்டு நிறைவு விழாவின் விசேட மலராகத் 'தேனமுதம்' மலர்கிறது. என்பதை அறிந்து மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

சமுதாயத்தை வேண்டிய வாறே மாற்றியமைக்கும் வாய்ப்பு பத்திரிகைகள் சஞ்சிகைகளுக்குப் பெரும் பங்குண்டு.

ஆனால் அறத்தின் வழி நின்று ஆன்றமைந்த அறிவைப் பெருக்கி இலட்சியங்களை உன்னத நிலையில் வைத்துத் தெருட்டி நுண்ணிய பொருள்களை உளத்துச் செவ்வனே பதிக்க வல்லது சஞ்சிகைகளே. இவ்வாறான பண்புடையது தேனமுதம்.

பாடசாலைகள் மாணவர்களிடம் உள்ள பலவித ஆற்றல்களை மலரவைக்கும், மூலாதாரமான கல்வி புகட்டும். ஆனால் தொழில் துறைப் பாடசாலைகளோ மாணவர் மனச்சார்புக்கு இயைய விசேஷ தொழிற் பயிற்சி கொடுக்கும்.

மட்டக்களப்பு கொமேசியல் கலாசாலையிலே பல்வேறு வசதிகள் வரைவுள்ளதாக இருந்த போதிலும் தேனமுதம் அமிர்தம் போன்ற விஷயங்களுடன் வெளிவருவது பாராட்டப்பட வேண்டிய விஷயமாகும்.

மேலும் அக்கலாசாலை மாணவரின் அயரா உழைப்பின் பயனாய்த் திகழும் 'தேனமுதம்' மேலும் சிறப்புற்றோங்க எல்லாம் வல்ல இறை அருளை வேண்டுகின்றோம். எமது ஆசிகள்.

எஸ். திருஞானசம்பந்தன்



செ. இராசதுரை
முதலாவது பாராளுமன்ற உறுப்பினர்,
மட்டக்களப்பு.

நாட்டையும், சமுதாயத்தையும் நல்வழிப்படுத்தும் சிறந்த சாதனங்களில் பத்திரிகைகள் முதன்மை வாய்ந் தவை. எழுத்தாளன்கைப் பேனு போர்வீரன்கை வாளினை யும், புரட்சியார் வெடிகுண்டினையும்விட வலிமை மிக்கது.

கலை—இலக்கியம்—அரசியல் ஆகிய பல்வேறு துறை களில் தமிழ் மொழி மேலும் வளர்ச்சியுற பத்திரிகைகள் பல தேவை. இளைஞர்கள் நாட்டின் நாளைய தலைவர்கள். அந்த நல்ல பணியில் ஈடுபடுதல் மிக மிக அவசியம்.

அமுதம் சுவை மிக்கது. அது தேனமுதமாகக் கிடைத் தால், ஆகா...சுவைக்குச் சொல்லவா வேண்டும்.

கதை—கட்டுரை—ஆராய்ச்சி, கவிதை, நாவல், நகைச் சுவை ஆகிய பல்வேறு சுவைதரு மலர்களில் இருந்து வடித் தெடுத்த தேனில் குழைத்து அமுதம் படைக்கும் நல் இளைஞர்கள் செயல் கண்டு மகிழ்கின்றேன். அவர்கள் பணி வளர்க என்று வாழ்த்துகின்றேன். தமிழ்கூறும் நல் லுலகம் அஃதினைச் சுவைத்து இன்புறுவதாக.

வணக்கம்.

''தமிழகம்''
மட்டக்களப்பு,
21-11-62

செ. இராசதுரை

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நாலுங் கலந்தாலும் இனிக்கு நம் நற்றமிழ், இன்று தன் கோலம் வெளிகாட்டிக் கொஞ்சிக் குலவுவது, நதியூடே மீன்பாடு நல் மட்டக்களப்பினிலே.

முதியோரென், இளைஞரென், வறியோரென் யாவருமே நற்றமிழின் நலங்காத்து வாழ்கின்ருர். மன்றங்கள் வைத்தும் மகிழ்வான விழா வெடுத்தும், முத்தமிழைக் காக்க முனைந்து நின்ருர் வாலிபர்கள். அன்னுர் ஆக்கும் பணிகளோ அளவில. தேனெழுகும் தேனமுதம் அவற்றுள் தெவிட்டாத தேனமுதம்.

கண்டோம்; படித்தோம்; களித்தோம். மற்ருேர்க்கும் கூறுவதில் மட்டில்லா மகிழ்ச்சி.

வாழிய செந்தமிழ்.
வாழிய தமிழினம்.

**வண. எம். ஏ. இரத்தினராஜா.**

*மட்டக்களப்பு,*
*கார்த்திகை 1962.*

**வித்துவான், பண்டிதர் வி. சி. கந்தையா (B. O. L.)**
*சிவானந்த வித்தியாசாலை*

தமிழ் இலக்கிய வளர்ச்சிப் பணியில் பத்திரிகைகளுக்குள்ள பங்கு இணையற்ற ஒன்று. சமய கண்டனங்களாக மேனாட்டவரது வரவோடு முளைத்த தமிழ் உரை நடையானது நாளடைவில் தமிழ் வளத்தின் எல்லாத்துறைகளையும் நோக்கி வளர்வதாயிற்று. நாவல்கள், சிறுகதைகள் போன்ற உரை நடைப் பகுதிகளில் அது பெற்றுள்ள முன்னேற்றம் மிகுதியும் பாராட்டக்கூடியதாயுள்ளது. "பாலர்களுக்கு" என்ற பகுதியும் "மாதர்களுக்கு" என்ற பகுதியும் மக்களுட் தனிப்பட்டோருடைய சுவை நோக்கி அமைந்து தமிழ் வளர்ப்பன.

இவ்வாறான பத்திரிகைகள் இளைஞர், முதியோர் என்ற பேதமின்றி அனைவரையும் அவரவர் விருப்பு நோக்கி எழுச்சியூட்டி நிற்கக் காண்கிறோம். பத்திரிகைகளைப் படித்த இளைஞர்கட்குத் தாமும் அத்தகைய வெளியீட்டுத் துறையில் இறங்க வேண்டும் என்ற ஆசையும் தோன்றுதற்கு நிகழ் காலப் பத்திரிகைகள் வழி செய்தன. "வீடு தோறும் கலையின் விளக்கம்" என்று பாரதி கூறியது போல "வீதி தோறும் பத்திரிகை முழக்கம்" எழலாயிற்று. இளைஞரது ஆசை கையெழுத்துப் படிகள் மூலம் வெளிவந்தது. அவ்வாறான கையெழுத்துப் படிகள் பலவற்றைத் தமிழ் மாணவர்கள் வதியும் சூழல் எங்கும் இன்றுக் காணலாகும்.

அவற்றுட் சில கையெழுத்து வெளியீடுகள் மொழி நடையின் தரத்திலும், பொருளமைப்பாலும், ஆக்கத் திறத்தாலும் அச்சோதி தெளிவரும். இன்றைய சிறந்த இதழ்களோடு போட்டி போடத் தக்க நிலைக்கு வளர்ச்சியடைந்தும் உள்ளன. நம் நாட்டில் இருந்து வெளிவரும் அவ்வாறான சிறந்த இதழ்களுள் "தேனமுதம்" குறிப்பிடத் தக்கதொன்று என்பதை அதன் வாசகர்கள் நன்கறிந்திருப்பார்கள்.

இன்று அத் தேனமுதத்தின் ஆண்டிதழொன்று அச்சு வாகன மூர்ந்து வருகின்றதென்பதை எண்ணும்போது நமக்கு மகிழ்வு பொங்குகின்றது.

"அறையும் ஆடரங்கும் படப்பிள்ளைகள் தறையிற் கீறிடிற் தச்சரும் காய்வரோ" என்று கம்பர் ஒருபோது கேட்டார். ஆனால் இத்தேனமுதத்தின் வெளியீடானது கம்பர் குறிப்பிட்ட அந்தத் தச்சரே வியக்கத் தக்க ஒன்றாகி யிருப்பதைக் காணலாம். எத்தகைய பொறுப்புகள் வந்த போதிலும் களைத்து விழாது தமது இலட்சிய இதழைத் தொடர்ந்து நடத்தி வந்ததோடு, பின்னர் துணிந்து அதனை அச்சு வாகனமேற்றிய இதன் நிர்வாகிகட்கும், சிறப்புற இம்மலரைப் படைத்த 'தேனமுதம் ஆசிரியர் குழுவினர்க்கும் நம்நாட்டுக் கலையுலகம் என்றும் கடமைப் பட்டுள்ளது. வாழ்க இன்னரது நன்முயற்சி. வளர்க தேனமுதத்தின் செழும் புகழ்.

**வி. சி. கந்தையா.**

15, *மாடி வீதி*
*மட்டக்களப்பு.*
12-11-62.

மட்டக்களப்பிலே பிரபல நகை வியாபாரிகள்

- நம்பிக்கையும் உத்தரவாதமும் உள்ள நகைகள்
- உரியகாலத்தில் ஆடருக்கு செய்துகொடுப்பவர்கள்

# கணேசமுதலியார் & கோ

உரிமையாளர்கள் : அ. கணேசமுதலி, மா. இராசையா

இன்றே விஜயம்செய்யுங்கள்

# கணேசமுதலியார் & கோ

20, இரண்டாம் குறுக்குத் தெரு, மட்டக்களப்பு.

---

மனதைக் கவரும் சாரிகள்

மக்கள் விரும்பும் பலரகப் பட்டுப் புடவைகள்

சகலவித சர்ட்டிங், சூட்டிங் இனிசுகள்

இத்தனைக்கும் சிறந்த இடம்

# காசிம்ஸ்

விஜயம் செய்யுங்கள்

# CASSIMS

Silk Palace

Batticaloa.

# ஆசையும் நாணமும்

கி. வா. ஜகந்நாதன்

சேரமான் பவனிவருவதைக் காணத் துடிக்கிறது அந்தக் கன்னியின் மின்னிடும் கண்கள். ஆனால் அவளை ஏதோ ஒன்று குறுக்கிட்டுத் தடுக்கிறது.

இன்னுமோர் இடத்திலே......செல்வந்தரான உறவினரிடத்திலே உதவிபெற ஆசை கொண்ட ஒரு வறியவனையும் ஏதோ ஒன்று குறுக்கிட்டுத் தடுக்கிறது. அந்த 'ஏதோவொன்று' என்ன என்பதை இனியதமிழில் விளக்குகிறார் 'கலைமகள்' ஆசிரியர்.

சேரமான் பவனி வந்து கொண்டிருந்தான். முரசுகள் முழங்கின. ஊது கொம்புகள் இயம்பின, வெவ்வேறு வகையான இசைக் கருவிகள் முழங்கின. ஒரே ஆரவாரம். கடல் ஒலிபோல இருந்தது, எல்லாம் கலந்து முழங்கின முழக்கம். யானைகள் முன்னே சென்றன. பின்னாலே மந்திரிகள், பிரதானிகள், மடமங்கையர் பல பல பண்டங்களை ஏந்திக் கொண்டே செல்கிறார்கள். முன்னும் பின்னும் கூட்டம்வர இடையிலே உயர்ந்த யானையின்மேல் அம்பாரி வைத்து அதில் வீற்றிருக்கிறான் சேரன். கண் கொள்ளாத காட்சி.

அந்த அழகிய பெண்ணுக்குச் சேரனைக் கண்ணாரக்காண வேண்டுமென்று ஆசை. அவனுடைய அழகைப் பற்றிப் பலர் புகழ்ந்து பேசக் கேட்டிருக்கிறாள். அவன் வீரத்தைப் பற்றியும் கேட்டிருக்கிறாள். அவனுடைய செல்வத்துக்கு வரம்பே இல்லை என்பதையும் அவள் பலர் வாயிலாகக் கேட்டிருக்கிறாள். அவனை அரண்மனைக்குச் சென்று காணுவது என்பது கன்னிப் பெண்ணுக்குச் சாத்தியமான காரியமா?

இப்போது தக்க சந்தர்ப்பம் வந்திருக்கிறது. மாணிக்கக் கலனும் மணமாலையும் அணிந்து கொண்டு அவனே வீதியில் வந்து கொண்டிருக்கிறான். ஊரே திரண்டு பார்க்கும்போது அவளும் கூட்டத்தோடு போய் நின்று பார்க்கலாமே! இந்த எண்ணம் அவளுக்கு உண்டாயிற்றோ இல்லையோ! உடனே எழுந்திருந்தாள். வாயிற் கதவு திறந்துதான் இருந்தது. நேரே வீதியிலே சென்று பார்ப்பதற்கு என்ன தடை?

ஏதோ ஒன்று தடை செய்தது. கால் பின்னல் இட்டது. வாயிற் கதவண்டை வந்தாள். அவளுக்குத் தன் இடத்திலேயே நம்பிக்கை இல்லை. அவனைப் பார்த்து அவன் அழகிலே மயங்கி

உணர்ச்சிவசப்பட்டு ஏதேனும் செய்து விட்டால்—இப்படி நினைக்கும் போதே அவள் உடம்பு கூசியது. ஊரே திரண்டு அவளை ஏசுவது போன்ற நினைவு எழுந்தது. உடம்பு ஒருமுறை குலுங்கி ஆடியது. இன்னும் அவள் வாயிற் படியைத் தாண்டவில்லை. ஆர்வம் அவளை உந்த நாணம் அவளை உள்ளே பிடித்து இழுத்தது. இன்னும் ஊர் வலம் அவள் வீட்டு வாசலுக்கு வரவில்லை.

சற்று நேரம் அந்தக் கதவருகில் நின்றாள். ஏதோ தோன்றிற்று. கதவைச் சாத்தி உள்ளே தாழை இறுகப் போட்டு விட்டு மறுபடியும் உள்ளே சென்று அமர்ந்தாள். அப்பாடி! ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்துக் கொண்டு விட்டது போன்ற ஆறுதல் உண்டாயிற்று. பெருமூச்சு விட்டாள். நாணம் குலைந்து நாலுபேர் காண, வண்ணம் குலைந்து வடிவு குலைந்து வளை கழல—மேலே எண்ணிப் பார்க்க அவளுக்கு உறுதி இல்லை. நல்ல வேளை! இந்த அவலநிலை வாராமல் இப்போது காப்பாற்றிக் கொண்டாள்.

அந்த நிலையில் அவள் அமைதியாக இருக்க முடிந்ததா? அவள் மனம் இப்போது கற்பனை உலகத்தில் புகுந்தது. அவள் வீதிக்குச் சென்று பார்க்கிறாள். என்ன ஆரவாரம்! என்ன காட்சி! சேரனுடைய அழகுதான் எப்படி இருக்கிறது! அவன் மார்பும் தோளும்—காமன் உருவெடுத்து வந்து விட்டானோ?

பகற் கனவு கலைந்து விட்டது. வாத்திய இசை நெருக்கமாகக் கேட்டது. அவள் வீட்டு வாசலை ஊர்வலம் அணுகிக் கொண்டிருக்கிறது. போய்க் கதவைத் திறந்து பார்த்தால் என்ன? எல்லோரும் பார்க்கும்போது நாமும் பார்ப்பதில் என்ன தவறு உண்டாகப் போகிறது?

நெஞ்சம் கதவைத் திறந்து வீதியிலே போய்ப் பார்க்கிறதாகப் பாவனை பண்ணுகிறது.



சே! என்ன பைத்தியக்காரத்தனம்! அவனைக் கண்டு மயங்கி மூர்ச்சை போட்டு விட்டால்?

அவ்வளவு தூரம் ஏமாந்து போவோமா? உறுதியாக நின்று பார்த்தால் என்ன?—நெஞ்சம் மெல்ல மெல்லத் தாழைத் திறக்கச் செல்கிறது. துணிவு இல்லாமல் திரும்புகிறது. மறுபடியும் சென்று தாழைத் திறந்து விடுகிறது. திடுக்கிட்டு மறுபடியும் தாழைப் போட்டு விடுகிறது. சிறிது தயங்கி மறுபடியும் வீதியில் செல்கிறது. அதற்குள் நாணம் தலைக்கொள்கிறது. — எல்லாம் கற்பனை

தான். அவள் கம்பத்தின்மேல் சாய்ந்து உட்கார்ந்தபடியே இருக்கிருள்.

நெஞ்சு படுகிற பாட்டைக் கண்டால் அவளுக்கே ஆச்சரியமாக இருக்கிறது. அதற்குப் போய்ப் பார்க்கவும் துணிவில்லை. இருந்து விடவும் உறுதி இல்லை. நெஞ்சைத் தனியாக வைத்துப் பார்க்கிருள் அவள்.

× × ×

ஓர் ஏழை மனிதன்; ஆனல் மானி. அவனுக்கு அவசியமாகப் பணம் வேண்டியிருந்தது. அவன் உறவினர் ஒருவர் பெரிய செல்வர். அவரிடம் போய்க் கேட்டு வரலாம் என்று புறப்படுகிருன். இதுவரையிலும் அவன் யாரிடமும் கேட்டதில்லை. அந்தப் பணக்காரரோடு பழகியிருக்கிருனே அல்லாமல் தனக்கு இது வேண்டுமென்று கேட்டதும் இல்லை; பெற்றதும் இல்லை.

'இதுவரைக்கும் கேட்டதே இல்லை; ஆகையால் இப்போது கேட்டால் தட்டாமல் தருவார்' என்ற நம்பிக்கையோடு அவர் வீட்டை நோக்கிப் புறப்பட்டு விட்டான். திருடுவதற்குப் போகிறவனைப் போல அவனுக்கு நெஞ்சு படக்குப் படக்கென்று அடித்துக் கொள்கிறது. கால் தள்ளாடுகிறது.

'சீ! இது என்ன கோழைத்தனம்! அவர் பெரிய செல்வர். நமக்கு உபகாரம் செய்வதனல் அவருக்குக் குறைந்து விடுமா, என்ன?' என்று கொஞ்சம் தைரியத்தை வருவித்துக் கொண்டு காலை எட்டிப் போடுகிருன். எப்படியோ, அந்தச் செல்வர் வீட்டுக்கே போய்விட்டான். உள்ளேயும் புகுந்துவிட்டான்.

இப்போது அவனுக்கு உண்டான நாணத்துக்கு எல்லையே இல்லை. இப்படியே திரும்பிப்போய் விடுவோம் என்று தோன்றுகிறது. சற்றே நிற்கிருன். மறுபடியும் இரண்டு எட்டுவைக்கிருன். கடைசியில் துணிந்து உள்ளேபோய் விட்டான். கூடத்தில் செல்வர் உட்கார்ந்திருந்தார்.

அவரைப் போய்க் கண்டான். "என்ன, சுகந்தானே? எங்கே வந்தீர்கள்?" என்று செல்வர் கேட்டார். வந்தவன், "சும்மா பார்த்துப் போகலாம் என்று வந்தேன். உங்கள் ஆசீர்வாதத்தால் சௌக்கியமாக இருக்கிறேன்" என்று சொன்னுன். வந்த காரியத்தைச் சொல்ல நாக்கு எழவில்லை. அவரோடு சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தான். ஒரு வார்த்தை பணத்தைப் பற்றிப் பேசவில்லை. "சரி, அடிக்கடி வந்து கொண்டிருக்கிறீர்கள். ஏதாவதுவேண்டுமென்ருல் சொல்லுங்கள். என்னல் ஆனதைச் செய்கிறேன்" என்று அவர் கூறினர். அப்போதாவது அவன் சொல்லலாம் அல்லவா? அதற்குத் துணிவே வரவில்லை, அவரும் எழுந்து விட்டார்; இவனும் விடைபெற்றுப் புறப்பட்டு வந்து விட்டான்.

இன்னும் செல்வர் மாளிகையினின்று வெளியே வரவில்லை. என்ன முட்டாள் தனம்? இவ்வளவு தூரம் வந்து விட்டு வந்த காரியத்தை அவரிடம் சொல்லாமல் போகுருமே! அவரே ஏதாவது வேண்டுமானல் சொல் என்ருரே! மறுபடியும் போய்ச் சொல்லிவிட்டுப் போகலாமா?" நிற்கிருன். திரும்பி உள்ளே செல்ல நாலு எட்டுகள் வைக்கிருன். மறுபடியும் என்னவோ யோசனை தோன்றுகிறது. 'அப்போதே சொல்லாமல், தும்பை விட்டு வாலைப் பிடிக்கிற மாதிரி, இப்போது மறுபடியும் அவரைப் போய்க் கேட்பதா? அவர் நீராடப் போனுரோ, உண்ணப் போனுரோ! அவரைக் கண்டு வெட்கம் கெட்டுப்போய், அப்போது சொல்ல முடியவில்லை, இப்போது சொல்லுகிறேன் என்று பல்லை இளிப்பதா?"

மறுபடியும் வீடு செல்லத் திரும்புகிருன். மாளிகையின் வாசலுக்கு வந்து

விட்டான். மறுபடியும் ஒன்று தோன்றுகிறது. 'அவர் எவ்வளவு நல்லவர்! அவராகவே கேட்டாரே! நாம் மறுபடியும் போய்க் கேட்டால் தவறாக நினைக்க மாட்டார். அவர் மறுத்து மறுபடி நாம் கேட்பதுதானே அவமானம்? நம்முடைய தடுமாற்றத்தை அவர் உணர்ந்து கொண்டால் இரங்குவார். மறுபடியும் போய்க் கேட்கலாம்?— மறுபடியும் திரும்பி மெல்ல உள்நோக்கி நடந்தான். பத்து அடி நடந்திருப்பான். அதற்குள் மானம் வந்து தடுத்தது. 'முதலிலே கேட்காமல் இப்போது போய்க் கேட்டால், அப்போதே சொல்லியிருக்கலாமே என்றால் என்ன சொல்வது? நாம் சும்மா பார்க்க வந்து, அவர் ஏதேனும் வேண்டுமானால் சொல் என்று சொன்னதற்காக நாம் கேட்பதாக எண்ணி விட்டால் என்ன செய்வது?— அவனுக்கு மேலே கால் எழவில்லை. மறுபடியும் திரும்பி மெல்ல நடை போட்டான்.

× × ×

அந்த ஏழை பெருஞ் செல்வர் இல்லத்தில் வருவதும் போவதுமாக இருக்கும் அந்தக் காட்சியைச் சேரன் மேல் ஆசைகொண்ட இந்தப் பெண் கற்பனை செய்து பார்க்கிறாள். "என் நெஞ்சம் அந்த ஏழையைப் போலத்தான் இருக்கிறது. அவனுக்குப் பொருள் வேண்டும் என்ற ஆசை; ஆனால் மானம் குறுக்கே நிற்கிறது. ஆசையும் மானமும் போராட அவன் வருகிறான், போகிறான். நம்முடைய நெஞ்சும் அப்படித்தானே இருக்கிறது? சேரமானைக் காண வேண்டும் என்ற ஆசை ஒருபக்கம் எழுகிறது; நாணமோ ஒருபக்கம் இழுக்கிறது. இந்த இரண்டுக்கும் நடுவிலே என் நெஞ்சு வருகிறது, போகிறது" என்று அவள் தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறாள்.

அவள் சொல்வதாக அமைந்திருக்கிறது. பின்வரும் முத்தொள்ளாயிர வெண்பா.

ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தேன்--நாணிப்
பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வரும், செல்லும், பேரும்என் நெஞ்சு.

[ஆராய்ந்து பொறுக்கிய மணிகளால் அமைந்த பொன் இழைத்த ஆபரணங்களையும், அசையும் மாலையையும் அணிந்த சேரனைக் காணும் பொருட்டுப் போய், நாணத்தால் கதவை அடைத்துவிட்டேன்; என் நெஞ்சோ நாணம் மிக்குப் பெரிய பணக்காரர் வீட்டுக்குப்போன ஏழையைப் போல, வரும்; போகும்; மறுபடியும் திரும்பும்.

அலங்கு—அசையும். கோதை—சேரன். காணிய—காண. நல்கூர்ந்தார்—வறியவர். பேரும்—திரும்பிவரும்.]

## ஒரே நிமிடத்தில்

ஒரு நிமிடம் தாமதமானால் அட ஒரு நிமிடந்தானேயென்று சாதாரணமாகச் சொல்லிவிடுகிறோம். அந்த ஒரு நிமிடத்திலும் உலகத்தில் எவ்வளவு வேலை நடந்து கொண்டிருக்கிறது தெரியுமா? ஒரு நிமிடத்தில் உலகில் 68 மரணங்கள் நடக்கின்றன. ஒரு நாளில் 87,920 மரணமும் ஒரு ஆண்டில் 3, 57, 40, 800 மரணமும் நிகழ்கின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது.

# பாரதியைக் கண்டேன்!

—கவிஞர் இராஜபாரதி—

இரவு நெட்டைக் கனவொன்றிலே இக்கவிஞரைச் சந்தித்த பாரதி என்ன வெல்லாம் சொன்னான் தெரியுமா ? கவிதையைப் படியுங்கள் அது புரிந்துவிடும்

முரசுகொட்டிச் சங்கூதி முண்டபக்தி
முறையெல்லாங் கிளிக்கண்ணி மொழியிற்காட்டி
விரவுமிசைக் குயிலாகக் கூவித்தாவி
வீறுநடை போட்டகவி வேந்தன்அந்தச்
சிரசுமுட்டத் தலைப்பாகை செறியக்கட்டிச்
சிந்தனையை விந்தைமுகச் சிரிப்பிற் தேக்கி
இரவுநெட்டைக் கனவொன்றில் என்னைவந்தே
இடித்துவிட்டே யெழும்பென்றான் 'என்ன'வென்றேன் ?

பாழ்பட்ட சமுதாய மீட்சிக் காகப்
பாஞ்சாலி சபதத்தைப் பாட்டிற் சொன்னேன்
தாழ்வுற்ற நிலைமாற உலக மெல்லாந்
தமிழோசை கேட்கட்டு மென்று சொன்னேன்
நாள்முற்றும் போரிட்ட நம்முன் னோரின்
நடத்தைபழித் தறிவூட்டு நாதஞ் சொன்னேன்
வாழ்வுற்று வழிகண்ட தமிழர் கூட்டம்
வையகத்தி லெங்கணுமே இல்லை! யென்றான்

பேயனையும் பித்தனையும் பூசிக்கின்றான்
பிறநாட்டா ராசாரம் பேணிக் காத்துக்
காயமிதைப் பொய்யென்றுங் கடவுளாலே
காற்றடைத்த வையென்றுஞ் சொல்லுகின்றார்
நாயைவிட மோசமதாய்க் கத்துகின்றான்
நடத்தையிலே திருந்துகிறா னில்லை பெற்ற
தாயைவிடத் தாதிப்பெண் மோக மன்றோ
தலைக்கேற லாச்சிந்தத் தமிழன் வாழான்

'ஆமாம்'என் றாவேசக் குரல் கொடுத்தான்
அமரகவி ஐயாநான் என்ன சொல்வேன்
'நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோ' மென்று சொன்ன
பாமாற்ற முடியாத மரபையெங்கள்
பாட்டாலே மாற்றிவிட முடியா தென்றேன்
தாமாகத் தலைதாழ்த்தி நின்றான் ஆறாத்
தவிப்பொன்றை முகங்காட்டத் தளர்ந்து சென்றான்.

# தேனமுத இலக்கிய மன்றம்
## 1962

## முக்கிய நிகழ்ச்சிகள்

18–2–62 :— மன்ற உத்தியோகத்தர் தெரிவு.

17–3–62 : – ஆண்டு மலர் வெளியீடு பற்றி ஆலோசிக்கப்பட்டது.

2–6–62 :— வள்ளுவர் விழா கொண்டாடப்பட்டது.

21–7–62 :— விபுலானந்தர் விழா கொண்டாடப்பட்டது. மட்டக்களப்பு விளையாட்டுத் திடலுக்கு விபுலானந்தர் வெளியென்று பெயர் சூட்டுவதை ஆதரிக்கும் முகமாக தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

24–8–62 :— ஆண்டு மலர் வெளியீட்டு அவசரக் கூட்டம். இதில் செயற்குழு விஸ்தரிக்கப்பட்டது.

15–9–62 :— பாரதிவிழா கொண்டாடப்பட்டது.

22–9–62 :— தேனமுத மன்றத்தின் கிளை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. செயற்குழுவினர் தெரிவு செய்யப்பட்டது.

26–10–62 :— செயற் குழுக் கூட்டம் கூட்டப்பட்டது. அங்கத்தவர்களின் சேவைகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

22–12–62 :— கல்லூரியின் பத்தாவது ஆண்டுவிழா, பரிசளிப்புவிழா, தேனமுத பத்திரிகையின் ஆண்டுமலர் வெளியீட்டுவிழா, கலைவிழா என்பன நடந்தேறின.

# 'தேனமுதம்'

## ஒரு கண்ணோட்டம்

(பழைய மாணவன்)

1953-ம் ஆண்டு மட்டுநகரைப் பொறுத்த வரையில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். இவ்வாண்டிலே தான் ''கொமேர்சியல்கல்லூரி'' ஸ்தாபிதமாயிற்று. கல்லூரியின் ஆரம்பகாலத்திலேயே சில தமிழார்வமுள்ள இளைஞர்கள் அங்கு கல்வி பயில வந்தனர், தங்கள் உள்ளத்திலே கொழுந்து விட்டெரிந்த தமிழார்வத்திற்கும், சேவையுணர்ச்சிக்கும் உருவங்கொடுக்க விழைந்தபோது அது ஒரு தட்டச்சுப் பத்திரிகை ரூபத்தில் வெளிவந்தது.

''நண்பன்'' உருவானான். மட்டு நகரில் தனது சேவையை ஆரம்பித்தான். ஆசிரிய பதவியை திரு. கே. அழகுதுரை அவர்கள் ஏற்றார். ''நண்பன்'' தனது பெயருக்கேற்ப ஏராளமான வாசக நண்பர்களையும், எழுத்தாள நண்பர்களையும் பெற்றான். மட்டக்களப்பின் இலக்கிய வானிலே வீறு நடை போட்டு முன்னேறிவரும் கால கட்டத்திலே சிறிது மந்த நிலை ஏற்பட்டது. காரணம் ஆசிரியர்; கொழும்பில் அரசாங்க பதவியேற்கச் சென்றதேயாகும்.

ஆசிரிய பதவியை அப்போது கல்லூரி மாணவனாயிருந்த திரு. கே. சிறீஸ்கந்தராசா (ஈழத்து சிறீ) அவர்கள் ஏற்றார். தமக்கே உரித்தான தனிப்பாணியிலே ''நண்பன்'' வளரலானான். மக்கள் மத்தியிலே நல்லதொரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி ஆசிரியர். இலக்கியப் பணிபுரிந்து வரும்போது பழைய மந்தநிலை மீண்டும் ஏற்பட்டது.

இம்மந்த நிலை அதிககாலம் நீடித்திருப்பதை விரும்பாத திரு. ந. சா. அருள்ராசா (தேனாடன்) அவர்கள் பத்திரிகையின் ஆசிரிய பதவியை ஏற்றார். ''நண்பன்'' மீண்டும் தனது இலக்கிய சேவையை புதுத் தெம்புடன் ஆரம்பித்தான். மட்டுநகரில் முதல் முதலாக 'ஈழத்து இளங்கோ' சுவாமி விபுலானந்தருக்கு நினைவு மலர் வெளியிட்ட பெருமை 'நண்பனை'ச் சார்ந்ததாகும். இப்பணியினை வாழ்த்தி ஆசியுரை வழங்கியவர் சுவாமி நடராஜானந்தாஜீ அவர்கள் ஆகும். ''வெண்பாவிற் பெரியதம்பி' என கற்றோராலும் மற்றெல்லோராலும் பாராட்டப் பெறும் புலவர்மணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை, மட்டக்களப்பின் முதல்கீழைத்தேய மொழி வல்லுநர் பண்டித வித்துவான் வி. சி. கந்தையா, B. O. L. 'தேசியக் கவிஞர். பரமஹம்சதாசன், 'அன்பன்' நடராஜா ஆகியோரது விடயங்கள் மலரை மணம் பெறச் செய்தன. மலர் சிறிய அளவினதாக இருந்தாலும் அதன் பொருட் செறிவையும், சேவை மனப்பான்மையையும் பாராட்டி இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து வாழ்த்துக்கள் கிடைத்தன.

1958-ல் 'நண்பனி'ன் 5-வது ஆண்டு நிறைவு விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. அலங்கரிக்கப் பட்ட கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி விழாவில் பல பிரமுகர்கள், எழுத்தாளர்கள் கலந்து கொண்டனர். ஆசிரிய குழுவினரும், உறுப்பினரும் புகைப்படம் எடுத்துக்கொண்ட பின்னர் சிற்றுண்டி வைபவமும், இன்னிசை விருந்தும், கலந்துரையாடலும் நடந்தேறியது. இவ்விழாவிலேதான் 'நண்பனை' அச்சேற்றும் விடயம் முதல் முதலாக ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நிதி நெருக்கடியை உத்தேசித்து அவ்வாலோசனை உருப்பெறவில்லை.

1960-ல் பத்திரிகை ஆசிரியர் திரு. ந. சா. அருள்ராசா அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஆசிரிய பயிற்சிக்காகச் செல்ல வேண்டி ஏற்பட்டதால் அந்தப் பொறுப்பை கல்லூரியின் பழைய மாணவரும், பிரபல எழுத்தாளருமான திரு. திமிலை மகாலிங்கம் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஈழத்து இலக்கியப் பத்திரிகைகளிலே தமது

எழுத்து வன்மையால் ஒரு நிரந்த இடத்தைப் பெற்றுக் கொண்ட அவர் 'நண்பனு'க்கு ஆசிரியராகக் கிடைத்தது 'நண்பன்' செய்த பாக்கியந்தான் என்று தயங்காமற் சொல்லலாம்.

'நண்பன்' பத்திரிகை அச்சில் வந்துவிட்டது என்ற பரபரப்பான செய்தி ஒரு நாள் மட்டுநகர் எங்கணும் ஒலித்தது. கொமேர்சியல் கல்லூரியைநோக்கி 'நண்பன்' வாசகர்களும், ஆதரவாளர்களும் அதன் ஆசிரியரையும், ஆசிரிய குழுவினரையும் பாராட்டக் குவியத் தொடங்கினர். "தட்டச்சுப் பத்திரிகையையே நடத்த சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் நாங்களா 'நண்பனை' அச்சேற்றி யிருக்கிறோம்? இல்லவேயில்லை! ஆனால் அச்சேற்றும் எண்ணம் எங்களுக்கு இருந்தது உண்மைதான்." என்று வந்திருந்தவர்களுக்கு கூறிச் சமாதானப் படுத்தியது போதும் போதும் என்ருகி விட்டது.

'நண்பன்' என்ற பெயரில் அச்சுப் பத்திரிகையே வருவதால் பெயர் மாருட்டம் ஏற்படாமல் தவிர்ப்பதற்காக பத்திரிகையின் பெயரை மாற்றுவதென்று பலத்த சர்ச்சைக்குப்பின் ஏற்றுக் கொள்ளப் பட்டது. ஏறக்குறைய 29 பெயர்கள் பரிசீலனைக்கு வந்தன. முடிவில் 'அமுதம்' என்ற பெயர் எழுத்துச் செட்டிற்காகவும், பொருட் செறிவுக்காகவும் ஏற்றுக் கொள்ளப் பட்டது. இப்பெயரை ஆசிரியரவர்களே பிரேரித்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

'அமுதம்' (தட்டச்சு) பத்திரிகைக்கு 'தினகரன்' ஆசிரியர் திரு. க. கைலாசபதி (அவர் 'தினகர'னுக்கு ஆசிரியராக இருந்தபோது), 'கல்கி' உதவி ஆசிரியர் திரு. ந பார்த்தசாரதி, பிரபல தமிழ் சிறுகதை எழுத்தாளர் டொமினிக் ஜீவா, கவிஞர் 'விடிவெள்ளி', குழந்தைக் கவிஞர் அழவள்ளியப்பா, 'விவேகி' ஆசிரியர் திரு. மு. வி. ஆசீர்வாதம், 'நாவேந்தன்', ஆனந்தன் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். இலக்கிய வானிலே ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் இலங்கை எழுத்தாளர் பலரது கன்னிப் படைப்புகளை முதல் முதலில் வெளியிட்டு அவர்களை உருவாக்க உதவியது 'அமுதம்' என்பதை யாவருமறிவர். குறுக்கெழுத்துப் போட்டி நடாத்தி பரிசு பெற்ருேருக்கு விழா எடுத்து கௌரவித்ததை நாடே அறியும்.

தலைமைத் தபாற் காரியாலயத்தில் பத்திரிகையைப் பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் கால கட்டத்திலே அந்தோ... ஒரு அதிர்ச்சிதரும் செய்தி. அதாவது 'அமுதம்' என்ற பெயரில் கொழும்பில் இருந்து ஒரு அச்சுப்பத்திரிகை வெளிவரும் என விளம்பரம் தினசரிகளில் வந்தது. இப் பெயர்த் 'திருட்டு'க்கு நாங்கள் பலமான எதிர்ப்புத் தெரிவித்தோம். ஆனாலும் பலன் பூஜ்யம்தான். (அரை வேக்காட்டிலேயே 'அமுதம்' அச்சுப் பத்திரிகை அடுப்பில் இருந்து இறக்கப்பட்ட செய்தியை நீங்கள் அறிவீர்கள்.

உடனே நாங்கள் 'அமுதத்' தோடு சிறிது 'தேனை'யும் சேர்த்து "தேனமுதம்" படைக்க முற்பட்டோம்.

'தேனமுத இலக்கிய மன்றம்' உருவாயிற்று. திருவள்ளுவர் விழா, விபுலானந்த நினைவு விழா, பாரதி விழா, இலக்கிய சந்திப்பு, பாராட்டு விழா எனப் பல வகைகளிலும் தமிழன்னைக்கு சேவை செய்து வந்தது.

பத்தாண்டு கால தட்டச்சு நடைக்குப் பின் பத்திரிகை அச்சு வாகனமேறுகிறது. இந்த மகத்தான பணியினை வெற்றியுடன் நிறைவேற்றஉதவிய கொமேர்சியல் கல்லூரி பழைய மாணவர்கள், தற்போதைய மாணவர்கள், விளம்பரக்காரர்கள், எழுத்தாளர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் யாவருக்கும் 'தேனமுதம்' நன்றிசெலுத்துகிறது.

22-12-62 ல் நடக்கவிருக்கும் 'தேனமுதம்' வெளியீட்டு விழா, கொமேர்சியல் கல்லூரி 10 வது ஆண்டு விழா, கலை விழா ஆதியன மட்டக்களப்பு இலக்கிய வரலாற்றேட்டில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நன் நாள் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

வாழ்க தமிழன்னை !
வளர்க தமிழ் மொழி !!

✽

உலக அதிசயங்களைக் கூறிவிட்டு உண்மையைச் சொல்லச் சொல்கிறார் இக்கவிஞர். இயல், இசை, நாடகம் ஆகிய துறைகளிலும் பரிச்சயம் உள்ள எம். எஸ். பாலு அவர்கள் வேறென்ன சொல்லுகிறாரென்று படித்துப் பாருங்கள்.

# உண்மை சொல்லு!

(எம். எஸ். பாலு)

உலகத்து அதிசயங்கள் ஏழு என்றே
உணர்த்தி முது அறிஞர் குழு வைத்திடினும்
உலகத்தை நாமின்று நோக்கிடுங் கால்
உருவாகும் அத்தனையும் அதிசயமே!

புத்தரது ஞான ஒளி வீசி யெங்கும்
புனித நெறி பரவ அருள் தந்த தூய
பாரதத்தே மிளிரு(ம்) மலை இமயங்கூட
பாரி லொரு புகழ் பொறித்த அதிசயமே!

மனிதருள தத்துவத்தின் மேதை யென
மானிலமே போற்றும் 'கன்பூசிய(ஸ்)'சின்
மறை ஏற்றிப் புகழ் கண்ட சீனநாட்டின்
மதிற் சுவரும் மாபெரிய அதிசயமே!

சத்தியத்தின் பாதையிலே சென்றுலகின்
சரிதையிலே ஒரு புதிய நெறி புகுத்தி
சாத்வீகப் போர் தொடுத்த 'காந்திமண்ணில்'
சிந்துகிற (இ)ரத்த மொரு அதிசயமே!

நல்லுறவும் ஒற்றுமையும் வேண்டிபல
நாடுகளும் நேசமுற வாழவென
நல்'பஞ்ச சீலத்தை' ஏற்ற சீன
நாட்டி னலங் கோல மொரு அதிசயமே!

பலதூர முள்ள தொரு நாடு 'ஹியூபா'
பலப் பரீட்சை செய்யாதீர் என்று கோசம்
பண்ணிய எம் சோதரரின் பக்திக் காக
பரிசாக வந்த (இ)ரத்தம் அதிசயமே!

பெருவெள்ளம் வந்தபோது நம்முயிரை
பெரிது வந்து காப்பாற்ற வந்த நாடு
பெருமை யுறு பாரதத்துக் கின்றவல
பேரிடரை மறந்த தொரு அதிசயமே!

இன்றுந்தான் உலகத்தில் தர்ம தர்மம்
இறை வாநீ காட்டலையோ என்று எந்தன்
இதமாற உள்ளமுனை கேட்கு தையே
இனி சொல்லு அதிசயத்தின் உண்மை யென்ன?

மழலைக்குரல்:

# படகுக்காரன்

— குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா —

படகுக் கார ராமா — உன்றன்
    படகில் ஏற லாமா ?
கடலில் செல்ல லாமா ? — கொஞ்சம்
    கருணை செய்வாய், ராமா.

துடுப்பை எடுத்து நானே — கூடத்
    துணையாய் ஓட்டு வேனே
உடுப்பு நனைந்த போதும் — நான்
    உரையேன் வார்த்தை ஏதும்.

அலையை எதிர்த்து நாமே — சென்று
    ஆனந் தங்கொள் வோமே.
மலைபோல் மீனைக் கண்டும் — நான்
    மலைக்க மாட்டேன், என்றும் !



# ஆவதும் பெண்ணாலே......

— ப். பாலேஸ்வரி —

> "உன் ஆசைகளுக்கு என்றுமே நான் அணைபோட்டதில்லையே. இன்று மட்டும் ஒரே ஒரு நாள் என் விருப்பத்திற்கு நடந்து கொள்ளக்கூடாதா ?"
>
> "பல மாதங்கள் தாட்பாழ் போட்டு வைத்திருந்த உன் மனக்கதவை ஒரு நொடிப் பொழுதில் தகர்த்துவிட எண்ணலாமா ?"
>
> இரண்டு வெவ்வேறு பெண்களிடம் கேட்கப்பட்ட கேள்விகள் இவை. இதிலே ஆக்குவது யார் ? அழிப்பது யார் ? படியுங்கள் தெரிந்துவிடும்.

"தங்கம் ! ஏன் என்னோடு கோபமா? இத்தனை நாளும் உன்னை உன் விருப்பப் படி நடந்து கொள்ள நான் விடவில்லையா? உன் ஆசைகளுக்கு என்றுமே நான் அணை போட்டதில்லையே. இன்று மட்டும் ! ஒரே யொரு நாள்என் விருப்பத்திற்கு நீ நடந்து கொள்ளக்கூடாதா ? நாளை விடிந்தால் தீபா வளி! ஒரு நாளும் வராத என் நண்பன் இம் முறை தன் மனைவியோடு தீபாவளியைக் கொண்டாட நம்மிடம் வந்திருக்கும்போது நீ மட்டும் உன் அப்பா வீட்டுக்குப் போனால் எங்களைப் பற்றி அவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள் என்பதைச் சிறி தாவது சிந்தித்துப் பார். என் கௌர வத்தையாவது காப்பாற்று. உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன்."

பக்கத்து அறையில் பொய்த் தூக் கத்தில் புரண்டு கொண்டிருந்த என் செவி களில் நண்பன் சதாசிவத்தின் கெஞ்சும் குரல் தெளிவாகக் கேட்டது.

பக்கத்தில் புரண்டு மனைவியைப் பார்த்தேன். அவள் நிம்மதியாகத் தூங் கிக் கொண்டிருந்தாள். கலைந்திருந்த போர்வையை இழுத்து அவளை மூடிவிட்டு ஓசைப்படாமற் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றேன்.

"கௌரவம் ! கௌரவம் !! கௌர வம்...! எதற்கெடுத்தாலும் சதா இது தானா உங்கள் வாயில் ! உங்கள் கௌர வத்தைக் காப்பாற்றக் கூடிய பெண்ணைப் பார்த்து முடித்திருப்பதுதானே ? என் கௌரவம் மட்டும் உங்களை என் கணவர் என்று சொல்வதாற் பாதிக்கப்படவில்லை யாக்கும்?"

வெளியே அடியெடுத்து வைத்த என்னை இந்த வார்த்தைகள் திடுக்கிட வைத்தன. என் நண்பன் சதா மிகவும் சந்தோஷமாகக் குடும்பம் நடத்துகிறான் என்றுதான் சில விநாடிகளுக்கு முன்னர் கூட நினைத்துக் கொண்டிருந்தேன்.

ஆனால்—

ஆமாம், அவனோடு ஒப்பிட்டு நோக் கும் போது என் வாழ்க்கை எவ்வளவோ தேவலைப் போல இருந்தது.

என் நண்பனுக்கும் அவன் அருமை மனைவிக்கும் இடையே நடந்த சம்பா ஷணை மங்கிக்கிடந்த என் சிந்தனைக்கு மெருகு கொடுத்தது.

என் திருமணத்திற்குப்பின் நாளை வருவது எனக்கு இரண்டாவது தீபா வளி. முதலாவது தீபாவளியின் போது தான் அவளைத் தற்செயலாகக் கோயிலில்

கண்டேன். அடுத்த தீபாவளி வருவதற்குள் எங்கள் நட்பு வளர்ந்து நாங்கள் கணவன் மனைவியானோம்.

அதற்கடுத்த தீபாவளியும் வந்தது. ஆமாம்! வந்தது. மகிழ்ச்சி பொங்கிப் பொலிய வேண்டிய எங்கள் வாழ்வில் அணைபோட முடியாத கண்ணீர் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது.

நாளை விடிந்தால் எங்கள் மணவாழ்வின் இரண்டாவது தீபாவளி. வேதனைக் குரலின் இரண்டாவது அத்தியாயத்தின் ஆரம்ப விழா.

இந்த நாளை மறப்பதற்காக தீபாவளியைப் பற்றியே பேசாத வேறு எந்த ஊருக்காவது இரண்டு நாட்கள் சென்று தங்கியிருக்கலாம் என்று மனைவியிடம் கூறினேன்.

"வேண்டாம்! இம்முறை கட்டாயம் எங்காவது நண்பர்களோடு சேர்ந்து தீபாவளியைக் கொண்டாடியே தீரவேண்டும்" என அடம்பிடித்த மனைவியின்முன் என் ஆணை செல்லவில்லை.

அதன்பின்புதான் நண்பன் சதாசிவத்தின் வீட்டிற்குச் செல்வதாகத் தீர்மானித்து வந்தும் விட்டோம்.

" தங்கம் கொஞ்சம் மெதுவாகப் பேசு. நண்பன் மூர்த்தியின் காதில் தற்செயலாக இவ்வார்த்தைகள் விழுந்தால் அவன் மிகவும் மனம் வருந்துவான்!"

சதாவின் குரல் மீண்டும் கெஞ்சியது.

" உங்கள் நண்பர் காதில் பட்டால் எனக்கென்னவாம் ......?"

பெண்களுக்கே உரித்தான விட்டுக் கொடுக்கா மனப்பான்மையோடு வாதித்தாள் அவன் மனைவி.

" ஆமாம்! மூர்த்திக்கு விஷயம் தெரியவந்தால் உனக்கொன்றுமில்லைத்தான். ஆனால் எனக்கு......? என்னை நினைத்துப் பரிதாபப்படுவான். அவனுக் கென்ன? அதிர்ஷ்டக்காரன்? அன்பான மனைவி. அமைதியான வாழ்க்கை குழந்தையில்லையே என்று ஒரேயொரு குறை! அது கூட அவன் நல்லமனதுக்கு நிறைவேறிவிடும்."

நண்பன் என்னைப்பற்றிக் கூறியவார்த்தைகள் அத்தனையும் கொண்டு என் உள்ளச் சிலந்தி ஒரு வலையே பின்னிவிட்டது.

"இல்லை சதா! இல்லை!! நீ நினைப்பதுபோல எதுவும் நடந்துவிடமுடியாது. மனம் போல் மனைவி. மறுக்கவில்லை. ஆனால் அவள் தூரத்து ரோஜா என்பது உனக்குத் தெரியுமா? அவளை நான் தொட முடியாது சதா! தொடமுடியாது. !குழந்தைச் செல்வம்! அது இனி எங்கள் வாழ்வில் என்றுமே அடையமுடியாத ஒரு எட்டாப் பொருள். இந்த இரகசியம் உனக்குத் தெரியவேண்டாம்! தெரியவேண்டாம்!!"

என் உள்ளச் சிலந்தி பின்னிய வலையில் அகப்பட்ட என் எண்ணச் சுழல் நெஞ்சத்திலே தேக்கி வைத்திருந்த துன்ப வெள்ளம் அனைத்தையும் விம்மலும் விக்கலுமாகப் பிரவாக மெடுக்க வைத்தது. அதற்கு அணைபோட எவ்வளவோ முயன்றும் முடியாமல் வாய்க்குள் கையைத் திணித்துக் கொண்டு கதறியழுதேன்.

எவ்வளவு நேரம் அழுதேனோ எனக்கே தெரியாது. ஒரு இதமான கரம் பின்னால் இருந்து என் கண்ணீரைத் துடைத்தபோதுதான் என் உணர்வு வரப் பெற்றேன்.

திடுக்கிட்டுத் திரும்பினேன். அவள்! ஆமாம்! அவள்தான் என் மனைவி சீதா.

மிகுந்த சிரமத்துடன் விம்மலை அடக்கிவிட்டு "சீதா" என்றேன்.

"ம்........."என்றுவிட்டு அவள் விம்மத் தொடங்கினாள். அவளைத் தொட்டு

அவள் கண்ணீரைத் துடைத்துத் தேற்ற வேண்டும் என்ற ஆசையிருந்தும் துணிவு பிறக்கவில்லை.

"சீதா! இது என்ன குழந்தை மாதிரி......" என்ற என் மடியில் பல நாட்களுக்கப்புறம் முகம் புதைத்து விம்மினுள் அவள்.

"சீதா! எழுந்திரு. பல மாதங்கள் தாட்பாழ் போட்டு வைத்திருந்த உன் மனக்கதவை ஒரு நொடிப்பொழுதில் தகர்த்து விட எண்ணமா? ம்! எழுந்திரு சீதா." என்மனதைக் கல்லாக்கி விட்டு அவளைத் தேற்றினேன்.

என் சிந்தனை விரிந்தது.

எங்கள் திருமணம் முடிந்து ஐந்தாவது மாதம் ஏதோ உடல் நலக் குறைவால் பிறந்தகம் சென்ற என் மனைவி ஒரு மாதம் படுக்கையாய் இருந்து விட்டாள்.

திரும்பி அவள் என்னிடம் வந்த போது அவள் சொன்ன சேதி என்னைத் திடுக்கிட வைத்தது. இனிமேல் நாங்கள் கணவன் மனைவியாய்க் கலந்து வாழ்ந்தால் அவளுடைய உயிருக்கே ஆபத்தாம். சுருங்கக் கூறின் என் மனைவிக்கு இனித் தாய்மைப் பதவியே கிடையாதாம்!

நான் கற்பனையில் எழுப்பியிருந்த என் வாழ்க்கைக்கோபுரம் இடிந்து, சரிந்து மண்ணோடு மண்ணாகி விட்டது போன்ற ஒரு பிரமை. அன்று முழுவதும் இருவரும் இரத்தக் கண்ணீர் வடித்தோம்.

அதன் பின் அவளை நான் மறந்து கூடத் தீண்டியது கிடையாது. உண்மையான உள்ளன்பிற்கு முன் கேவலம் நிலையில்லாத தன்மையுடைய உடலுறவை நாங்கள் ஒரு துரும்பாகக் கூட மதிக்கவில்லை. அந்த அன்புருவம் உயிரோவியமாக என் முன் நிழலாடினுலே போதும் என்றிருந்தது. அந்தத் திருப்தியோடு வாழ்ந்தேன். 'இல்லை' வாழ்ந்தோம்.

ஆனல், தப்பித் தவறி யார் வீட்டுக் குழந்தையாவது எங்களோடு அன்பாகப் பழக நேர்ந்தால் அந்த உறவு எங்கள் இருவரையும் பாதிக்காமல் இருப்பதே கிடையாது.

இருந்தும் உண்மையான அன்புக்கு முன் உடலுறவு துச்சம் என்பதை நிரூபிக்க நானும் என் மனைவியும் நகமும் சதையும் போல ஒருவர் சுகதுக்கத்தில் ஒருவர்பங்கு கொண்டுவாழ்ந்தோம். எங்கள் வாழ்வில் நிலவிய அந்தப் பெரிய பிளவை வெளியுலகு அறியாமல் வாழ்ந்தோம்.

இனி அவள் அன்புக்கு முன் நான் ஓர் குழந்தை. என் அன்புக்கு முன் அவள் அவள் ஓர் குழந்தை என்ற நிலையில் குழந்தையில்லாக் குறையை நிவர்த்தி செய்தோம்.

குழந்தை......! ஆம்! அந்தச் செல்வம் வேண்டுமானல் என் இல்லறச் செல்வத்தை இழக்கவேண்டும். ஐயோ! அந்த எண்ணமே என்னை மரிக்கச் செய்துவிடும்.

வேண்டாம்! எனக்கு இனி எதுவுமே வேண்டாம். என் அன்புச் செல்வம்! எனக்காக வாழும் உத்தமி......... என்றும் என் கண் முன் வாழ்ந்தால் அதுவே நிறைந்த செல்வம்.

என்னையறியாமல் என் இதய வேதனை பெருமூச்சாக வெளி வந்தது. என் இதயவேதனையை உணர்ந்தோ உணராமலோ என்மார்பில் முகம் புதைத்து விம்மினுள் மனைவி.

அவள் விம்மல் என்னை அதிரவைத்தது. என் உள்ளத்து உணர்ச்சிகளை எல்லாம் பொறுமையோடு கட்டுப்படுத்தி அவளைத் தேற்ற முயன்றேன்.

அவள் என்னை அணைத்திருந்த பிடி இன்னும் இறுகியது. அவள் தன் தளிர்க் கரத்தால் என் முகத்தை வருடி என் உணர்ச்சிக்கு உரமூட்டினுள்.

நான் அவளைக் கடுமையாக முறைத்துப் பார்த்தேன்.

"என்னை மன்னித்து விடுங்கள்!" என்று என் முகத்தோடு முகம் பதித்தாள் அவள்.

"சீதா!" என்று என் ஆத்திரந்தீரக் கத்தினேன் நான்.

"ஆத்திரப்படாதீர்கள்! முதலில் என்னை மன்னித்தேன் என்று ஒரு வார்த்தை, ஒரேயொரு வார்த்தை கூறுங்கள் போதும்" என்று குழைந்தாள் அவள்.

"எதற்காகவாம்" என்று முறைத்தேன் நான்.

"நான் இத்தனை நாளும் உங்களிடம் கூறியதெல்லாம் பொய்" என்றாள் அவள்.

நான் பேச்சு மூச்சற்றுத் திகைத்து நின்றேன்

அவளே பேச்சை மீண்டுந் தொடர்ந்தாள்.

"உள்ளதை உள்ளபடியே கூறுகிறேன். முடிந்தால் எனனை மன்னித்து விடுங்கள். இல்லையென்றால் நீங்கள் அளிக்கும் தண்டனை எதுவாக இருந்தாலும் ஏற்க நான் ஆயத்தமாக இருக்கிறேன்.

நான் நோய்வாய்ப்பட்டுப் பிறந்தகம் சென்றபோது என் ஜாதகத்தை அப்பா ஒரு பிரபல ஜோதிடரிடம் காட்டினார்.

என் ஜாதகத்தை அலசி ஆராய்ந்த அந்த ஜோதிடர் எனக்கு ஒரு திடுக்கிடும் செய்தியைத் தெரிவித்தார். அதாவது அன்றைய நாளிலிருந்து ஒரு வருடத்துக்குள் நான் தாய்மைப் பேறடைந்தால் உங்களை இழக்கவேண்டி ஏற்படும் என்றார்.

அந்தச் செய்தி என் தலையில் இடி விழுந்தது போன்ற அதிர்ச்சியை உண்டாக்கியது. இந்த இக்கட்டான நிலையைத் தவிர்ப்பதற்கு எவ்வளவோ யோசித்தேன். கடைசியில் எனக்கு ஏற்பட்டிருந்த உடல் நலக்குறைவைச் சாதகமாக்கி உங்களிடம் ஒரு முழுப் பொய்யைக் கூறினேன். என்னை மன்னித்து விடுங்கள்" என்றது அந்தப் பெண் தெய்வம்.

நான் சிந்தித்தேன். கணவனின் உணர்ச்சிகளையும் ஆசைகளையும் துச்சமாகக் கருதித் தன் உணர்ச்சிக்கும் ஆசைக்கும் முதலிடம் கொடுக்கும் பெண் அங்கே. தன் உணர்ச்சிகளையும் ஆசைகளையும் அடக்கி கணவனின் சுகத்துக்கும் உயிருக்கும் முதலிடம் கொடுக்கும் பெண் இங்கே!

வேடிக்கையான உலகத்தின் போக்கே விசித்திரமாகப் பட்டது எனக்கு. பேசச் சக்தியற்றவனாய் என் மனைவியை ஆச்சரியத்தோடு பார்த்தேன்.

அவள் என்னையே வைத்தகண் வாங்காமற் பார்த்து நின்றாள்.

"இத்தனை நாளும் எவ்வளவோ பொறுமையோடு காப்பாற்றி வந்த உன் உணர்ச்சியை இன்று மட்டும் ஏன் கட்டவிழ்த்து விட்டாய்" என்றேன். என்னை மிஞ்சிவந்த ஆத்திரத்தை அடக்க முடியாமல்.

'களுக்' என்று சிரித்த என் மனைவி என் கழுத்தைத் தன் இரு கரங்களாலும் அணைத்தபடி "அந்த ஜோதிடர் கூறிய தவணை நேற்றுடன் முடிந்து விட்டதாக்கும்...!" என்று கூறிவிட்டு நாணத்தால் முகம் குங்குமச் சிவப்பேற என் மார் பக்கத்தில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"சதா! என்னயிருந்தாலும் உன்னை விட நான் அதிர்ஷடக்காரன்தான்! என்னைப் பொறுத்த வரையில் உன் வார்த்தை இல்லை உன் ஆசி பலித்துவிடும். ஆனல் உன் வாழ்க்கை....? உனக்காக நான் நிரம்பப் பரிதாபப்படுகிறேன் நண்பா! 'ஆவதும் பெண்ணுல், அழிவதும் பெண்ணுல்' என்பதுஎத்தனைஉண்மையாய்விட்டது.போகட்டும்! உன் மனைவி திருந்தி உன்வாழ்க்கை வளம்பெற இறைவனை வேண்டுதல் செய்கிறேன்" என்று என் உள்ளம் பேச என்னை அணைத்திருந்த மனைவியின் கரங்களை அன்பொழுகப் பற்றினேன். பக்கத்தில் இருந்து ஒலித்த மணி எங்களை ஆசீர்வதித்தது.

◉

# நகைச் சுவை

—விடிவெள்ளி—

நகைப்புக்கிடமான பல விஷயங்களை ஒன்றுபடுத்தி நகைச்சுவை ததும்பக் குரல் கொடுக்கிறுர் 'சமூகத் தொண்டன்' ஆசிரியரான இக்கவிஞர்.

வேலியின் எல்லைகள் மாற்றிடுவோர் பிறர்
வேதனை கொள்ள நிலம் பறிப்போர்
கோலியே ஆண்டுக் கொருசாறுய் காணி
கொள்ளும் கொடு வழி கற்றவர்கள்

இந்திய மண்ணில் உருவி வரும்—சீனத்
தெல்லை பிழை சரி பேசுவது
மந்தமது வெறியுற்ற குடியர்
மது விலக்காற்றுதல் போன்றதுவே

நாட்டில் ஒழுக்கநிலை கற்பு மாய்ந்தது
நாசம் விளைந்த தென்றேசுபவர்
காட்டியுறுப்பு தெரியும் உடையால்
கவரமுயலல் நகைப்பலவோ

கண்ணீர் வடித்திரு கைமுகிழ்த்தன்பில்
கடவுளடி பணிந் தேத்துபவர்
நண்ணியே இல்லில் அனைத்தும் மறந்தொரு
நாஸ்திகராதல் நகைப்பலவோ

பிஞ்சுக் குழந்தைகட் கன்பு வழிந்திடப்
பேசும் கலைகள் பயிற்ற வந்து
நஞ்சுப் பிரம்பினைக் காட்டிச் சிருரை
நடுங்கிடச் செய்தல் நகைப்பலவோ

பண்பும் ஒழுக்கமும் உள்ளத் தெளிவுமிப்
பாரில் வளர்த்திடவே எழுதும்
வண்ணக்கலை யெழுத்தாளர் இழிந்திடு
வாழ்வுநடத்தில் நகைப்பலவோ.

மேய இரக்கமன் புள்ளமும் ஈகையும்
மேடையில் பேசி விளக்குபவர்
நாயினை ஏவியவ்வேழைக் கிழவன்
நடுங்கத்துரத்தல் நகைப்பலவோ.

பாழ்செயும் குண்டு நஞ்சாயுதம் ஏவியிப்
பாரை யழித்தல் கொடுமையென்போர்
கோள்சொலி வஞ்சனையால் நண்பர் அன்பினைக்
கொன்று திரிதல் நகைப்பலவோ.

ஒழுக்கச் சிதைவுறும் காமவெறியில்
உறுசெயல் சீயென் றுரைப்பவர்கள்
கழுத்தைச் சுழற்றியக் கன்னியர் மேலிரு
கண்ணைச் செலுத்தல் நகைப்பலவோ.

தற்கொலை செய்யும் தனையரை வைகின்ற
தந்தையர் தாமச் சிறார் பயிலப்
பற்பல தீயநெறி புரிந்தேயவர்
பாழ்படச் செய்தல் நகைப்பலவோ.

பொய்யை வெறுத்ததை நீக்கத் துடிப்பவர்
பொன்னகை பூந்து கில் என்றிரவல்
தெய்வசமுகத்தும் தேடியணியும்
சிறுமை நினைக்கில் நகைப்பலவோ

நல்ல பழமைத் தமிழ்ப்பண்பின் சால்பினை
நாடெங்கும் போற்றுவோர் தம்முடலில்
இல்லாதனபல உள்ளதாய்க் காட்டிடும்
இழிசெயல் காணில் நகைப்பலவோ.

மன்னுயிர் யாவரும் சோதரர் தெய்வமெம்
மாறாத தந்தையென் றோதுபவர்
ஒன்னார் அழிந்து சிதைந்திட வேண்டுமென்
றுள்ளி முயலல் நகைப்பலவோ.

உங்கள் திருப்தியே.... எங்கள் திருப்தி !

மட்டக்களப்பிலே புகழ்பெற்ற
புத்தகசாலை எமது ஸ்தாபனமே !

❋ பாடசாலைப் புத்தகங்கள் ❋ பரிசளிப்பு நாவல்கள்
❋ தமிழ் ஆங்கில வார மாத சஞ்சிகைகள்
❋ பாடசாலை உபகரணங்கள் ❋ சாய்ப்புச் சாமான்கள்
❋ மற்றும் சகலவித தேவைகளுக்கும்

இன்றே விஜயஞ் செய்யுங்கள்

# கலாநிதி புத்தகசாலை

23, மெயின் வீதி, மட்டக்களப்பு.
கிளை : 50, மெயின் வீதி, கல்முனை, டெலி. இல. 406

---

For all your Requirements
in

◉ TIN FOOD ◉ CURRY STUFF
◉ LOW COUNTRY VEGE TABLES
◉ UP COUNTRY VEGETABLES

*Please Contact*

# DHARMADASA BROTHERS

Trinco Road, Batticaloa




அப்போது நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். கல்லூரிக் காலத்தில் நான் டென்னிஸ் ஆட்டத்திலே மிகவும் நாட்டங்கொண்டிருந்தேன். ஓய்வு நேரத்தின் பொழுதுபோக்காக இந்த விளையாட்டை விளையாடுவதில் மிகவும் மகிழ்ச்சியடைந்து வந்தேன். பலருடன் பந்தயத்துக்கு ஆடி பரிசில்களும் பெற்றிருக்கிறேன். இத்தனை நன்மைகளையும் செய்து என்னை மகிழ்வித்த டென்னிஸ் விளையாட்டு ஓர் இளைஞனின் கன்னத்தை அதுவும் என் எதிர்காலத்துக் காதலனின் கன்னத்தைப் பதம்பார்க்குமென்று நான் எண்ணவேயில்லை. நான் டென்னிஸ் ஆடும்போது அவர் விளையாட்டை ரசித்துக் கொண்டு வந்தார். நான் அடித்த வேகமான பந்து பறந்து வந்து அவரின் கன்னத்தைப் பதம் பார்த்துவிட்டது. அவருக்கு எப்படி ஆத்திரம் வந்திருக்கும்? என்பதை எண்ணிய எனக்கு இதயமே வெடித்துவிடும் போல இருந்தது. எனினும் சமாளித்துக் கொண்டேன்.

ஆட்டம் முடிந்துவிட்டதும் எனக்குப் பரிசுச் சின்னம் கிடைத்தது. மக்களின் ஆரவாரம் என்னை மெய்மறக்கச் செய்த அதே நேரத்தில் அந்த வாலிபரின் கன்னத்தில் பந்தடித்ததை யெண்ணி மிகவும் வருத்தப்பட்டேன். பரிசுச் சின்னத்தைப் பெற்றுக் கொண்டு நான் திரும்பினேன். அந்த வாலிபர் என் பக்கமாக வருவதை நான் கண்டேன். நெஞ்சு திக்கென்றது எனக்கு. அத்தனை பெரிய கூட்டத்திலே ஆத்திரத்தில் என்னை அவர் தாறுமாறாகப் பேசிவிட்டால் என்ன செய்வதென்று பயம் எனக்கு. நான் நினைத்தது போல அவரொன்றும் அப்படிப் பேசவில்லை. பதிலுக்கு என்னைப் பாராட்டினார். நான் "எக்ஸ்கியூஸ் மீ" என்று அவரிடம் மன்னிப்புக் கேட்டேன். "எதற்கு?" என்றார் அவர்.

"சற்று முன்னதாக உங்கள் கன்னத்தில் பந்தால் அடித்ததற்கு" என்று நாணத்துடன் குனிந்து, குனிந்து கூறினேன். அவர் சிரித்தார். நான்....... இதற்கிடையில் எங்களின் இரண்டு ஜோடிக் கண்களும் ஒன்றையொன்று கலந்து உறவாடிக் கொண்டன. இதுவரை என் வாழ்க்கையில் ஏற்படாத ஒரு உணர்வு அப்பொழுது ஏற்பட்டது எனக்கு. பிரியாமல் பிரிந்து சென்றேன்.

அன்றைய தினம் அவரின் கன்னத்திலே அடித்த பந்தை மனதாரத் திட்டிய நான் அதே பந்தை என் வாயார வாழ்த்தத் தொடங்கிவிட்டேன். என் மனதுக்குப் பொருத்தமான காதலரைப் பொறுக்கி யெடுத்துத் தந்த பந்தை நான் வாழ்த்தாமல் இருக்க முடியுமா? என் அப்பா எனக்கு வாங்கிக் கொடுத்த புதுக் காரில் ஒரு நாள் நான் போயிருந்த போது அவர் என்னைச் சந்தித்தார். அங்கே எங்கள் மனங்களிரண்டும் சந்தித்துக் கொண்டன. இதமான இன்பமொழிகளால் இனிக்க இனிக்கப் பேசினர். எனது மனதைப் பறிகொடுத்து அவரை வாழ்த்தி விடைபெற்றேன். எங்களின் காதல் வளர்ந்தது.

நெடுகிலும் இப்படிக் காதலித்துக் கொண்டிருக்க முடியுமா? ஊரார்தான் சும்மா இருப்பார்களா? காதல் காதலாக இருந்தாலும் பண்பாட்டுக்கு மாருமல் கண்ணியமாக வாழவேண்டுமல்லவா? எனவேதான் எங்கள் திருமணத்தை நடத்தி முடிக்க எத்தனித்தோம். அப்பாவின் சம்மதத்தைக் கேட்டேன். அவர் சீறி விழுந்தார். "இத்தனை செல்வமாக உன்னை வளர்த்ததெல்லாம் ஒரு சீ. ஐ. டீக். காரனுக்குக் கட்டிக் கொடுக்கவா? நமது அந்தஸ்தென்ன கௌரவமென்ன" என்று ஆத்திரம் பொங்கச் சீறினர். எனது மனதிலே கட்டியிருந்த காதல் கோட்டை மண்ணிலே சரிந்து விழுவதாக எனக்குப் பட்டது. அழுது அழுது அவரிடம் மன்ருடினேன். ஓரளவுக்கு அவர் மனம் இடங்கொடுத்து விட்டது. எனது காதலரின் அம்மாவின் சம்மதத்தைப் பெறுவதற்காக அப்பாவை அனுப்பி வைத்தேன். ஒரு சுமக்கமுடியாத சுமையை இறக்கி வைத்து விட்ட மாதிரி திருப்தியடைந்தேன். ஆனல் அந்தத் திருப்தி அப்பா திரும்பி வரும்வரைக்கும் தான் இருந்தது. வீட்டுக்கு வந்த அப்பா நெருப்பாகச் சீறி விழுந்தார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. கடைசியிலே தான் தெரிய வந்தது ஒரு திகைப்பூட்டும் செய்தி. இதுவரை என் காதலராக என்னை நேசித்து வந்தவர் என் அப்பாவின் விரோதியின் மகனும். அதற்காக அன்று என் அப்பா அவமானப் பட்டு விட்டாராம். இதை அவர் சொல்லிய போது உலகமெல்லாம் சுற்றியது எனக்கு. கண்டிப்பாக நீ அவனை மறக்கத்தான் வேண்டுமென்று தடையுத்தரவு போட்டு விட்டார் என் அப்பா. காதலின் வேதனையைத் தாங்கமுடியாமல் தவியாய்த் தவித்தேன் நான். எண்ணற்ற சூழ்ச்சிகளை உருவாக்கி எங்களைப் பிரிப்பதற்கு முயற்சி செய்தார் என் அப்பா. இறுதியாக இதயத்தை இரும்பாக்கிக்கொண்டு யாருக்கும் தெரியாமல் என் காதலரின் வீட்டுக்குச் செல்லத் துணிந்தேன். அந்த வேளையிலா பெரியமழையும், பேய்க்காற்றும் வந்து தொலைக்க வேண்டும்.

மழைக்கு ஒதுங்கிக் கொள்வதற்காக பாதையோரத்திலிருந்தகோயிலுக்கு ஓடிச் சென்றேன். அங்கே நான் எதிர் பாராதபடி ஒரு வயதான பெண் மழையில் நனைந்தபடி ஓடி வந்துகொண்டிருந்தாள். மளார்! மளார்! மளார்!!! பக்கத்தில் நின்ற மரமொன்று முறிந்து அவளின் மேல் விழப் போயிற்று. ஒரே பாய்ச்சலில் பாய்ந்து அந்த அம்மாவைப்பிடித்து இழுத்துக் காப்பாற்றி விட்டேன். மழை நீரினல் வடியும் தண்ணீரையும் மிஞ்சி ஆனந்தக் கண்ணீர் அவளின் கண்களிலிருந்து வடிந்தது. "தெய்வம்போல வந்து காத்தாயம்மா." என்று என்னை வாயார வாழ்த்தினர் அந்த அம்மா. நான் பலமுறை மறுத்தும் என்னை அவளின் வீட்டுக்கு அழைத்துச் சென்ருள் அந்த அம்மா. அங்கே போனதும் இன்னு

மொரு அதிர்ச்சி காத்துக்கிடந்தது. அது என்ன தெரியுமா? அந்த அம்மாதான் என் காதலரின் அம்மாவாக இருந்தார். எதிர்பார்த்ததை விட விஷயம் நன்ருகவே முடிந்துவிட்டதை எண்ணி மகிழ்ச்சியடைந்தேன். அடுத்த கணம் அந்தமகிழ்ச்சி மாயமாய் மறையவேண்டியதாயிற்று. அவர்களின் விரோதியின் மகள்தான் நான் என்பதை அறிந்த அவரின் அம்மா என்னை வெளியே போகும்படி விரட்டி விட்டார். கொட்டும் மழையிலே நான் குப்புறத் தள்ளப்பட்டிருந்தேன். முகம், வாய், கண்ணெல்லாம் நிறைய சேறும் சுரியுமாகி விட்டது. விக்கி விக்கி அழுதேன். சில நிமிஷங்கழித்து என்ன ஒரு கரம் தீண்டியது, கண்ணை விழித்துப் பார்த்தேன். அவர் யாருமல்ல என் அன்புக்குரிய காதலர்தான். என்னை அவரின் அம்மா இப்படி விரட்டியதைக் கேட்ட அவர் அம்மா மேல் பாய்ந்து விழுந்தார்.

காதல் பாதை கரடுமுரடானதுதான் என்பதை உணருவது போல அநேக கஷ்டங்கள் வந்து எங்களைப் பிரிக்கப் பார்த்தது. வீட்டை விட்டு நான் ஓடி விட்டேனென்பதை உணர்ந்த அப்பா என்னைத் தேடி வந்துவிட்டார். எது செய்வதென்றே தெரியாமல் நான் தவியாய்த் தவித்தேன். எனினும் மன உறுதி குறையவில்லை. நாங்கள் கடைசியாக எங்கள் மனம்போல இருவரும் தம்பதிகளாகி விட்டோம்.

ஆமாம் இதுவரை என் கணவரின் பெயரை கூறவில்லையென்றுதானே கேட்கிறீர்கள். நம் நாட்டுப் பண்பாடு அப்படித்தானே என்பதற்காக இதனைக் கூருமல் விட்டுவிடவில்லை. அவர் உங்கள் அனைவருக்கும் தெரிந்தவர்தானே. அட அட இன்னும் புரியவில்லையா? உங்களுக்கு. தாய் சொல்லைத் தட்டாதே படத்தை ஞாபகப் படுத்துங்கள் புரிந்துவிடும்.

நான் மேலே கூறியதெல்லாம் சினிமாவில் ஏற்பட்ட காதலைப் பற்றித்தான். எனது நிஜவாழ்க்கையின் காதலைப் பற்றிக் கேட்கிறீர்களா? அவசரம் எதற்கு. அப்படியான சந்தர்ப்பம் வரும்பொழுது தெரிவிக்கிறேன்.

◉

## துண்டாகியும் வாழும் உயிர்கள்

மண்புழுவை இரண்டாக வெட்டிவிட்டால் ஒவ்வொரு துண்டும் தனித்தனிப் புழுக்களாக வளருகின்றன. முதுகெலும்பில்லாத பிராணிகள் நோவை உணர்வதில்லை. நோவென்பது மூளையின் வளர்ச்சியைப் பொறுத்தது. நண்டின் ஒரு உறுப்பு பழுதடைந்தால் அது அவ்வுறுப்பை ஒரு பொருத்தோடு கழற்றி விடுகின்றது. அது தன் ஓட்டை மாற்றிவிடும் காலத்தில் அந்த உறுப்பு வளர்ந்துவிடுகிறது. வயிற்றுப் பாகத்தை இழந்த குளவியும் உணவு உண்ணுகிறது என்பதைக் கேட்கும் போது ஆச்சரியமாயிருக்கிறதல்லவா?

# வாழவேண்டும்

(வாழையூர் அமுதன்)

மிகவும் அண்மையிலே எழுத்துத் துறையில பிரவேசித்திருக்கும் இலக்கிய ஆர்வமுள்ள இளைஞர் இவரது இயற்பெயர் கே. பொன்னுத்துரை என்பது. இவரது கவிதைகள் கிழக்கிலங்கையின் பல கையெழுத்துப் பத்திரிகைகளிலும் 'தேசீய முரசு' பத்திரிகையிலும் வெளிவந்துள்ளன.

முத்தமிழை ஏந்திவரும் கலைத் தருவாய்—நீ
இத்தரணி வாழும் தமிழ்க் கலையளித்தாய்
வித்தகரும் போற்றிடவே புகழெடுத்தாய்—என்றும்
சத்தியத்தைப் போற்றுகின்ற வழி அமைப்பாய்

✿

ஞால மெல்லாம் தமிழ் மணத்தைப் பரப்பவேண்டும்—தமிழ்
ஞானமதைப் பாமரர்க்கும் புகட்ட வேண்டும்
பாலர்களும் பயனடைந்து வாழ வேண்டும்—இதைப்
பார்த்த மனம் கலைக் கனியை ருசிக்க வேண்டும்.

✿

வர்த்தகத்தார் வழங்கி விட்ட தேனமுதே—ஆண்டு
பத்து வரை வாழ்ந்து விட்டாய் தரணியதே
எத்தனையோ சேர்ந்து பல ஆண்டுவரையும்—நீ
எங்களுக்கோர் தீபமென வாழ்ந்திட வேண்டும்.



# மோதல்

—திமிலை மகாலிங்கம்—

◉ காதல் என்பது அத்தனை பயங்கரமானதல்ல. மனிதனின் வாழ்க்கைக்கு மிகவும் தேவைப்பட்டது. ஒரு நல்ல துணை கிடைத்துவிட்டால் நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் ஒரு திருப்தி நிலவும்.

◉ பெண்கள் உணர்ச்சிகளை வெளியிடுவதில் மிகவும் தாமதிப்பவர்கள். உள்ளத்து உணர்ச்சிகளை மனதிலே பூட்டிவைத்து அதைக் காட்டிக் கொள்ளாதவாறு நடப்பதிலே சமர்த்தர்கள். அவர்களின் நடத்தையிலிருந்து அவர்களின் மனநிலையை உணர்ந்து கொள்வதுதான் ஆண்களுக்கு இருக்கவேண்டிய முக்கிய ஆற்றல்.

"உங்களுடைய போக்கு ஒரு புதிராக இருக்கின்றது மனேகர்". என்றார் டாக்டர். அவர் சாதாரண வைத்தியம் தான் செய்கிறார் என்று நான் இதுவரை நினைத்துக்கொண்டிருந்த தெல்லாவற்றையும் மாற்றியமைத்து விட்டார். அந்தக்கேள்வியில். டாக்டர் எனக்கு ஒரு டாக்டராக அறிமுகமாகிக் கொண்டவர்தான். என்றாலும் நாளடைவில் ஒரு சாதாரண நண்பராக மாறிவிட்டார். கழுத்திலே போட்டுக் கொள்ளும் "ஸ்ரெதஸ்கோப்பை"க் கழட்டி எறிந்து விட்டால் அவரும் என்னைப் போன்ற மனிதன்தானே.

"என்னுடைய போக்கொன்றும் அப்படிப் புதியதில்லை டாக்டர். எனக்கு இந்த நிலையிலே அந்த அவசியம் ஏற்படவில்லை. அவ்வளவுதான்" என்று சுருக்கமாக விஷயத்தை அமுக்கப் பார்த்தேன். விட்டால் தானே அந்த டாக்டர்.

"சீச்சீ ! இதென்ன மனேகர். ஒரு இளைஞன் ஒரு யுவதியை ஒரு துணைக்குத் தேர்ந்தெடுப்பதற்கு என்ன அவசியம் வேண்டிக் கிடக்கிறது. ஆணோ பெண்ணோ உனக்கு உதவும் போது நீ வேண்டாமென்று சொல்லப் போகிறாய். நான் கருதுவது துணையைத்தானே. தவிர வேறெதுவும் இல்லை" என்று தண்ணீரில் மூழ்கிப்போன ரப்பர் உருண்டையை மேலே பிடித்துத் தூக்கி விட்டார் டாக்டர் ஸ்ரீதரன். இதற்கெல்லாம் நான் அவரிடம் போய் இருந்தது என்னுடைய உடல் வருத்தம் காரணமாக இல்லை. எனது நண்பன் ஒருவனுக்காக வைத்திய அத்தாட்சிப் பத்திரம் வாங்கி வரவே அவரிடம் போயிருந்தேன், எனக்கு இத்தனை தூரம் சம்சார சாகரத்தைப் பற்றி காலாட்சேபம் செய்யும் டாக்டர் ஸ்ரீதரன் கூட ஒரு ஒண்டிக் கட்டைதான் என்பதை மறந்து கொண்டா இவர் பேசுகிறார். "ஏன் டாக்டர் ஸ்ரீதரன் நீங்கள் கூட ஒண்டியாகத்தானே இருக்கிறீர்கள்". கேள்வியைத் திருப்பி அவர் பக்கமே விட்டேன்.

"அப்படித்தான் இருந்தேன் மனேகரன். ஆனால் நெடுநாளைக்கு அப்படி இருந்து விடமாட்டேன்.

"ஓகோ அப்படியானல் விரைவிலேயே ஒரு பெண்ணின் கையைப் பிடித்துவிடப் போகிறீர்கள்; அப்படித்தானே!"

"அதை இன்னுமேன் உடைத்துச் சொல்லவேண்டும். என் பேச்சில் இருந்தே புரிந்துகொள்ள முடியாதா என்ன" சிரித்துக் கொண்டு அவர் சொல்லும்போது முன் நெற்றியில் விழுந்து கிடந்த சுருண்ட கேசம் இரண்டு மூன்று தடவை இடமும் வலமுமாக உருண்டு ஓய்ந்தது.

"அப்படியானல் எனது நல்லாசிகள் டாக்டர்" என்று கூறிக்கொண்டே எழுந்து வந்துவிட்டேன்.

''காதல் என்பது அத்தனை பயங்கரமானதல்ல மனிதனின் வாழ்வுக்கு மிகவும் தேவைப் பட்டது. ஒரு நல்ல துணை கிடைத்து விட்டால் நாம் செய்யும் செயல் அத்தனையிலும் ஒரு திருப்தி நிலவும். ஏன் உளநூல் ஆராய்ச்சியாளர்கள் கூட இரு உள்ளங்கள் ஒன்றுக்கொன்று ஆதரவாய் இருப்பதால் வாழ்கை மிகவும் சோபிக்கிறது என்றுதானே கூறியிருக்கிறார்கள். ஏன் சமீப காலத்திலே அமெரிக்க டாக்டர் ஒருவர் செய்த ஆராய்ச்சியின் படி மணம் முடித்துக் கொண்டவர்கள்தான் அதிக நாளைக்கு வாழ்கிறார்கள் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் இருக்கையில் நீ ஏன் இன்னும் பிரமச்சாரியாக இருக்க விரும்புகிறாய் மனோகரன்?''

''நீங்கள் வாழ்க்கையின் சுவாரஸ்சமான பகுதியைப் பற்றிக் கதைக்கிறீர்கள் டாக்டர். சம்சார பந்தத்தில் கட்டுண்டவர்கள் எத்தனையோ பேர் தம் மண்டையை மரத்துடன் மோதிக்கொண்டு அழுகிறார்கள். என்பது உங்களுக்குத் தெரியாதா?''

''நீ வாழ்க்கையின் சுவாரஸ்ச மற்ற பகுதியைப் பற்றிக் கதைக்கிறாய். சுவாரஸ்சமான பகுதிகள் பல இருக்கையில் அந்தப் பகுதியை மாத்திரம் ஏன் எடுத்துக் கதைக்க வேண்டும். மனப் பொருத்தம் சரியாக அமையாததுதான் அந்த மண்டையடிப்புக்குக் காரணம். நான் என் மனப்பொருத்தம் இல்லாத இடத்திலே மணம் முடிக்கச் சொன்னேனா?

டாக்டர் ஸ்ரீதரனுடன் நான் நடத்திய சம்பாஷணையை என் மனம் அசைபோட்டுக் கொண்டது. சும்மா இருநது பழக்கமில்லாத குரங்கு அது. தாவித்தாவி எதிலேயோ பாயவில்லையென்றால் அதற்குத் திருப்தியே கிடையாது. சபிக்கிறேன் சபிக்கிறேன் அது சும்மா இருக்கமாட்டாமல் தொந்தரவைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறது.

நெற்றிக்கு முன்பாகப் படர்ந்திருந்த வெளிச்சத்தில் ஒரு திடீர் மாற்றம்! பாதி வெளிச்சம் மறைந்து விட்டது. பதிலுக்கு ஒரு உருவத்தின் நிழல் அசைந்தும் அசையாது ஆறுதலான விசையிலே மெள்ள வருவதுபோன்ற உணர்வு. தலையைத் தூக்கிப் பார்த்தேன். அது ஒரு மனித உருவந்தான். கட்டுக் குலையாத கன்னிப் பருவம். கண்களிலே ஒருவித மருட்சி நிலை. கைகளிலே பளிச்சிடும் வளையல்கள், எடுப்பான சாரி. அதற்கேற்ற மேற்சட்டை. முன்பு எங்கேயோ பார்த்த மாதிரியான பிரேமை தட்டுப் படுகிறது. அதையடுத்து அவள் பக்கத்து தெருவில் உள்ள ஒருத்தரின் மகள் என்பதும் தெரிந்து விடுகிறது. மின் வெட்டும் நேரத்திலே நிகழ்ந்தது இந்த அடையாளம் காணும் நிகழ்ச்சி.

அவள் வாயால் பேசவில்லை. ஆனால் அவளின் கண்களைப் பார்த்தால் ஏதோ பேசத் துடிக்கிறாள் என்று தெரிந்தது.

''ஆமாம் உங்களுக்கு'' என்ற வார்த்தைகளைத் துவங்கி விட்டேன்.

ஆண்களுடன் அட்டகாசம் செய்யும் படபடத்த நோக்குக் கூடப் பெண்களிடம் பேசும்போது தயங்கி விடுகிறதே. அதை என்னால் தவிர்க்க முடியவில்லை.

''நீங்கள் தானே மனோகர் என்பவர்?

''ஆம், நான் தான்.''

''சுங்க இலாகாவில் தானே வேலை பாாக்கிறீர்கள்''

''ஆமாம், எதற்காகக் கேட்டீர்கள்? என்னைப்பற்றி இந்த விபரங்களை எல்லாம் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்.'' எனக்கு வந்த ஆச்சரியத்தை என்னால் கட்டுப்படுத்தி வைக்க முடியவில்லை. என்னை நன்கு தெரிந்து வைத்துக் கொண்டு மீண்டும் ஏன் அதைக் கேட்கிறாள் என்பதை எண்ணும் போது ஆச்சரியம், இன்னும் பன்மடங்காகியது.

''இல்லை உங்களிடம் பாரதி கவிதைகள் என்ற புத்தகம் இருக்கின்றதல்லவா?''

''ஆமாம் இருக்கிறதே.''

என்ன ஒவ்வொன்றாக இவள் கேட்கும் கேள்விகள் எல்லாமே சரியான கேள்விகளாக இருக்கின்றவே. நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டுதான் கேட்டுத் தொலைக்கிறாள். என்னிடம் பாரதி பாடல் இருப்பது தெரிந்தால் நேரடியாக விடயத்தில் இறங்குவதுதானே. சுற்றி வளைத்து ஆலாபனை செய்கிறாளே. வழக்கமான பரம்பரைப் பழக்

கம் விட்டுப் போகவில்லை என்று அவளைக் கடிந்து கொண்டது என் மனம்.

''அதைக் கொஞ்சம் எனக்குத் தருவீர்களா? இரண்டு தினங்களில் திருப்பித் தந்து விடுகிறேன்.''

இது ஒரு கேள்வியா? இந்தக் கேள்விக்குத்தான் தேவை இருக்கிறதா? அடுத்த விநாடியே எழுந்து சென்று அவள் கேட்ட பாரதி பாடலைக் கொண்டு வந்து கொடுத்தேன். முல்லைப் பற்கள் இதழ் இடுக்குகளில் பளிச்சிட அவள் அள்ளிச் சொரிந்து நின்ற அழகு! அப்பப்பா, அவள் அப்படியே இன்னும் ஒரு விநாடி நின்றிருக்கக்கூடாதா?

''தங் யூ'' ஆகா ஒரு கன்னிப் பெண் ஆங்கில வார்த்தைகளை இத்தனை குழைவாகப் பேசுவதிலேதான் எத்தனை இன்பம். ''பரவாயில்லை'' என்று இரண்டு அசட்டுச் சிரிப் பொலியை உதிர்த்து விட்டு அவளின் முகத்தைப் பார்த்தேன்,

''படக் படக்.'' அவள் பல்லை நெறு நெறு வென்று கடித்த ஓசையொலியல்ல, இளமைப் பூரிப்பில் கிழம்பியடிக்கும் அதரத்தின் துடிப்பொலி அது. அவள் மெல்லத் திரும்பி நடத்தாள். அதற்கிடையில் ஏதோ என் நெஞ்சத்தில் சரக் கென்று தைத்தது. ஆமாம், நேற்றைய தினம் நண்பனொருவனிடமிருந்து வந்த பத்து ரூபாய் மணியோடர் அந்தப் புத்தகத்துக்குள் அல்லவா? இருக்கிறது. சேச்சே ஒரு பெண் புத்தகம் கேட்டாள் என்றால் இத்தனை அஜாக்கிரதையாகவா தூக்கிக் கொடுத்து விடுவது என்னை நானே கடிந்து கொண்டேன். இதற்குள் அவள் எட்டு அல்லது ஒன்பது எட்டுக்கள் வைத்திருப்பாள்.

''உங்களைத்தான்'' என் குரல் அவளின் காதுகளில் முட்டி விட்டது. திரும்பிப் பார்த்தாள்.

''என்னையா கூப்பிட்டீர்கள்?''

''ஆமாம் அந்தப் புத்தகத்தின் உள்ளே''

''ஏதாவது அந்தரங்கக் கடிதமா?''

''இல்லையில்லை ஒரு மணியோடரை வைத்து விட்டேன் அதுதான்''

''இதுதானா?'' அவளே புத்தகத்தைத் திறந்து எடுத்துக் கொடுத்தாள். அப்பொழுது கூட அவள் கண்கள் படபட வெனத் துடித்துக் கொண்டன,

''மிகவும் நன்றி போய்வாருங்கள்.''

''சரி'' என்ற சொல்லைத் தொடர்ந்து ஒரு சிரிப்பு. அதைத் தொடர்ந்து...அவள் அங்கே நிற்கவில்லை, நடந்து விட்டாள்.

சற்று முன்னாடி வந்தவள் புத்தகத்தை மாத்திரம்தான் வாங்கிக் கொண்டு சென்றாள் என்பதில் எனக்குத் துளி கூடச் சந்தேகமில்லை. ஆனால் அவள் போனதைத் தொடர்ந்து இன்னும் எதையோ அவள் எடுத்துச் சென்று விட்டாள் என்றதை என்னால் எண்ண முடிந்தது தான் எனக்கு ஏன் என்று விளங்கவில்லை.

அமைதி! அமைதி!! வாய்விட்டுக் கத்தியுங் கூட அங்கே அமைதியைக் காணவில்லை. பதிலுக்கு குழப்பம்! குழப்பம்!! குழப்பம்!!! என்ற வார்த்தைகள் எதிரொலித்தன.

அவள் என்ன செய்தாள்?

அவள் எதை எடுத்துச் சென்றாள்?

எனக்கு ஏன் அமைதியில்லை?

இந்த மூன்று கேள்விகட்கும் பதில் கிடைக்கவில்லை. நான் கடைசியாக எழுதிய சோதனைகளிலே கூட இப்படி ஒரு கேள்வி வரவில்லை. மண்டையை வருடிக்கொண்டே இருந்து விட்டேன். சில மணி நேரங்களுக்கு முன் டாக்டர் ஸ்ரீதரன் பேசிய வார்த்தைகள்– ஆலோனைகள் எல்லாம் என்னைச் சுற்றி கலகலவென்று சுழன்றன. குழப்பம்! ஒரே குழப்பம்!''

''என்ன மனோகரன் ஒரே யோசனை? ஏதாவது மனதுக்குள் புகுந்து விட்டதா? அப்போதுதான் அறைக்குள் அடியெடுத்து வைத்துக் கொண்டு கேட்டான் பத்மநாதன். என்னுடன் அந்த அறையிலே இருக்கும் நண்பன் அவன். ஒரு வர்த்தக நிலையத்திலே வேலை பார்ப்பவன். வயதும் குணமும் என்னைப்போலத்தான இருக்கும்.

''ஆமாம், பத்மன் மனதுக்குள் ஏதோ புகுந்து விட்டு வெளிவர முடியாமல் அவஸ்தைப் படுத்துகிறது.'' ஒழிக்காமலேயே உண்மையெல்லாம் அவனிடம் சொல்லி வைத்தேன். என்ன இரகசியமாக இருந்தாலும், நண்பன் ஒருவனிடம் சொல்வது

எவ்வளவோ நல்லது. அதுவும் என்னுடன் அந்த அறையில் இருப்பவனிடம் சொல்வது இன்னமும் சிறந்தது அல்லவா?

என் பேச்சைக் கேட்டதும் யார் அவள் என்று வாயைப் பிழந்து கொள்வான் என்றுதான் நான் நினைத்திருந்தேன். ஆனுல் பத்மநாதனின் கேள்விகள் எனக்குப் பெரிய அதிர்ச்சி வெடிகளாக இருந்தன.

''ஆமாம் மனேகர், அந்த வெண்ணீலப் புடவை கட்டி வந்தவள்தானே. தலைமயிர் நன்ருக வளர்ந்திருக்கும். ஒரு கையிலே கடிகாரம், மற்றக் கையிலே தங்க வளையல்கள் மூன்று. இடது கையிலே ஒரு மெல்லிய மோதிரங்கூடப் போட்டிருப்பாள்.'' அவன் இப்படியே அடுக்கிக்கொண்டு போவதைப் பார்த்தால் முன்னெருநாள் சுகாதார மந்திரியாக இருந்த விமலா விஜயவர்த்தனுவைப் பற்றி புத்தரகித்த தேரோ கூறிய அடையாளமெல்லாம் கூடக்கூறி விடுவான் போலிருந்தது. அவன் அவளைப் பார்த்து அணு அணுவாக ஆராய்ந்து மனதிலே குறிப் பெழுதி வைத்திருந்ததை நானென்ன மூக்குச் சாத்திரமா பார்த்தேன். பேசாமல் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு ''ஆம்'' என்று ஒரு வார்த்தையிலேயே முடித்து விட்டேன்.

''மச்சான், நான் துரதிஷ்டசாலியடா. அவள் என்னைத்தான் தேடிவந்திருக்கிருள். நான் அவளை எத்தனைதரம் குறிவைத்தேன் தெரியுமா? அடிக்கடிக்க அம்மியும் நகரும் என்பது போல''

''நீ இதுவரைக்கும் அவளுக்கு அடித் தாயாக்கும். அவள் படுக்கையைவிட்டு நகர்ந்து உன் அறைவரைக்கும் வந்துவிட்டாள். சும்மா ஏன் வயிற்றெரிச்சலைக் கொட்டுகிருய் பத்மநாதன் உன்னைத்தேடி அவள் வந்ததாவது''

''மனேகர் என்னை இப்படி மட்டந்தட்டாதே. சொல்கிறேன் ஏன் அவள் என்னைத் தேடி வந்தால், அது தகாதா? நீ சொல்வதைப் பார்த்தால் உன்னைத்தான் அவள் தேடிவந்தாள் என்று வாதாடுகிருய் போலிருக்கிறதே''

''இதில் வாதாடுவதற்கு என்ன வேண்டிக்கிடக்கிறது பத்மநாதன். அவள் வந்ததும் என்னைத்தானே விசாரித்தாள். மனேகர் என்பது உங்களைத்தானே என்று என் பெயரைச் சொல்லித்தானே கேட்டாள்.''

''சேச்சே அவள் பெயரைத் தப்பாகச் சொல்லிவிட்டால் போலிருக்கிறது. பத்மநாதன் என்று சொல்வதற்குப் பதிலாக மனேகர் என்று யாரோ உன் பெயரைச் சொல்லித் தொலைக்கிருர்கள்.''

அப்படியானல் சுங்க இலாகாவிலே நான் வேலைசெய்வதைக் கூடவா தப்பாகச் சொல்லிவிட்டாள். விவாதத்தில் சூடேறும் உணர்வு எனது வார்த்தைகளில் துலங்கியதை அவன் நன்ருகக் கவனித்து விட்டான். மேற்கொண்டும் அவன் என்னுடன் வாதிட விரும்பவில்லை போலும். ''இம்'' பெரிய மர்மமாக இருக்கிறதே. எத்தனை தரம் நான் அவளின் முந்தானைச் சேலையைத் தொட்டுப் பார்த்திருக்கிறேன்.

''எங்கே அது வெயிலில் காயும் போதா''

''சும்மா கிண்டல் செய்யாதே மனேகர். நான் அவளுடன் எத்தனை தரம் பஸ்ஸிலே பிரயாணம் செய்திருக்கிறேன். உனக்குத் தெரியுமா''

அவனை மேலும் வருத்தத்துக்குள்ளாக்க நான் விரும்பவில்லை. ஒரு தாய் பிள்ளையாக இரண்டு வருடங்களாக ஒரே அறையில் வசித்துவரும் நாங்கள் கேவலம் ஒரு பெண் விஷயமாக மனஸ்தாபப்பட்டுக் கொள்வதை நான் விரும்பவில்லை. ஆனுலும் மனதிலே ஏற்பட்ட ஒரு இனந்தெரியாத சபல உணர்வையும் என்னுல் அடக்கி ஒடுக்க முடியவில்லை. ஓரளவாக என் மனத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டேன். நமக்குள் ஏன் வீண் குழப்பம். பத்மநாதன் ஒரு நாளைக்கு அவளின் போக்கை விபரமாகத் தெரிந்துகொண்டால் போகிறது'' என்று உடன் பாட்டுக்கு வந்தேன்.

''ஆமாம் மனேகர் சரி பார்ப்போம் நேரம் வராமலா போகும்.'' என்று கூறிக் கொண்டே தன் வேலையைக் கவனிக்கச் சென்று விட்டான் அவன். வேண்டுமென்றே இப்பிரச்சினை யைக் கிளப்பாமலிருந்துங்கூட இப்படியாகி விட்டது பற்றி உள்ளூர எனக்குக் கொஞ்சம் வருத்தம் இருக்கத்தான் செய்தது.

படுக்கை விரிப்பு அதிகமாகச் சிதைந்து கிடந்தால் அது ஞாயிற்றுக்கிழமை யென்

பது அர்த்தமில்லைத்தான். ஆனால் எங்கள் இருவரையும் பொறுத்த மட்டில் அப்படிக் கூறினாலும் ஒன்றும் தப்பில்லை. பின்னேரம் முகங் கைகால்களை அலம்பிக் கொண்டு வந்தேன். பத்மநாதன் இன்னும் தலையைக் கட்டிப்பிடித்துக் கொண்டு ஏதேதோ அதனுடன் குசுகுசுத்துக்கொண்டு இருந்தான். அமைதியான சூழ்நிலை. இன்றைக்கு இவன் இருக்கும்போதே அவள் வந்து விட்டாள். என்றால் உண்மையில் அவளுக்கு யார்மீது அன்பும் அக்கறையும் இருக்கிறதென்பதைத் தெரிந்து கொள்ள முடியுமல்லவா என்று அங்கலாய்த்தேன் நான். என் ஆச்சரியத்தை நானே வியந்து கொள்ளும் அளவுக்கு அவள் அங்கே வந்து விட்டாள்

"மிகவும் நன்றி இந்தாருங்கள்" புத்தகத்தை மேசையில் வைத்துவிட்டு "நான் வருகிறேன்" என்று திரும்பினாள் அவள். எங்கிருந்து வந்ததோ அந்த ஆவல். அவளைச் சும்மா விடாது ஏதாவது கதை கொடுக்க வேண்டும் போலிருந்தது, நாம் கதைகொடுக்காமல் அவர்களாகவே கதைக்கத் தொடங்கிவிட்டால், நாணம், வெட்கம் என்றெல்லாம் பெண்களைப்பற்றி வர்ணிப்பவர்களின் வாய் என்ன ஆவது ?

"ஆமாம் என்ன அவசரமாகப் போகிறீர்கள்"

"இல்லை இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமையல்லவா. பாசிக் குடாக் கடற் கரைச்குப் போகலாமென்று........" அவள் பேச்சை இழுத்து நிறுத்தினாள். அவளின்கடவாய்கூட ஒரு இழுப்பு இழுத்து நின்றது அவளுக்கெப்படித் தெரியும் ?

"இம் சரி சரி நல்லாகப்பொழுது போக வேண்டுமல்லவா" என்றேன்.

"நீங்கள் கூட என்னவாம் சும்மா தானே இருக்கிறீர்கள்..." வார்த்தைகளைப் பேசவில்லை அவள் ஒரே வீச்சாக வீசியெறிந்து விட்டு விறிச்சென்று நடந்து விட்டாள். முன்பக்கமாகக் கொய்து கட்டியிருந்த சேலை பெருவிரலில் கொழுவியதைக் கூட அவள் சட்டை செய்யவில்லை வேடனைக் கண்டு வெருண்ட மானைப்போலத் துள்ளி ஓடிவிட்டாள்.

"அட கும்பகர்ணா" என்று முதுகிலே தட்டித் தலையணையைப் பிடுங்கிவிட்டு விஷயத்தைக் சொன்னபோதுதான் "அட் அநியாயமே" இன்றைக்குக்கூட என்னால் அவளைச் சந்திக் முடியவில்லையே யென்று வாயைப் பிழந்தான் பத்மநாதன்,"

அமைதி தவழும் அந்திநேரம் அவளும் கடற்கரைக்குச் செல்கிறாள், இன்றைக்கே இப்பொழுதே அவளைச் சந்தித்து விட்டால்... சந்தேகம் தீர்ந்துவிடும். இதுவரை சோதனையில் வேதனை தந்த காதல் துளிர் விட்டுப் பிரகாசிக்கும் அதையடுத்து... இப்படிக் கற்பனை பண்ணியிருக்கவேண்டும் அவனுடைய மனம். திடீரென்று எழுந்தான். மனோகர் இப்போதே புறப்பட்டு கடற் கரைக்குப் போவோம்."

விஷயத்தை,

"சீச்சீ பைத்தியம். அவளொருத்தி கடற்கரைக்குப் போகிறாளென்று நாமும் அவளைத் தொடர்வதா ? வேண்டாம் வேண்டாம்."

மனோகர் நீ தான் பைத்தியம் போலிருக்கிறாய், அவளாகவே வந்துதான் கடற் கடற்கரைக்குப் போவதைச் சொல்லி விட்டுப் போகிறாள். அதன் அர்த்தம் என்னவாம் ? நீங்களும் வாருங்கள் என்பது தானே..."

பெண்கள் உணர்ச்சிகளை வெளியிடுவதில் மிகவும் தாமதிப்பவர்கள். உள்ளத்து உணர்ச்சிகளை மனதிலே பூட்டிவைத்து அதைக் காட்டிக் கொள்ளாதவாறு நடப்பதிலே சமர்த்தர்கள். அவர்களின் நடத்தையிலிருந்து அவர்களின் மனநிலையை உணர்ந்து கொள்வதுதான் ஆண்களுக்கு இருக்கவேண்டிய முக்கிய ஆற்றல்.

இந்தக் கருத்தை உணர்வதில் மனோகர் ஒருபடி மேலே சென்று விட்டான் என்று பட்டது எனக்கு. அடுத்த அரைமணி நேரத்துக்குள் இருவரும் கடற்கரையை நோக்கிக் கிழம்பி விட்டோம்,

தேடாததெல்லாம் தெருவிலேயும் கிடைக்கும். ஆனால் தேடிச் செல்லும் பொருள்கள் கிடைப்பது மிகமிகத் துர்லபம். ஆனால் எங்கள் விஷயத்தில் அத்தனை ஏமாற்றம் இடம்பெறவில்லை. நாங்கள் போய் சுமார் பத்து நிமிஷத்தில் அவளைக் கண்டுபிடித்து விட்டோம்.

கன்னிப் பெண்களெல்லாம் துள்ளி ஓடுவார்களோ என்னவோ அவள் துள்ளித் தான் ஓடினாள். எங்களிருவரையும் ஒன்றாகப் பார்த்ததும் அவள் என்ன நினைத்தாளோ? ஒரு பார்வை பார்த்தாள் அப்புறம் தலையைத் தாழ்த்திக் கொண்டாள். ''தனியாகத்தான் வந்தீர்களா'' பத்மநாதனுக்கு முதல் நானே முந்திக்கொண்டு கேட்டேன். அப்படிக் கேட்டதிலே எனக்கொரு திருப்தி, அவனுக்கொரு அதிருப்தி எனினும் சமாளித்துக் கொண்டோம்.

''இல்லை நாங்கள் இருவர் வந்தோம். மன்னியுங்கள் பிறகு சந்திப்போம்.'' எதிர்பாராத விடையுடன், எதிர்பாராத முடிவையும் சொல்லிவிட்டு நடந்தாள் அவள். திரும்பிப் பார்த்துக் கொண்டோம். ஏமாற்றத்தின் தாக்குதலை வேறு விபரிக்கவா வேண்டும்?

அவள் ஏதோ அப்படிக் கேட்டுவிட்டுச் சென்றாலும், அவள் யாருடன் வந்திருக்கிறாள் என்பதை அறியத் துடித்தது என் மனம். பத்மநாதனை அவ்விடத்தே இருக்கச் சொல்லிவிட்டுத் தொடர்ந்து நடந்தேன். கடற்கரையின் ஒரு அமைதியான பகுதி. மணலிலே படர்ந்து கிடக்கும் நொச்சி மரங்களின் ஓரத்திலே அவள் போய் மறைந்து விட்டாள். அவள் போய் மறைந்த இடத்தைத் தொடர்ந்து கவனித்தேன். அவள் ஒரு ஆடவனுடன் பேசிக் கொண்டிருந்தாள். முதுகுப்புறம் மாத்திரமே தெரிந்ததால் அவனை யாரென்று தெரிந்துகொள்ள இயலவில்லை. இயலாத காரியமென்றால் மனம் விட்டா விடுகிறது, மெள்ள, மெள்ள முன்னோக்கிச் சென்ற எனக்குத் திகீரென்றிருந்தது. அங்கு அவளுடன் பேசிக்கொண்டிருந்தது வேறு யாருமல்ல. சில தினங்களுக்கு முன்பு திருமணத்தைப் பற்றி உபதேசம் பண்ணிய அதே டாக்டர்தான். எனக்கு உபதேசித்தவரின் விஷயத்திலே குறுக்கிட்டு மோதிவிட்டு இன்னமும் அந்த இடத்திலே நிற்க முடியுமா என்ன? திடீரென எனது கால்கள் எதிர்த் திசைக்குத் திரும்பி விட்டன.



## புழுக்களின் மண் வேலை

நிலத்திலிருந்து மண்கள் வெளியே கொண்டு வரும் புழுக்கள் சாதாரண வேலைசெய்கிறதென்று நினைத்துக்கொள்கிறோம். ஒரு ஆண்டில் ஒரு ஏக்கர் நிலத்திலே பதினெட்டுத் தொன் மண்ணை வெளியே கொண்டு வருகின்றன இந்தப் புழுக்கள். இதனால் ப்த்து ஆண்டுகளில் இரண்டு அங்குலத்துக்கு மண் உயருகிறது. இதனால் விதைகள் மண்ணால் மூடுண்டு முளைக்கின்றன.

தமிழகத்துப் பத்திரிகைகளால் உணர்ச்சிக் கவிஞன் என்று வர்ணிக்கப் பட்ட கவிஞர் காசி ஆனந்தனின் காதல் உணர்வு தோய்ந்த கவிதைச் சிதறல்கள் இவை.

# காதல் உயிர்

— கவிஞர் கா. சி. ஆனந்தன் —

வெள்ளி நிலாப்பூத்த வேளையில் ஓரிரவு
புள்ளிமான் போலப் புறப்பட்டு துள்ளியே
வந்தாள் ஒருமங்கை வந்தாள் குறும்புமகள்
வந்தவளை வாழ்த்தியது வாய்

❋

ஆளடிக்கும் கண்ணின் அசைவுகளும் தட்டச்சுத்
தாளடிக்கும் கைபோல் தவிப்பொன்று—வாளெடுத்த
போதை இதழின் பொடிச்சிரிப்பும் அத்தனையும்
கோதை புரிந்த குறும்பு!

❋

பார்த்தேன் அவள்பார்த்தாள் பார்த்தவளை நெஞ்சோடு
சேர்த்தால் சிறப்புண்டு செய்வாளா ?—கார்த்திகைப்பூக்
கையிரண்டும் நீளாதா? என்றிருந்த காலத்தில்
மைவிழியால் ஆமென்றாள் மான்!

❋

தூரத்தில் நின்றாள் துவளும் அவளிதழின்
ஈரத்தைப் பார்த்தேன்! எதுசெவ்வேன் ?—நேரத்தை
வீணாக்கி வைத்து விடுவேனா? விட்டாளா?
ஆணாக்கி வைத்தாள் அவள்.

❋

எண்ணம் இணைந்தோம்! இளமைப் பருவத்தை
வண்ணத்தேர் ஏறி வலம்வந்தோம்!—மண்ணில்
உயிர்மேல் உயிர்வைத்தோம்! ஒன்றினோம் காதல்
பயிரொன்றே கண்ட பலன்.

●

# சாந்தி

—திமிலைத்துமிலன்—

அவள் பிறப்புணர்ந்தவள் ! சாந்தி 'கௌரி'யானதால் காதலியாக முடிந்தது. கௌரி 'சாந்தி'யானதால் தாயாக முடிந்ததா ? ஆனால்......

1 சேந்தன் ஒருஇளங் காளையாம்—அவன்
சென்ற பொழுதொரு வைகறை—புனல்
நீந்தி வந்தாள்ஒரு கன்னிகை—கண்டு
நெஞ்சம் தனைவிட்டு நிற்கின்றான் !

"இவள்யார் ? ஏன் இந்நேரம் இங்கு வந்தாள் ?
இருள்நன்றாய்ப் புலராத இந்தவேளை
துவள் இடையாள் நீராடினளா ? மான்போல்
துள்ளிவந்தாள் ; ஏன்நின்றாள் ? துடிக்கும் செவ்வாய்ப்
பவளங்கள் இதழூற வண்டுக் கண்கள்
பதிக்கின்றாள் என்மீதே ; பட்டுக்கைகள்
குவளைத்தண் டோடுஅர விந்தப்பூவைக்
கொண்டதுவும் பேரெழிலே ! குனிகின்றாளா ?

இளமைக்கு வெறியூட்டும் இன்பக் காட்சி !
ஏன்இங்கு நிற்கின்றாள் ? இனியகொய்யாப்
பழமான தளிர்மேனி ; அதிலே முத்துப்
பரல்போன்ற துளிநீரின் மதர்ப்பு ; பெண்மை
அழகுக்கே இவள்தானா உவமை ?—தேவ
அரம்பைப்பெண் இவளோ ? தண் புனற்றுறைக்கு
வழமைக்கு மாறாகப் புலருமுன்பே
வந்தவள்யார் ? அவள்என்முன் வருகின்றாளா ?"

"நில்லுங்கள் ; என்னென்ன உங்களுக்கு..."
"நியமாகத் தெரியாது ; தெரிந் திருந்தால் ..."
"நல்லாக மறைந்துநின்று பார்த்திருப்பீர் ?...
நாளைக்கும் வருவீரோ ?"..."மன்னியுங்கள்,
எல்லாரும் புலர்ந்தபின்பே நீராட்டுக்கு
எழுவார்கள் ; இதுவந்து......" "உங்களுக்குச்
சொல்லாமல் நீராடல் தவறோ ?" "இல்லை
சும்மாநான் வயலுக்குப் போவதால்......"

"நீராடி நான்வந்தேன். உங்கள் கண்கள்
நிலைகுத்தி நின்றுவிட....." "ஆமாம்; இல்லை"
"போராட்டம் ஏன்இங்கு...?...உங்களைத்தான்!
போதற்கு அவசரமேன்? என்னை இங்கு
நேராகப் பாருங்கள்; கண்ணா! என்னை
நினைவில்லை உங்களுக்கு?" "கண்ணனா நான்?
யாரோ; நானில்லைஅது. சேந்தன் என்பேர்.
நான் போறேன்." "நில்லுங்கள்; கண்ணா! கண்ணா!......

விளையாட்டாய் நான்சொன்ன வார்த்தை இங்கு
விபரீத மானதுவா? கண்ணா! என்னைப்
பிழையாக அளவிட்டாய்; கோபம் கொண்டு
பேதையென்னை வதைக்காதே... போய்விட்டாயா?
நிலைகெட்டு விட்டேனா? நொடியினுள்ளே
நிகழ்ந்ததென்ன எனக்கிங்கு? ஏன் நான் நின்று
குலைகின்றேன்; ஐயோ நான் கெட்டேன்; இங்கு
குளித்துவந்த உடையோடா நின்றிருந்தேன்!

கண்ணனெந்தன் கணவனெனில் எனக்கு இங்கே
கல்யாண மாயிற்றா? இல்லை; கன்னி
எண்ணத்துள் எண்ணங்கள் கலப்பதென்ன
இவர்முகத்தைப் பார்த்ததுதான் இதற்குக் காலா?
கண்ணனெந்தன் கணவன்தான் இருபதாண்டுக்
காலத்தின் முன்புஅது. ஆமாம் பின்னர்
மண்ணுக்கு இரையானேன் மீண்டும் மூன்று
வருடத்தில் வந்திங்கு பிறந்தேன் இன்றோ...

பதினேழாம் வயதுடைய பருவக்கன்னி!
பைத்தியமா எனக்கு? இதையாரும் கேட்டால்
எதிராகச் சிரிப்பார்கள்; சிரித்தால் என்ன?
இதோ இந்தத் தெருவாலே தொடர்ந்து சென்றால்,
பதினாறும் வீடுஅது. எதிரே அந்தப்
பலா அதன்கீழ் அவரோடே பயின்ற நாட்கள்
குதிபோட்டுக் கண்முன்னே தோன்றும் அந்தக்
கோலத்தில் இன்னும்தான் குமரனாக...

...என்கண்ணன் உள்ளாரா? இருபதாண்டின்
ஏற்றத்தைக் காணேனே. இளைஞராக
விண்ணாம் பேசியது கண்ண னென்றால்
வெறுத்தென்னைப் போனதுஏன்? சரிநான் இன்று
கண்ணாரக் காண்கின்றேன். எங்கள் வீட்டுக்
கடையாளம் தெரியாதா?— கமலப் பெண்ணே!
என்கரத்தில் இன்னுமிருக் கின்றாய்? வா, நாம்
இல்லுக்குச் செல்வோம்; செங்கதிர் எழுந்தான்."

## Textiles!

VARIOUS DESIGNS

*Excellent quality*

AT CHEAP RATE

*VISIT ONCE AND FOR ALL*

**CHEAP STORES**

BATTICALOA.

அன்பர்களே!

நவீன முறைப்படி
மின்சார உதவியுடன்
முடி சுருட்டுதல், மசாச் செய்தல்
ஆகிய கலைகளில்

நகரிலே முன்னணியில்
நிற்பவர்கள்

**றீகல் சலூன்**

28, பிரதான வீதி,
மட்டக்களப்பு.

## FASHION HOUSE

THE RENOWNED HOUSE

*FOR*

**Quality Textiles**

**AND FOOT WEAR**

நவீன ரக புடவைகளுக்கு
விஜயஞ் செய்யுங்கள்!

**பெஷன் ஹவுஸ்**

பஸ் ஸ்டேன்ட்,
மட்டக்களப்பு.

**அன்புபீடா**

★ மக்களை மகிழ்விப்பது

★ மனோரம்மியமானது

★ மணம், குணம்
நிறைந்தது

உங்களின் நாளாந்த
தேவைகளுக்கு
விஜயஞ் செய்யுங்கள்

**அன்பு ஸ்டோர்ஸ்**

திருமலை வீதி, மட்டக்களப்பு.



முன்வரிசை இ
திரு. செ
திரு. மு
திரு. சக்

இரண்டாவது
செல்வி.
இ. அரியம

பின்வரிசை இட
திரு. மு.
எஸ். வி. த

## தேனமுத இலக்கிய மன்றம் 1962
### மட்டக்களப்பு



செயற்குழுவினரும் ஆசிரியரும்

முன்வரிசை இடமிருந்து வலம்: செல்வி. பீ. கோணேஸ்வரி,
திரு. செ. இராஜேந்திரன், ஜனாப் நாகூர் ஏ. பாவா, திரு. திமிலை மகாலிங்கம்,
திரு. மு. நாகரெத்தினம், திரு. என். எஸ். அருள்ராசா (தேனாடன்)
திரு. சக்திதாசன், செல்வி. இளையார் பாத்லெட்

இரண்டாவது வரிசை இடமிருந்து வலம்: திரு. பி. கார்த்திகேசு,
செல்வி. பொ. புவனேஸ்வரி, இ. அந்தோனியம்மா, அரியமலர் வாஸ்,
இ. அரியமலர், க. மற்றில்டா, அ. சாரதா, வி. விஜயலெட்சுமி, திரு. த. கந்தசாமி

பின்வரிசை இடமிருந்து வலம்: திரு. க. சித்திரவேல், திரு. கே. பொன்னுத்துரை,
திரு. மு. லோகநாயகம், திரு. அ. பூபாலபிள்ளை, திரு. பொ. தங்கவேல் ,
எஸ். வி. தர்மா.

2. சாந்தி அவன்வீடு செல்கிருள்.—அங்கு
 தட்டிக் கதவில் அழைக்கிருள் — அவன்—
 சேந்தனின் தந்தையே கண்ணனும் ;—அவன்—
 செய்கை மறந்து விழிக்கிருன் !

"கண்ணு !"..."என்பெயர் சொல்லி அழைப்பது
 கன்னியின் குரலாஇது யார்கொலோ ?"
"கண்ணு ! என்ன கதவைத் திறங்களேன் !"...
 ..."கட்டிவைத்தவள் போல்உரித் தாடுருள் !
வண்ண மென்குரல் யாரிது ? கௌரியின்
 வார்த்தை போலொரு சாயல் தொனிப்பது ?
எண்ணமா ? அவள்போய்ப்பல ஆண்டுகள் ;
 இன்றிவள் எனக்கேன் நினைவூட்டினுள் ?

வந்திடட்டுமே, யாரெனப் பார்க்கலாம்...,
 வாருங்கள் கதவைத் திறந்தே யுள்ளே.
எந்தனைப்பெயர் சொல்லி அழைப்பது...,
 எப்படித் தெரியும்எனை ஏலவே ?..." (தனதுள்)
..."விந்தையே இது நேற்றுநான் கண்டதில்
 வேறுபட்ட முதிர்ச்சி முகத்திலே !
அந்த நாள் ; அதே காட்சி இருபது
 ஆண்டு சென்றும் அகலாதிருக்குமா ?"...

"காலெடுத்துள்ளே வைத்ததும் சிந்தனை ?
 கற்சிலையென நின்று விட்டீர் !" "உமைப்
போல வேறுரு....; இல்லை,யென் உள்ளுயிர்
 பொங்கும் அன்புருக் கண்ணனே நீங்கள்தான்"
"பால்முகம். இவளின் பதட்டம் எனைப்
 பைத்தியம் என ஆக்குதல் ஏன் ? அம்மா !
சாலவும் தவறேயிழைத்தாய் ! இரு :
 சற்று ஆறுதல் கொண்டுபின் பார் எனை...

யாரையோ நினைத்தாய் ! இடம் தப்பிநீ
 நான் இருக்கும் இடத்தினை நண்ணினுய்.
ஆருமற்றவன் சேந்தனை யன்றிநான்
 ஐந்து பத்து மகன்று முதிர்ந்தவன் ;
நீரையேன் விழிக்குள்ளே நிரைக்கிருய்?
 நெஞ்சினைத் தெளிவாக்கி நிமிர்ந்துபார்.
யாரை நீ நினைத்தாய் ? அவனெங்குளான் ?
 யான் செயற்குள துண்டெனின் செப்புக."

"நான் இருந்தா சாண்ட என்வீட்டிலே
நாதனென்னை யுணர்ந்திட வில்லையேல் ;
ஏனிருக்கிறேன். ஏதினி யுண்டெனக்
கில்லை வையகம் ;" "என்னிது ஐயகோ !
நானுனக்குக் கணவனு யானதோ ?
நல்ல பேச்சிது ! நானிலம் நம்புமா ?
நீ நினைந்திலை ; சித்தங் குலைந்துபோய்
நிற்கிறாய் ; அடிபேதை, நிமிர்ந்துபார் !

நீயெனக்கு மகளினைப் போன்றவள்
நிச்சயமிலை இப்பவோ பின்னவோ
போயிடும் கிழப் பிண்டமே யானடி
புத்தி கெட்டுப் புலம்புகின்றாய் உனை,
நேயமாக வளர்த்தவர் யார்கொலோ ?
நீபெருங்குலப் பெண்ணெனக் காண்கிறேன்.
போயடைந்திடுன் இல்லினை ; நல்லினம்
பூவையே மகளே ! உனைப்போற்றுவேன்."

"போற்றவா எனை ? போதுமே வார்த்தைகள் !
போகவா பணித்தீர் ! எது புக்கிடம் ?
ஆற்றவா முடியும்இதை ? ஐயகோ !
அண்ணலே யுன தன்புப் பதங்களை
ஏற்றவாறு கிடந்துயிர் மாய்கிறேன்..."
"என்ன செய்கை, எடு, விடுகால்களை"
வேற்று வார்த்தை யுரைத்திர் ; விடுகிலன்
விம்மி விம்மி வெதும்பி யழிகிறேன்."

"ஏன் புலம்பி யழுகிறாய் தங்கமே !
என்மகளிலையா ; எழுந்தேவிடு."
"நான் மகளிலை உங்களுக் கானவள்
நன்கு சாந்தியெனவே அழைக்கலாம்."
"ஏன் அடம்பிடிக்கின்றனை ? நல்லது ;
எங்கே சாந்தி ? எழுந்திடு தங்கமே,"
"தேன் சொரிந்தஇவ் வார்த்தைகள் போதுமே ;
தெய்வமே எனக்கே அருள் செய்ததோ ?"

"புன்னகைத்திடும் போதிலே உன்முகப்
பூமலர்ந்த புதுஒளி காண்கிறேன்.
ஏனனிருந்துமென் ஆண்டவன் ஏன்உனக்
கித்தனை சிறிதான வயதிலே
தன் பொறுமையைக் காட்டினன் ? தெய்வமே !
தங்கமானபெண் தன்னை மறந்துளாள்.
உன்செயல் இதுவா ? இவள் சித்தமே
உண்மையான நிலையினை எய்துமா ?"

"கண்ணு! என்னிது? பைத்தியம் உங்களுக்
கானதோ? எனைக் கண்டு கொண்டிரிலே
உண்மையா யிதே சாந்தியே கௌரியாம்
உங்களுக் குரித்தானவள்"—"என்னிது?
அண்மையா; அது எத்தனை ஆண்டுகள்?
அன்று காலனுக் கானஎன் கௌரியை
என்னவள் எனநீயுணர்ந்தாய்? இது
எங்ஙனந் தெரிந்தாயடி! விந்தையே!!"

"விந்தையா எனக்கே தெரியாதிது.
வீடும் என்னது; வேந்தனும் என்னவர்
சொந்த மன்றெனத் தூற்றி மொழிகிறார்
சொல்லியும் தெரியாது விழிக்கிறார்!"
"எந்தவாறு புரிகுவன் சாந்திநான்?
என்ன சத்தம்? அவர்அது காரிலே?"
"தந்தை என்னையே தேடிவந்தார். அதோ..."
"சாந்தி! உன்னைநான் எங்கெலாம் தேடினேன்?"

"அப்பா! இங்குநான்..." "நன்றே; இவரை நீ
அறிவையோ இதற்கும்முதல் சாந்தி?" "ஆம்"
"எப்படிப் பெரியீர் இவள் நும்மிடம்
என்ன செப்பினள்?" "இல்லை; எதோஇவள்..."
"அப்படியில்லை அப்பா: இவரிடம்
அடிக்கடிவர என்றேன்." "அதற்கென்ன;
ஒப்புவார்அவர்; சாந்தி குழந்தைதான்.
ஓம் பெரியவர்; நாங்கள் வருகிறோம்...."

**3 மற்றைப் பொழுதும் புனற்றுறை—அவன்
வந்த துணர்ந்தனள் சாந்தியே—அவன்
உற்ற துரைக்கத் தயங்கினன்—அதை
உள்ளிச் சினந்து மொழிகிறாள்.**

"யாரது நீங்கள்? நேற்றும் வந்தீர்
பேரெது?" "நானா? சேந்தன்" "ஓகோ!
இன்றும் எதற்காய்?" "இல்லை உங்களை
ஒன்றும் பார்க்க உவந்து வந்திலன்
"நன்றே பின்னர்?" "நான் வயலுக்கு..."
"சென்று வருக; திரும்ப ஏன் நிற்கிறீர்?
பெண்கள் நீராடும் பெரும்புனற் றுறைக்கு
பண்பை யிழந்து பார்க்க வருவது

சீச்சீ!; என்ன செயலிது? ஆண்கள்
கூச்ச மிலாதோர்!" "குறும்புத் தனமோ?
பொதுவழியிஃது; போவோர் வருவோர்
எதுவும் செய்வார். இங்கு வருவது
உங்கள் தவறு!" "உணர்வோம் அதுதான்
வீங்கிருள் அகன்று விடியும் முன்னர்
நாங்கள் வருவது" நன்றே நன்றே!"
"போங்கள்" போவேன். ஆனால் நீங்கள்

நேற்றென் வீட்டு நிலைப்படி நின்று
காற்றுப் போன்று காரிற் பறந்தது?
நான் வருமுன்னர் நகர்ந்து விட்டீர்!"
"ஏன் அது உங்கள் இல்லா?" "ஆமாம்"
"அப்படியானால், அவர்; ஆம் கண்ணன்?"
"அப்பா எனக்கு; அவரின் மகன் நான்."
"அம்மா உண்டோ?" "அந்தப் பாக்கியம்
சும்மா கிடைப்பதோ? தோன்றும் பொழுதே

அன்னையை உண்டேன் அவலப் பிறவி"
"என்ன கொடுமை! எதுவோ அவள் பெயர்?"
"அப்பா சொல்வார், அவள்பெயர் கௌரி.
எப்படிமுகமோ, எழிலோ அறியேன்.
நான் வருகின்றேன்"..."நானும் வரட்டா?"
"ஏன்அது நீங்கள் இன்னும் குளித்து...?"
"குளித்து முடிந்தது கூட்டிப் போங்கள்."
"வெளிக்கும் பொழுது வீதியில் யாரும்

வருவார் நீங்கள் வயலைப் பார்க்கின்
ஒருநாள் வரலாம்." "உங்கள் அன்னை
விரும்பிக் கேட்டால் வெறுத்திடு வீரோ?"
"அரும்பும் பொழுதே அழித்தல் தவறே.
சரி சரி போவோம்." ம்கூம், வேண்டாம்.
உரிய தருணம் வந்தால் வருவேன்"
"போகிறேன் நாளை மீண்டும்
ஏகவருவேன். இது என்தொழிலே."

**4 கண்ணன் வயது முதிர்ந்தவன் — இதைக்**
**கண்டும் அவள்மயல் கொள்கிறாள்—சும்மா**
**பின்னையும் பின்னையும் செல்கிறாள்—அவன்**
**பித்துப் பிடித்துக் கிடக்கிறான்.**

"கண்ணா !" "என் சாந்தி ! உனைக் காண்பதற்குக்
கண்பூத்துப் போய்க்கிடந்தேன். எங்கே கையை,"...
"ஒண்ணாது, எனைநீங்கள் உணர்ந்த பின்பே
உருகுவது தெரிகிறது...இல்லை ?" "வா, என்
விண்ணாணம் ? இந்தவிழிக் கோணம் செய்யும்
வித்தையெல்லாம் நானறிவேன். வேண்டாம்வம்பு.
கண்ணாடிக் கன்னங்கள் ; கரும்புப் பேச்சு ;
கனிந்த இதழ்க் கற்கண்டு"... "கண்ணா !" "சாந்தி" !

உண்மையடி சாந்தி,எனைக் கிழவனென்று
உணர்ந்ததெலாம் பொய்மையடி ! உன்னால்போன
வண்மையெல்லாம் நான்பெற்றேன். வாழ்வு பெற்றேன்,
வயதினில் நீ சிறியவள்தான் ; ஆனால் காதல்
பெண்மையிலே நீபெரியள் ; தெய்வப் பெண்நீ !"
—பிறப்புணர்ந்த தெய்வப்பெண் !" "பெரும் புகழ்ச்சி
எண்ணங்கள் நிலைத்துவிடும் பண்பிருந்தால்
இருபிறப்பும் ஒன்றேதான். கண்ணா !" "சாந்தி !"

"இது நமக்கு முதலிரவா ? கண்ணா ! இல்லை ;
இதற்குமுத லொன்றுண்டு. அதுதான் சேந்தன்
உதித்ததற்கு வித்தான இரவு ! அந்த
உணர்வுங்களுக் குண்டா ? கண்ணா !" "சாந்தி !
விதித்தவிதி அது. அந்தப் பிரசவத்தில்
விழுந்தவள்தான் கௌரி. அதுஇன்றுநேற்று ?
உதித்துவிட்டாள் அவள்மீண்டும், சாந்தியாக
உயிரூட்டவந்தவள் நீ. உணர்ந்து கொண்டேன்."

"அதுபோதும் கண்ணாஇப்பிறவி மீண்டும்
அடிமை உமக்கின்பமெதோ அதுஎன் இன்பம்"
"நதிபோன்றுன் எழிலெல்லாம் புதுமை. ஆனால்,
நடத்தையிலே அனுபவத்தில் எல்லாம் கௌரி.
குதிபாயும் இளமான் நீ. அதனால் என்னைக்
குத்துமடி சமுதாயம்." "ஐயோ, ஐயோ ;
எது இளமை ? எதுமுதுமை ? எல்லாம் எங்கள்
இதயத்தைப் பொறுத்ததுதான் கண்ணா ! கண்ணா !

சமுதாயம் ! அது உடைந்த படிவம் கண்ணா !
தள்ளுங்கள், அதுவேண்டாம் நமக்கு. காதல்
அமுதாக நானுண்டு, நீங்களுண்டு
அள்ளியுணக் கரமுண்டு. அதற்கும் மேலே
எமதாழ்ந்த இதயங்கள், ஒன்றில் ஒன்றி
இணையான சுகமுண்டு. அதற்கும் பின்னால்,
சுமையாக எனிந்த உடம்பு ? அந்தச்
சொர்க்கத்துக் கிவையெல்லாம், தூசு கண்ணா !"

சாந்தி! உனைத் தத்துவத்தின் ஞானிஎன்கோ;
 தளராத நம்பிக்கைத தம்பமென்கோ;
நீந்திவரும் முகிலென்கோ; வானமென்கோ;
 நீங்காத சுகமென்கோ!''. ''அடடா! நீங்கள்
பாந்த முள தமிழ்க்கவியாய் மாறிவிட்டால்,
 பாழ்தான் இந்நல்லிரவு!'' ''போடி கள்ளி!
ஏந்திவரும் தத்துவத்தின் கருத்துணர்ந்தால்
 எதற்கிந்த இழிவின்பம்?'' ''இல்லைக் கண்ணு!

சொர்க்கத்தின் சுவைக்குஓரு துளிதான் இஃது
 தோற்றுவித்த தியற்கை அதைச் சொல்லுதற்கே.
வர்க்கத்தின் நுழைவாயில் நடந்துநீந்தி
 மாருத முக்திநிலை பெறுதல் வேண்டும்!''
''தர்க்கத்தில் நாம்இங்கு இறங்கிவிட்டோம்;
 சரியாக மணி மூன்று! உனது தந்தை?''
''நிர்ப்பந்தம் தரமாட்டார்; நாளைக்காலை
 நீங்கித்தான் நான் போவேன்.'' ''சரிதான் கள்ளி!''

**5 காவற் பரணில் துயின்றவன்—சேந்தன்**
**காலையிலும் காத்து நிற்கிறான்—அவன்**
**ஆவலைத் தூண்டிய கன்னியைப்—புனல்**
**ஆடும் துறையிடைக் கண்டிலன்!**

''புனற்றுறையிற் காணேமே இவளெங்கு
 போய்விட்டாள் புதுமையாக?
கிணற்றினிலும் குளிக்காளே; ஒருவேளை
 ஊருக்கோ கிளம்பி விட்டாள்?
பணக்காரி, அவட்கென்ன; 'காரு'ண்டு
 நினைத்தாற்போற் பறந்து செல்வாள்.
எனைக்காண நினைக்காதே போனாளா?
 அன்புண்டா இவளிடத்தே?

போகட்டும்; ஆனாலிப் புனற்றுறையிற்
 பூத்தஅர விந்தப் பூக்கள்
சாகட்டும் எனவிட்டுப் போனாளே!
 அவைசிந்தும் கண்ணீர்ச் சாற்றில்
வேகட்டும் குளமெல்லாம்; வெறும்நிலமாய்
 மாறட்டும்; விசும்பு நீறாய்
ஆகட்டும்; எனதாசை அழியட்டும்.
 வெறும் வாழ்வு அவலந்தானே!

6 இன்னொரு மாலைப்பொழுதிலே—அவன்
இல்லினைச் சாந்தி யடைந்தனள்—அவன்
புன்னகையால் வர வேற்கிருன்—சும்மா
புந்தி மகிழ்ந்து கிடக்கிருன்

"சாந்தி! வழிஎன்ன தப்பிப்போய் வந்தாயா?"
"சேந்தனு? என்ன திடுமென்று இக்கேள்வி?
நான்தினமும் இங்கு நடந்தேதான் திருகிறேன்"
"என்அது எங்கே? இருக்கிறதே 'கார்'ஒன்று
"ஓட்டத் தெரியாது" "ஓகோ," "அது சரி சொல்;
கேட்கிறேன் எங்கே அப்பா?" "கிடக்கின்ருர்.
அவரெதற்கு இப்போ?" "அதைப் பிறகு சொல்லுகிறேன்
"இவளெதற்கு அப்பாவை இப்படிச் சுற்றுகிருள்?
போய்விட்டாள். என்ன புதினம்! ஒருவேளை
வாய்ப் பேச்சாய் அந்த வள்ளி அன்று பேசியது
உண்மையோ?...சே, சே, ஒருக்காலும் நேராது
கண்ணியமாய் வாழ்ந்து கருத்தைப் பறித்துப்பின்
என்னைப் பரிசாய் எடுக்க நினைக்கின்ருள்
புன்னகைக் காரி! புத்தியுள்ள மான்குட்டி
சின்னஇடைச்சி செவ்வல்லிப் பூங்கொடியாள்
அன்னநடையாள் அறிவுக் கிணையுண்டோ?"

7 காலம் விடைபெற்றுச் சென்றது—கிழக்
கண்ணன் படுக்கையில் வீழ்கிருன்—எந்த
நாளும் பிதற்றுதல் சாந்தியாம்!—சேந்தன்
நல்லுளம் வெம்பிச் சினக்கிருன்.

"சாந்தி!"... "சாந்தி! சாந்தி!! சரிதான் மறுபடியும்
அந்தப் பிதற்றல்! அப்பா! என்உங்களுக்கு
புத்தி எங்குபோச்சு? பொதுமனித ஞயிருந்தும்
சித்தம் தடுமாறிச் சீர்கெட்டால்; ஊர்முழுதும்
காறி உமிழ்கிறதே! கண்ணுண்டா உங்களுக்கு?
நாறிக் கிடக்கிறது நாட்டிலே மானமின்று
போன இருமல் புரண்டும் வருவது ஏன்?
நான் எதைச் சொல்ல நம்சுகத்தை நாம்பேணத்
தெரியா திருந்தால் செத்துத் தொலைவதுதான்
பரிகாரம்! என்ன பரிகாரம் இட்டுமைக்கு!
பக்கத்தில் பெற்ற பிள்ளை பதைத்திருக்க
எக்கேடு கெட்ட எவளோ அவள் வேண்டும்.
சாந்தியாம் சாந்தி!" "தம்பி! தவறப்பா.
சாந்தி யுனக்குத் தாயடா! தாய்" "அப்பா!
சாந்தி எனக்குத் தாயா? அட ஆண்டவனே!
இந்தக் கொடுமை எங்கேனும் உண்டாமோ?

அவளெனக்கும் எத்தனையோ ஆண்டுக் கிளையவள் ஆம்
வயது பதினேழு அப்பா! பதினேழு
தயவு செய்திந்தச் சகிக்காத வார்த்தைகளைப்
பயமின்றி என்முன் பகராதீர்." "தம்பி! இதோ
சொல்வதைக் கேளேன்"... "கேட்கத் துணிவில்லேன்
பொல்லாப் பழி! இதுவே போகாப் பழியப்பா!"
"கண்ணா! இதோ சாந்தி கதவைத் திறவுங்கள்"
"என்ன அநியாயம்! ஏன்சாந்தி என்அப்பா
இந்த நிலைக்கு எதற்காய் வரவேண்டும்?
உந்தனைத் தாயாய் உவந்தேற்றுக் கொள்ளட்டாம்!
தந்தையே சொன்னார். சாலுமா சாந்திஇது?
பந்தம் மறைந்து பழிவினையும், ஆம், இதனால்.
சிந்தனைசெய் சாந்தி சிந்தனைசெய், நீ எனக்குச்
சொந்தமுள தாயா? சொல்லு பதினெழு
வயதுடைய தாயின் மகனுக் கிருபதுவா?
செயலா இதுமனிதச் செய்கையா சொல்சாந்தி
ஊமையாய் விட்டாய்! உண்மை இதுதானா?
தீமைவிளைத்த சிறுக்கி; கொடும் சண்டாளி!
தீர்ந்த வியாதி திரும்வி வருவதற்கும்
காரணம் நீதான். காளி கொடும் நீலி!'
"சேந்தா! அடேசேந்தா! செல்லடா! செல்வெளியே!"
"எந்தைக் கெமன்நீ. எதுவும் நடக்கட்டும்.
அந்த நிமிடம் அழிவாய், உனக்கெமன் நான்"
"போடா வெளியே; போக்கிலி. உன்தாயைக்
கோடாகப் பேச..." "கேடிதால் ஆவதிலை.
குழந்தை அடித்தால் கோபிப்ப துண்டா நாம்?
கண்ணா! எழவேண்டாம். கட்டிலில் போய்ப்படுத்துக்
கொள்ளுங்கள். எங்கே கோபித்துப் போய்விடுவான்?
மெல்ல இருங்கள்." வெறும்தண்ணி கொஞ்சம்தா.
சாந்தி!" "இதோ வந்து விட்டேன் சரிந்திருங்கள்."

**8 சாந்தியின் உள்ளம் தவித்தது.—அவள்**
**தண்ணி எடுத்துத் திரும்பினாள்.—கண்ணன்**
**வாந்தி எடுக்க இருமினான்—ஒரு**
**மாதிரியாக மயங்கினான்.**

"தண்ணி இதோ பருகுங்கள். கண்ணா"... "சாந்தி
தா"... "என்ன தடுமாற்றம் ஐயோ! உங்கள்
கண்எங்கோ பார்க்கிறதே! கடவுளே!" "ஆம்
கடைப்பொழுதில் என்சாந்தி காத்தால்"..."கண்ணா!"

"தண்ணியைத் தா." விழுங்குங்கள்." "ஆ, என் சாந்தி !
தடவிவிடு என்நெஞ்சை ; தாங்கவொண்ணுப்
புண்போன்று உள்ளெல்லாம்,." "பொறுத்திருங்கள்.
போய் நானேர் வைத்தியரை"…. "வேண்டாம் சாந்தி !—

பக்கத்தில் வா,சாந்தி !" "கண்ணு ! உங்கள்
படுக்கையில்தான் இருக்கிறேன்." "சாந்தி !
நீயா ? விக்கித்து அழலாமா ? வேண்டாம் ; எந்தன்
விடுதலைக்கு மகிழ்ச்சியொடு விடைதா.!' "கண்ணு !
திக்கற்று விடுவேன்நான். என்னைவிட்டுச்
செல்லாதே. சேர்த்துக்கொள் எனையும்" "சாந்தி !
பக்கத்தில்வா." "கண்ணு !" "எனக்கு ஏதோ
பயமாக... எனைக்கட்டிப் பிடித்துக்கொள் ; ஆ !

உலககெல்லாம் இருள்கிறதே ! சாந்தி ! என்னுள்
உறைந்தவளே !...ஆ ; நான்...நான்..." "கண்ணு ! ஐயோ
விலகாதே என்றுயே கண்ணு ; என்னை
விலக்கிவிட்டா போய்விட்டாய் ? கண்ணு ! கண்ணு !!
மலர் எங்கும் வாழ்கிறதா மரத்தைவிட்டு ?
வரமாட்டேன் என்று நீ மரணம் பெற்றுய் ?
நிலவெங்கு நீந்திவரும் வான மின்றி ?
நீ போனல் ; ஆ !... கண்ணு ! கண்ணு !! கண்ணு !!!"

"ஐயையோ ! அப்பா ! என் அப்பா ! சாந்தி !
அவரென்னை மறந்தாரா ? அந்திப் போதில்
ஐயோ ; நான் இருந்தேனு ? அப்பா ! அப்பா !
ஆருக்குச் சொல்வேன் நான் அந்தோ ; சாந்தி !
தெய்வம்போல் வாழ்ந்தவரை நீயேவந்து
தின்றுவிட்டா யடிசாந்தி ! சாந்தி !! சாந்தி !!!
ஐயையோ ! நீகூடப் போய்விட்டாயா ?
ஆண்டவனே ! ஆ !... சாந்தி !... சாந்தி !.... சாந்தி !..."

9 சாந்தி கிடைக்குமா ? சேந்தனின்—உளத்
தாபம் இனியும் அடங்குமா ?—உயிர்க்
காந்தமும் காவலும் போனதால்—வந்த
காயத்தைக் காலமும் ஆற்றுமா ?

கவிதைகள், கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வமுள்ள இளைஞர், இவர். நடிப்புத்துறையில் ஈடுபாடுள்ளவர். மட்டுநகரைச்சேர்ந்த இவரின் சொந்தப் பெயர் க. சித்திரவேலு என்பதாகும்.

# காதல் தவிப்பு

"வேலு"

அவன் :–

மஞ்சம் பிடித்தயர்ந்து மயங்கிடும் வேளையிலே
வெஞ்சாமரை வீச என் வெண்ணிலவைக் கண்ணுற்றேன்
துஞ்சுகின்ற வேளையிலும் துயர்பொறுக்க மாட்டாது
பஞ்சணையில் கண்விழித்தேன் பாவையை நான் காணவில்லை.

◉

அருணண் உதயத்தில் ஆரணங்கின் அழகு கண்டு
ஆறுத் துயருற்றேன் அன்பனே அருள் மொழிவாய்
இருளினிலும் அவளுருவம் என்முன்னே தோணுதன்பா
ஈருடலும் ஒருயிராய் இணைய மன மொப்புறது

◉

அவள் :–

வெட்டிச் சுருள் கேசம் வீரச் சுருள் மீசை
கட்டித் திரள் சதையும் கருத்த நிறவுடலும்
தீட்டிய என் கண்களுக்கு தீரா விருந்தூட்டி
கட்டி இதயமதைக் கலக்குதடி உள்ளழகு

◉

காதலிரு கண்களிலும் கற்கண்டும் சர்க்கரையும்
வனப்பழகும் தந்துனக்கு வாழ்வளித்துக் காத்திடுவேன்
பதமுரைத்த கண்ணுடையார் பண்பான சேதிதனை
இதமாய் அறிந்து வந்து எந்தனுக்குச் சொல்லிடடி

# புழுகுப் புகழர்

— தேனுடன் —

விழித்துக் கொண்டிருந்தபோது
பேசிக் கொண்டிருந்தார்!
கண்ணைமூடும் போதும் என்னருகில் இருந்தார்
ஆனால்கண்ணை விழித்துக் கொண்ட பொழுது......?

இடம்: மட்டக்களப்புப் புகையிரத நிலையம்.

நாள்: 28-2-62

நேரம்: பி. ப. 8-30

பாத்திரங்கள்: புழுகுப் புகழர், நான்.

(கொழும்புக்குச் செல்லும் 8-40 ரெயில் "கனகலிங்கம் சுருட்டு" புகைத்தவன் விடும் புகையைப் போல புகைவிட்டுக்கொண்டு நிற்கின்றது. சன நெருக்கடியான நேரம். அவசர அவசரமாக நான் ரெயிலடிக்கு வருகிறேன்)

நான்: (வந்துகொண்டே) கோச்சில் இடம் கிடைக்குமோ என்னவோ......?

புழுகுப் புகழர்: ஏன் கிடையாது? நானும் கொழும்புக்குத்தான் போறன். என்னோடை வாரும் நானிந்த "பேத்"தில சீத்தில போறல்ல. மக்களோட மக்களாக "தேட்" கிளாசில்தான் போகவிருப்பம்......

நான்: (முகத்தில் கேள்விக் குறியோடு) நீங்க......?

பு. பு. ஹி! ஹி! நானை என்னைத் தெரியாதா தம்பி? நீங்க இந்த ஊர்தானே, இல்ல......

நான். இந்த ஊர்தான்!

பு. பு. அப்ப என்னைத் தெரியாம இருக்க ஒரு காரணமும் இல்லையே! (என் முகத்தில் அசடு வழிகின்றது. கைக்குட்டையால் மெள்ளத் துடைத்து மறைக்கிறேன்) முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தருடைய நேரடிச் சீடன் நான், அவர் அந்த நாளில் எழுதின துப்பறியும் கதைகளை நான் திருத்திக் குடுக்கிற வழக்கம்,

நான்: (திடுக்குற்று) என்ன? விபுலாநந்தர் துப்பறியும் கதை எழுதினரா?

பு. பு. அட இதுகூடத் தெரியாதா தம்பிக்கு......இவ்வளவு காலமும் எங்க இருந்தீங்க?

நான்: பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தேன்!

பு. பு. கற்றுக் குட்டியா? (தலை குனிகிறேன்) துப்பறியும் கதை எண்டா துப்பறியும் கதைதான். மறைஞ்சு போன யாழைப்பற்றியெல்லாம் துப்பு அறிஞ்சுதானே விபுலாநந்தர் "யாழ் நூல்" எழுதினர். அதுதான் சொன்னேன் விபுலாநந்தர் துப்பறியும் கதை எழுதினர் எண்டு.

நான்: ஹி! ஹி! (என்று அசட்டுச் சிரிப்பு சிரிக்கிறேன்)

பு. பு. இந்தக் கல்லடிப்பாலம் கட்டக்குள்ள நான் அரசியலில் இறங்கினவன். இப்ப எவனுக்கு அரசியல் தெரியும்? எல்லாம் "அலசு இயல்தான்". சேனநாயக்கா மந்திரிசபை அமைக்கக்க

என்னட்ட கேட்டுத்தான் செய்தார். தமிழனுக்கு அதில் இடங்கொடுக்கச் செய்ததும் நான்தான்.

**நான் :** நீங்க பெரிய அரசியல் வாதி என்று சொல்லுங்க !

**பு. பு.** ஹி ! அத எண்டவாயால நானே சொல்லுறதா ? ஒரு உதாரணம் சொல்லுறன் கேளுங்க. சேனநாயக்கா ஒரு முறை என்ன கதைச் சிற்று இருக்கக் கூப்பிட்டார். அப்ப கொஞ்சம் முந்திரியங் கொட்டையும் ஒரு தேன் போத்தலும் கொண்டு போனன். மனிசன் முந்திரியம் கொட்டையைத் திண்டிற்று குசேலர் கொண்டுவந்த அவலத் திண்ட கிருஷ்ணன் போல அப்படியே பரித்துப் போய்விட்டார். உடனே உங்களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்க நான் செய்து தாறன் எண்டார். நான் விரும்பியிருந்தா ஒரு மந்திரிப் பதவியோ அல்லது அர மந்திரிப் பதவியோ கேட்டிருக்கலாம். எனக்குத்தான் பதவியில் ஆசையில்லையே. ஒரு டி. ஆர். ஒ. பதவி கேட்டன். மனிசன் முறைச்சுப் பார்த்தான். அப்படியே வந்திட்டன்.

**நான் :** அது சரி ஏதோ "அலசு இயல்" என்று குறிப்பிட்டீர்களே அது என்ன இயல் ?

**பு. பு.** ஓ......அதுவா. "அரசியல்", "அரசியல்" என்று கூப்பாடு போடுகிறார்களே, என்னப்பா அரசியல் எண்டா ? எல்லாம் 'அலசு இயல்" தான். அதாவது ஒரு பிரச்சனையும் இல்லாட்டா கட்சிகள் வாழாது மாண்டுவிடும். எனவே இல்லாத ஒரு பிரச்சனையை தூக்கி வைத்துக்கொண்டு ஹா .... ஹா......என்பது. அதை மற்றவரிடம் சொல்லும் போது கைகால் வைத்துச் சொல்லுவது. அது அப்படியே பரம்பி, பிறகு என்னண்டா அது ஒரு ஜீவாதார பிரச்சனையாகி விடும். கடைசியில் அது என்னண்டு விசாரிச்சா எம். பியிர காரல பாடசாலைவளவுக்குள்ள இருந்த தென்னை மரத்துத் தேங்காய் விழுந்ததாம். அதை வைத்துக் கொண்டு பாடசாலைகளின் நிர்வாகம் சரியில்ல, தலைமை ஆசிரியர மாத்த வேண்டும். கல்வித் தரம் குறைந்துவிட்டது, எம். பி யை ஆசிரியர்கள் மதிக்கிறார்களில்ல அப்படி இப்படி என்று தேங்கா உண்டாக்கின நெளிசல இப்படி சரிக்கட்டப் பாக்கிறாங்க.

**நான் :** றெயின் "ஸ்ராட்" பண்ணிடும் போல இருக்கு......

**பு. பு.** ஓ...ஓ...இதோ நானும் வந்திட்டன் (இருவரும் ஒரு பெட்டியில் ஏறிக் கொள்கிறோம்.)

**பு. பு.** என்ன தம்பி இடத்தையேகாணோம். ஒருவன் எழும்பி இடம்தாறானா, அந்த நாளில நான் றயிலில ஏறினா...?

(இதைக் கேட்ட ஒருவர் சற்று நகர்ந்து இடம் தருகிறார், படாரென பு. பு அதில் இருக்கிறார்.)

**பு. பு. :** (வெற்றிப் பெருமிதத்தோடு என்னைப் பார்த்து) தம்பிக்குத்தான் இடமில்ல. பறவால்ல, இளவயசுதானே நிக்கலாம்.

**நான்** (மனதுக்குள் அவரைச் சபித்துக் கொள்கிறேன்,)

**பு. பு.** ஜனநாயக உலகத்தில் மற்றவன்ர உரிமையை மதிக்கிறவன்தான் மனிதன். இல்லாட்டி மிருகம். ஏன் இதச் சொல்ல வந்த நான் எண்டா ஒரு பேச்சுக்குச் சொல்றன்.

(ஏறாவூரில் ரயில் நிற்க அந்தச் சீற்றில் இருந்த ஒருவர் இறங்குகிறார்,) பு. பு. கால்களை நன்றாகப் பரப்பி நீட்டி நிமிர்ந்து இருக்கிறார் )

நான் : (என்ன மனிசன் என்னை இருக்கச் சொல்லச் சொலலுவாரென்று எதிர் பாத்தா இப்படி யாகிவிட்டதே என்று நினைக்கிறேன். மீண்டும் வௌவ்வால் ஸ்டைலில் தொங்கிக்கொண்டு நிற்கி றேன் (தலைகீழாக அல்ல.)

பு. பு. (என்னைப்பார்த்து) என்ன தம்பி நிற் கிறீங்க, இடமில்லையாக்கும் என்ன? என்ன செய்யிற எல்லாம் இந்த அர சாங்கத்தின்ரை பிழை. சர். யோண், டட்லி, பண்டாரநாயக்கா எல்லாரும் என்னைக்கேட்டிற்றுத்தான் எதுவும் செய்தாங்க. ஆனால் இப்ப பார்த்தா மனுசி என்னையும் ஒரு மனிசனாகக் கவனிச்சாத் தானே? ஆனால் சி. பி. டி. கொஞ்சம் நல்லம்.

நான் : நானும் ஒரு இன்டர் வியூவுக்குக தான் கொழும்புக்குப்போறன். என் னைக் கொஞ்சம்.........

பு. பு. கவனிக்கிறன், கவனிக்கிறன் எந்த டிப்பாட்மென்டில் தம்பி?

நான் : "அக்றேறியன் சேவிசில" ஒரு கிளாக் உத்தியோகம்.

பு. பு. பூ.........அதுதான மருதானையில் இறங்கின வுடன, ஒரு டாக்சியில சி. பி. டியிற்ற போவம். அப்படி முடி யாட்டி கோபாலன்ற போவம்.

நான் : (புரியாமல்) கோபாலா யாரது?

பு. பு. : அதுதான் கவனர்ஜெனரல். அது சரி செலவுக்கு எவ்வளவு வைத்தி ருக்கிறாய்? ஏனெண்டா கேக்கிறன் கொழும்பு பாரு. எல்லாத்துக்கும் காசு தானே தேவைப்படுகிறது.

நான் : ஓ......உங்களுக்கும் காசுதானே தேவைப்படுகின்றது!

பு. பு. என்ன தம்பி?

நான் : இல்ல உலகத்துக்கும் அதுதானே தேவை எண்டன்.

பு. பு. அதுசரி. அது சரி......இண்டைக்கு நான் வேலெடுத்துக் குடுத்த பொடி யனுகள் தான் எல்லா டிப்பாட்டுமென் டிலேயும் வேலை பாக்கிறானுகள். கச் சேரிக்க நான்போனா ஒரு ஜீ. ஏக் குக் குடுக்கிற மரியாதையை எனக்குக் குடுக்கிறாங்கள்... ..

(பேசிக்கொண்டே பு. பு. தூங்குகிறார். நானும் கண்ணை மூடுகிறேன். ஏதோ சத்தத்தில் விழித்த நான் பு. பு. இருந்த இடம் வெற்றிடமாக இருக் கிறதைக் கண்டு)

நான் : எங்கே பெரியவரைக் காணவில் லையே! ஐயோ' எனது வேலை விஷ யம் என்ன ஆகிறது? மராமத்து மந்திரி முதல் மரக்காலை மனேஜர் வரை தனக்குத் தெரியுமென்றாரே. அவரைக் காணவில்லையே? இனி என்ன செய்வேன்?

(சோர்வால் அப்படியே சரிந்து விடு கிறேன்)

## வண்ணாத்தி

வண்ணாத்திப் பூச்சி என்ற சொல் வண்ண+அந்துப் பூச்சி என்ற இரு சொல்லின் புணர்ச்சிதான்.

அறிஞர்களின் கவிதைகளைப் படிப்பதிலும் கவிதைகள் எழுதுவதிலும் ஓய்வான நேரத்தைப் பயன் படுத்தும் இளைஞர் இவர். ரீ. கந்தசாமி என்னும் இயற் பெயருடைய இவர் மட்டக்களப்புப் புகையிரதப் பகுதியிலே தொழில் பார்த்து வருகிறுர்.

# கவிதைப் பெண்

*—கலியுகன்—*

மாதுளம் கனிபிளந்துன்,
வாயினில் பிறந்த சொற்கள்
தாதுண்டு குவியுமல்லித்
தாமரை இதழோ டொத்த,
காதுகள் கன்னம் இரண்டும்
கருத்துக ளெல்லா மின்பம்
மோதியே வந்து என்னை
மோனத்தி லாழ்த்தி விட்டாய்.

முல்லையின் அரும்பு கிள்ளி
முடித்ததோர் சரளம் தன்னை,
எல்லையில் கடவாய் மட்டும்
ஏற்றியே தொங்க விட்ட
பல்லினில் மின்னல் பட்டு
பாய்ந்திடும் ஒளிக் கதிரில்
கல்லையே உருக்கு மின்பக்
காவியம் பிறந்த துன்னுல்

முகிலினுல் கூந்தல் கட்டி
முழுமதி முகத்தி லொட்டி
மகிழ்வென்ற புன்னகைப் பூ
மனத்திரை தள்ளி விட்டு
அகிலொடு சந்தனத்தை
அள்ளிடும் மனமோ டங்கு,
துகிலினைத் தென்றலாட்ட
தோன்றினுய் கவிதை யீந்தாய்.

கால்களைச் சிலம்பு கொஞ்ச
கைகளில் வளையல் கொஞ்ச
நீழெழில் புருவந் தன்னில்
நிழலெனக் கருமை கொஞ்ச,
வேலினை ஒத்த கண்ணில்
விடையில்லாக் கேள்வி கொஞ்ச,
பால்ஒளித் திங்கள் போலே,
பார்வையில் கவிதை தந்தாய்.

# நியமனம்

— கண்ணகி —

''நான் வசந்தியைப் பார்த்துக் கண் சிமிட்டியதைவிட, வசந்தி என்னைப் பார்த்துக் குலுக்கியதைப் பார்க்கிலும், மாபெரும் தவறென்று செய்து விட்டோம்......இரவிலே உறக்க மில்லாமலும்...தனிமையிலே ஒருவரை ஒருவர்.........''

சரசு ஓடோடி வந்தாள்.

''அக்கா, உங்களை வரட்டுமாம்.''

''வரமுடியாதென்று சொல்'' என்றேன் நான்.

''இன்றைக்கு மாத்திரம் வரட்டுமாம்.''

''எனக்கு நேரமில்லை.''

''கட்டாயமாக உங்களைக் காண வேண்டுமாம்.''

''எனக்கு முக்கியமான வேலை இருக்கிறது.''

''உங்களை அழைத்து வராவிட்டால் எனக்கு அடிப்பா.''--அவள் பரிதாபமாக விழித்தாள். அவளுடைய சிவந்த வதனத்திலே இழையோடிய துன்ப ரேகைகள் என்னுடைய நெஞ்சிலே பதிந்த போதிலும் அவளுக்கு என்னால் மதிப்புக் கொடுக்க முடியவில்லை.

வாழ்க்கையின் அஸ்தமனத்தை நாடும் என்னில் உதயத்தைக் காண முயல்கிறாள் அவள்.

''என்னைக் காண வில்லை என்று சொல்லேன்.'' நான் மீண்டும் சொன்னேன்.

''நான் பொய் சொல்லமாட்டேன்.''

''உண்மையைச் சொல்லி அடி வாங்கு.''

''நேற்று அக்கா எனக்கு அடித்தவ.'' சரசு கடைசியாக அக்கா அடித்த இடத்தைப் பார்த்தாள். ''அவவும் கதவைப் பூட்டிற்று அழுதவ.''

''உனக்கு எப்படித் தெரியும்'' என்று ஆவலோடு வினவினேன்.

''யன்னலூடாகப் பார்த்தனான்''

''இன்றைக்கும் அழச்சொல்.'' நான் ஆத்திரத்தோடு கூறினாலும் என்னுடைய விழிகளிலே நீர்த்தாரை புரைசாடுகிறது.

''அக்கா பாவம் அவ உங்களை நினைத்து நினைத்து அழுதவ.'' சரசு அவளுடைய அக்காளுக்காக வக்கலாத்து வாங்கிக் கொண்டு அழுகிறாள்.

''என்னை நினைக்க வேண்டாம் என்று சொல்.''

''என்னால் இதெல்லாம் சொல்ல முடியாது.''

''அப்போ எதற்காக வந்தனீ?''

''உங்களைக் கூட்டிப் போக.,'

''நான் மாட்டேன்''

''நான் போகமாட்டேன்.''

''போகாமல் இங்கேயே இரு.''

''அம்மா கூப்பிடுவா.''

''கூப்பிட்டதும் போ.''

''அக்கா அடிப்பாவே.''

''இப்போ நான் உனக்கு அடிப்பேன்.''

''நான் அதைத் தாங்குவேன்.''

''அக்கா அடிப்பதைப் பார்க்க உரமாக அடிப்பேன்'' என்றேன் நான்.

''உப்புப் பிரம்பு.''

''நீங்க அடித்தால் நோகும். ஆனால் நீங்க அழமாட்டீங்க. அக்கா அடித்தால் நோகாது. ஆனால் அவ தனியே போயிருந்து அழுவா. அதை என்னால் தாங்கமுடியாது.''

''பேசாமல் வீட்டுக்குப் போ.''

''போக மாட்டேன்.''

''சரசு.'' நான் கத்தினேன். எனக்கு மன எழுச்சி பிரவாகமாகி ஆத்திரமாக வந்தது. ''நீங்கள் எல்லோருமாகச் சேர்ந்து என்னைத் தூக்குப்போடச் சொல்கிறீர்கள்.''

◉ சகலவித சாய்ப்புச் சாமான்களுக்கும் ◉

◉ சில்லறைச் சாமான்களுக்கும் ◉

நாளாந்த தேவைக்கு வேண்டிய நானுவித பொருட்களுக்கும்

நம்பிக்கையான இடம்

# S. M. K. முகமட் சுலைமான் லெவ்வை அன் கோ.

பஜார் வீதி, வாழைச்சேனை.

டெலிபோன் : 803.

---

அன்பார்ந்த பொதுமக்களே !

◉ சிங்கர் தையல் மெஷின்,

◉ மீன்பிடிக்கும் படகுகள் (சீகல் & பெண்டா),

◉ பைசிக்கிள் வகைகள் (றலி, ஹம்பர், B. S. A., றட்ஜ்),

◉ பிலிப்ஸ், சனியோ, எக்கோ ரேடியோ வகைகளுக்கு

# ஹாஜி T. லெவ்வைத்தம்பி & பிரதர்ஸ்

தெலிபோன் : 95

பள்ளிவாசல் வீதி,
வாழைச்சேனை.

மற்றும் பூரணதி லேகியம், பாட்டா சப்பாத்து வகைகள், நெசல்ஸ் பால் வகைகள், ஆங்கில மருந்து வகைகள், கடிகார வகைகள், சாய்ப்புச் சாமான்கள், நைலோன் மீன்பிடி வலைகள்

ஆகியவை மலிவு விலையிலே பெற்றுக்கொள்ளலாம்.

விஜயஞ் செய்யத் தவருதீர்கள் !

''தயவு செய்து இன்றைக்கு மாத்திரம் வாருங்கள்'' அவள் கெஞ்சினுள்.

''வரமுடியாது வரமுடியாது'' என்று எத்தனை தடவை சொல்லுவது.

''அக்கா வருவாவாம்.''

''வரச்சொல். வருமுன்பே நான் கிணற்றுக்குள்ளே விழுந்து போடுவேன்.'' சரசு சிணுங்கினுள். ''நான் போகட்டுமா ?''

கண்களில் இருந்து அரும்பிய நீரைத் துடைத்துக் கொண்டு மெல்ல நகர்ந்தாள். அவள் யாருக்காக அழுகிருளோ ?

× × ×

நான் குடிஒருந்த கிராமத்திலே என்னை யும் வசந்தியையும் பிணைத்து ஏளனமாகப் பேசிக் கொள்கிருர்கள். நான் வசந்தியைப் பார்த்து கண் சிமிட்டுகிறேனும். வசந்தி என்னைப் பார்த்து குலுங்குகிருளாம். கல்யாணம் செய்து கொள்வதற்கு முதல்--நம்முடைய சம்பிரதாயத்தின்படி ஒரு ஆணும் பெண்ணும்--அவர்கள் பிற்காலத்தில் கல்யாணம் பண்ணிக் கொள்பவர்களாக இருந்தாலும் எந்த விதத்திலாவது, தொடர்பு வைத்துக் கொண்டால் அது ஒழுக்கக் குறைவானதோடு அந்தப் பிராந்தியத்திற்கே கௌரவக் குறைவானது.

நான் வசந்தியைப் பார்த்து கண் சிமிட்டியதை விட, வசந்தி என்னைப் பார்த்து குலுங்கியதைப் பார்க்கிலும் மாபெரும் தவறென்று செய்து விட்டோம். எங்களுடைய பழக்க வழக்கம் பரஸ்பர அன்பாகி இருவரையும் இணைத்து விட்டது. இரவிலே உறக்கமில்லாமலும், தனிமையிலே ஒருவரை ஒருவர் நினைத்து உருகும்படியாகவும் செய்து விட்டது. இதைத்தான் சமூகம் மையல் என்று வர்ணிக்கிறது போலும்.

நான் அவளோடு மனம் கலந்து பழகும் போது பிற்காலத்தில் அவளைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்று துளி கூட நினைக்கவில்லை.--எதிர் பார்க்கவில்லை சாமான்யமாகப் பழகினேம், எந்தவித ஆசையோ அழுக்காருே இல்லாமல்.

ஆனல் இன்று...? அவள் மலர்ந்து கனிந்து அறுவடைக்கு நிற்கிருள். என்னை விட அவள் வயதிலே இளையவளாக இருந்த போதிலும் உலகத்துப் பெரிய மனுஷியாக தோன்றுகிருளே.

அவளுக்குத் திருமணம் பேசுகிருர்கள். அவளை யாராவது தகுந்தவன் ஒருவனுடைய கையிலே ஒப்படைக்க முயல்கிருர்கள்.

அவள் என்னைத்தவிர வேருெருவரையும் நினைப்பதில்லை என்று அழுகிருள். என்னையே மணம் முடிப்பதென்று அவள் ஏற்கெனவே முடிவு கட்டிய முடிவாம். காதலாம் காதல்—இது என்னுல் சுமக்க முடியாத சுமை. காதலித்த குற்றத்திற்காக என்னுடைய வாழ்க்கையே கரவு கொடுபட வேண்டுமா ?

நான் அவளுக்கு ஏற்றவனு ? வசந்தியை எனக்கு மனைவியாக்கி குடியும் குடித்தனமுமாக வாழத் தகுதி உடையவனு?—பூகம்பமாக என் உள்ளிருந்து எழுந்து என்னை அறியாமல் வெடிக்கப்பார்க்கிறது.

நான் படித்தவன். தொழிலை நாடி எத்தனையோ பரீட்சைக்கு விண்ணப்பங்கள் எழுதியிருந்தும் தொழில் எதுவுமே கிடைக்காத காரணத்தினுல் வேதனை அனுபவிப்பவன். இந்த லட்சணத்திலே திருமணம் வேறு நடந்தாக வேண்டுமா ?

× × ×

வசந்திக்குத் திருமணம். அடுத்த வாரம் பதிவு, இதை நான் எற்கனவே எதிர் பார்த்த போதிலும் என்னுல் விரக்தி யடையாமல் எது செய்ய முடியும். முடவனுக்கு கொம்புத்தேன் மீது ஆசை இருக்கக் கூடாது. ஆனல் கொம்புத்தேன் முடவனை நாடி வருகிறதே.

எனக்கு வேலை கிடைத்த பிறகு நான் வசந்திக்கு மாலை சூடிக் கொள்வேன் என்று எடுத்துக் கூற திராணியற்ற நிலையில், ஆணும் பெண்ணும் ஒன்ருகப் பழகுவது தவறு என்று பழக்கப்பட்டு விட்ட சமுதாயத்தில் வளர்ந்த நான் காதல் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்திருக்கவே கூடாது. தமிழ் நாட்டிலே கல்யாணத்துக்குப் பிறகு காதல் என்று யாரோ சொல்லி வைத்தது நினைவுக்கு வருகிறது.

× × ×

மாலை மயங்கி வரும் வேளை, வீட்டில் யாரும் இல்லை. வசந்தி சரசுவோடு வந்தாள். அவளைக்கண்டதும் எங்காவது ஒளிந்து கொள்ள முயற்சி செய்தும் முடியவில்லை.

அவள் வாயில் நிலையிலே கோணலாக சாய்ந்து நின்ற வண்ணம் முந்தானையினுல் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''ஏன் அழுகிறீர்கள்''

''அழுகை வருகிறது.''

''எதற்காக,''

''உங்களை நம்பி ஏமாந்து போனதற் காக.''

''நான் உங்களைக் கல்யாணம் செய்து கொள்வேனென்று சொல்லவில்லையே?''

''அப்போது எதற்காகப் பழகினீர்கள்.''

''பழகினல் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்ற அர்த்தமா?''

''உங்களைத் தவிர என்னல் எவரையுமே திருமணம் செய்து கொள்ள முடியாது?''

''நான் தொழில் இல்லாதவன். தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியாத நிலையில் உள்ளவனல் இன்னெருத்தியை எப்படி வாழ வைக்க முடியும்?''

''உங்களுக்கு வேலை கிடைக்கும்.''

''அதுவரை பொறுத்துக் கொள்.''

''வீட்டிலே அவசரப்படுத்துகிருர்கள்.'' சரசு கண்ணீர் வடித்தாள்.

''அதற்கு நான் என்ன செய்வது.''

உங்களை நெஞ்சில் இருத்திய பிறகு இன்னெருவரை மணந்து கொண்டு வாழ முடியாதே?''

வசந்தியின் திரிசங்கு நிலையை நினைத்து வருத்தப் படுவதைத் தவிர என்னல் எதுவுமே செய்யமுடியவில்லை. அவளுக்கு நானே மாலை சூட வேண்டுமாம். அதுவும் உடனே நடந்தாக வேண்டுமாம்.

நான் இறுதியாக நிதானத்தோடு அவளிடம் சொன்னேன்.'' தயவு செய்து என்னை மறந்து விடுங்கள். நாலு சதத்திற்கு வழியில்லாத லட்சணத்தில் உங்களை மணந்து கொண்டு தொல்லைப் பட முடியாது''

''நீங்கள் துரோகம் செய்வீர்கள் என்று நான் எதிர் பார்க்கவில்லை என்னை காதலித்து ஏமாற வைத்து விட்டீர்கள்.''

வசந்தி கண்களைத் துடைப்பதற்குள் சரசு கண்களைத் துடைத்துக் கொண்டாள். ''அவர் பாவம் வேலை வராமல் எப்படி உங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்வார்'' என்று எனக்காக வாதாடினள்.

வசந்தி ஒரு கணம் தலையைக் கவிண்ட வண்ணம் மௌனமாகவே இருந்தாள். போகிறேன் என்பதற்கு அறிகுறி.

'நான் உங்களை மணந்து கொள்ள முடியாத நிலையை நினைத்து வருந்துகிறேன். இது துரோகம் அல்ல''

அவளை அறியாமல் அவளுடைய கால்கள் நகர்த்தன ஏமாற்றத்தோடு. போகிருளே? சரசு என்னை திரும்பி திரும்பிப் பார்த்த வண்ணம் வசந்தியைத் தொடர்ந்தாள். அவளுக்கும் என்மீது கோபம் வந்து விட்டது.

''பாவம் வசந்தி போனதும் சரசுக்கு அடிப்பாளோ.--என்னுடைய மனம் சரசுவுக்காக வேதனைப் பட்டது. இருவரும் அழப் போகிருர்கள். கைக்குட்டையினல் கண்களைத் துடைத்துக்கொண்டு என்னை சமாதானம் செய்ய முற்படுகிறேன்,

× × ×

வசந்திக்குத் திருமணமாகி சில காலங்களுக்குப் பிறகு ஒரு நாள்:

வாசலில் மணி ஒலித்தது.

சரசு உள்ளே ஓடிவந்தாள். ''உங்கட்குத் தபால் வந்திருக்கிறது.''

இரண்டு கடிதங்கள் வந்திருந்தன. ஒன்று பதிவுத் தபால், மற்றது சாதாரணம். வசந்தி எழுதியிருந்தாள். நான் திறந்து வசந்தியின் சுகசேமங்களை அறிய ஆவலோடு படித்தேன். சரசு பதிவுத் தபாலைத் திறந்து படித்தாள்.

''உங்களுக்கு வேலை கிடைத்து விட்டது'' என்று கடிதத்தை நீட்டினள்.

என்னல் நம்ப முடியவில்லை. எழுதுவினைஞர் பரீட்சையில் தேறிவிட்டதாகவும் அடுத்த மாதம் முதலாம் தேதியில் இருந்து பதவியேற்கும் படியும் நியமனம் வந்திருந்தது.

இந்தக் கடிதம் வசந்தியின் திருமணத்திற்கு முன் வந்திருந்தால்--நான் இப்படி நினைத்தபோது கடிதத்திலே கண்ணீர் தெறித்தது.

''உங்களுக்கு வேலை கிடைத்துவிட்டது என்ற மகிழ்ச்சிப் பெருமிதத்தோடு'' எனது கைகளைக் குலுக்கினள் சரசு.

''முதலாம் திகதியோடு உத்தியோகத்துக்குப் போகவேண்டும்.''

''அப்போ என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்வீர்கள் தானே?''

சரசு இவ்வாறு வெளிச்சமாகக் கேட்பாளென்று நான் எதிர்பார்க்கவில்லை. எனினும் கடிதம் என்னைப் பதில் சொல்ல வைத்தது, ''ஆமாம் நிட்சயமாக உன்னையே மணந்து கொள்வேன்.''

''அக்காவை ஏமாத்தியது போல என்னையும் ஏமாற்ற மாட்டீர்களே?'' என்று நாசூக்காகச் சிரித்தாள் அவள்.

அவளுடைய சிரிப்பு அவளுக்குப் பின்னல் நகர்ந்துவந்த வருங்காலத்தை என்னுடைய கண்களுக்கு முன்னே பதிய வைத்தது.

# சிரிப்பு

—முருகையன்—

உள்ளத்தைக் கொளுவி இழுத் துவகையினை
அன்பளிப்பாய் வழங்கி இன்ப
வள்ளத்தில் மிதக்க விடும் மகிழ்வூறும்
சிரிப்பினொலி கேட்டாய் தானா ?
நள்ளிரவின் வானத்தில் நகை செய்யும்
விண்மீன்கள் அமைதி வாரி
வெள்ளியொளி யாய் வழங்கும் சிரிப்பினொலி
கேட்டாயா, கேட்டாய் தானா ?

இல்லையில்லை உலகமெல்லாம் சிரிப்பொலியா ?
உறக்கத்தின் நடுவிற்கண்ட
நல்லதொரு புதுக்கனவின் ஆவியுரு
வாகுமது; உண்மையல்ல.
கொல்வதிலே, கூரீட்டி பிளந்தெடுக்கும்
குருதியிலே, உயிரின் சோக
அல்லல் அசைந் தனுங்குகிற முனகலிலே
வெறித்த சிலர் சிரிப்ப துண்டு.

வெடித்துலகை உடைத்தெறிந்து தூள் தூளாய்ப்
பொடி செய்யும் குண்டின் மூச்சில்,
துடிக்கின்ற செங்குருதி தோய்ந்தெரிந்து
சாம்புகிற துயர நெஞ்சில்,
நடக்கின்ற காலின் கீழ் நசிந்த பிணக்
குவை வீசும் நச்சுக் காற்றில்,
நடுக்குகிற பசிக் குளிரில் நகைச்சுவையைக்
கண்டு சிலர் சிரிப்பதுண்டு.

பகை தனது வெற்றியிலே பல்லிளித்துப்
பெருமையொடு சிரிப்பதுண்டு.
அகிலமெலாம் அமைதியிலே துயர் மறந்து
கவலைகளைத் தூர விட்டுத்
தகைமையொடு மேன்மையிலே தங்குகிற
நற்காட்சி கண்டு கண்டு
நகைமலர்த்தும் ஒரு முகத்தைக் கண்டாயா ?
சிரிப்பினொலி கேட்டாய் தானா ?

✽

நவீன மோஸ்தர்களில் அமைந்த

நம்பிக்கையான தங்க நகைகளுக்கு

புகழ்பெற்ற ஒரு ஸ்தாபனம்

மெய். ஏ. ஏ.

முத்துக் கறுப்பன்

செட்டியார்

வாழைச்சேனை

✽

நவீன முறையில் தயாரிக்கப்படும்

◉ பிளாஸ்டிக் போர்டுகள்

◉ றப்பர் ஸ்டாம்புகள்

◉ சினிமா சிலேடுகள்

◉ கண்ணாடிப் படங்கள்

ஆகியவை எம்மிடம்

பெற்றுக் கொள்ளலாம்.

ஜயா புரடக்ஸ்

ஏறாவூர்

VISIT

RADIO ELECTRONICS

(Prop: M. Sathasivam.
Dip. in Radio Eng.)

75, Main Street

ERAVUR CHENKALADY

Specialist in

RADIO REPAIRS,
BATTERY CHARGING
&
PUBLIC ADDRESS
SYSTEM

கண்கவர் புடவை வகைகளுக்கு

மீன்பாடும்

மட்டுமா நகரிலே

மங்காப் புகழுடன்

திகழ்கின்ற

ஒரே ஒரு ஸ்தாபனம்

ஹமீதா

ஹமீதாவே

இன்றே விஜயம் செய்யுங்கள்

7, பஜார் வீதி மட்டக்களப்பு.

# இளமை நினைவுகள் சில

— மாஸ்டர் சிவலிங்கம் —

வில்லுப்பாட்டாலே விழிப்புணர்ச்சியை ஊட்டிவரும் 'நகைச்சுவைக் குமரன்' தனது இளமை நினைவுகள் சிலவற்றைத் தொகுத்துத் தருகிருர். இளைஞர்களுக்கு மாத்திர மனறி எல்லோருக்குமே இது நல்ல விருந்து

அப்போது எனக்குச் சுமார் பதினெரு வயதிருக்கலாம் என எண்ணுகிறேன். பாடசாலையில் நான் படித்துக் கொண்டிருந்த காலம் அது. அப்போது நான் பைசிக்கிள் சவாரி செய்வதற்குப் பயிற்சி செய்துகொண்டிருந்தேன். நான் பயிற்சி பெறுவதற்கு உதவியாயிருந்த அந்தச் சிறிய 'பைசிக்கி'ளிற்கு 'பெல்' லும், 'பிறேக்'கும் மாத்திரமின்றி 'லைச' னும் கிடையாது. அந்த பைசிக்கிளுடன் என்னைக் காண்பவர்களெல்லாம் "போலிஸ் கண்டால் பிடித்துவிடுவார். ஜாக்கிரதை!" என்று எச்சரிக்கத் தவறுவதில்லை.

ஒரு நாள், பலவித இசை எழுப்பும் அந்தக் குட்டிப் பைசிக்கிளில் படு குஷியாகப் பவனி செய்து கொண்டிருந்தேன். அப்போது......! எதிரே நான் கண்ட காட்சி...? கால்கள் நகர மறுத்துவிட்டன. கைகள் நடுங்க ஆரம்பித்து விட்டன: என்னைப் பிடிப்பதற்குத்தான் போலும் ஒரு போலிஸ்காரர் மிகவேகமாக பைசிக்கிளில் வந்துகொண்டிருந்தார். பயத்தில் தொப்பென்று விழுந்துவிட்டேன். திடுதிப் என்று எழுந்து, வந்த வழியே ஓடித் தப்பி விடுவோம் என்ற எண்ணத்துடன் பைசிக்கிளைத் திருப்பினேன். போயும் போயும் அந்த ஆபத்தான வேளையிலா பாழாய்ப்போன 'செயின்' கழன்று தொலைக்க வேண்டும்?

திரும்பிப் பார்த்தேன், போலிஸ்காரரின் பைசிக்கிள் நெருங்கி வந்துகொண்டிருந்தது. என்ன செய்வதென்று அறியாது ஒரு கணம் திகைத்தே விட்டேன். அடுத்த கணம் ஒருவாறு சமாளித்துக் கொண்டு, என்னைச் சுமந்து வந்த பைசிக்கிளை நான் தூக்கித் தோளில் சுமந்து கொண்டு ஓடிப்போய் பக்கத்திலிருந்த பற்றை ஒன்றின் பின்னல் பதுங்கிக் கொண்டேன். நெஞ்சு பயத்தில் திக்திக் என்று இடைவிடாது அடித்துக் கொண்டேயிருந்தது. எதிரில் வந்துகொண்டிருந்த அந்த மனிதரின் பைசிக்கிள் நான் மறைந்திருந்த பற்றைக்கு நேரில் வந்தது தான் தாமதம், 'டப்' என்று நிறுத்தப்பட்டது.

"இந்தப் போலிஸ்காரர் எமகாதகப் பேர்வழி போலிருக்கிறதே. நம்மைக் கண்டுவிட்டாரோ என்னவோ?" என்று மெள்ள எட்டிப் பார்த்தேன்......என்ன ஆச்சரியம்! எனது விலாசம் எழுதப் பட்ட ஒரு தபாலட்டையை நீட்டியவாறு புன்முறுவலுடன் நின்றுகொண்டிருந்தார் எங்கள் பகுதித் தபால்காரர்.

"பயந்தவன் கண்ணுக்குப் பார்ப்பதெல்லாம் பேய்" என்று சொல்வார்களல்லவா? அதுமாதிரி பயந்து, பயந்து பார்த்த என் பார்வைக்குத் தபால்காரர் போலிஸ்காரர் போலத் தோன்றியிருக்கிருர் என்பதைப் பின்புதான் என்னல் உணரமுடிந்தது.

× × ×

நான் சிறுவனுக இருந்த காலத்தில் எனக்குக் குருவிகளென்ருல் உயிர்.

அந்த நாட்களில் பாடசாலை நேரம் போக மீதி நேரங்களில் பெரும்பாலும் குருவி பிடிப்பதே எனது முக்கிய பொழுது போக்கு. குருவிகளைப் பிடித்து நண்பர் களுக்கு விநியோகிப்பதில்—அன்பளிப்ப தில் எனக்குத் தனிப் பிரியம். "குருவி களைப் பிடிக்கக்கூடாது. அவற்றின் சுதந் திரத்தைக் கெடுக்கக்கூடாது" என்றெல் லாம் எமது தந்தையார் அடிக்கடி சொல் வதுண்டு. ஆனால் நான் குருவி பிடிப்ப தைத் தொடர்ந்து கொண்டுதானிருந் தேன்.

ஒரு நாள் நான் பாடசாலைக்குச் செல்லும் போது ஒரு மரப்பொந்தில் ஒரு குருவி புகுவதைக் கண்டுவிட்டேன். எப் படியும் அதைப் பிடித்தே தீருவதென்று திட்டமிட்டேன். அன்று பாடங்களொன் றும் மூளையில் நுழையவில்லை. குருவி யைப் பற்றிய எண்ணந்தான் நிறைந்திருந் தது.

பாடசாலை முடிந்ததும் ஓட்டமும் நடையுமாக குருவி புகுந்த பொந்துள்ள மரத்தடியை அடைந்தேன். மெள்ளப் பதுங்கிப் பதுங்கி அம்மரத்தில் ஏறி குரு வியை 'லபக்' என்று பிடிக்கும் நோக் கத்துடன் பொந்தினுள் கையை விட்டுத் துளாவினேன். ஏதோ தட்டுப்பட்டது. குருவிதானென்று எண்ணிக் கொண்டு அழுத்திப் பிடித்தேன். அடுத்தகணம் குருவியை விழுங்கிவிட்டுப் படுத்திருந்த புடையன் பாம்பு சீறிக் கொத்தியது. அலறியடித்துக் கொண்டு கீழே விழுந் தேன். அன்றுடன் குருவி பிடிக்கும் பழக்கத்தையே மறந்துவிட்டேன்.

× × ×

சிவாநந்த வித்தியாலயத்தில் நான் ஆறுவது வகுப்புப் படித்துக்கொண்டிருந்த போது ஒரு தடவை ஆங்கிலப் பாட லொன்று மனனம் செய்ய வேண் டிய கட்டம்ஏற்பட்டது. ஆங்கிலம் படிப் பித்த ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர். பிரம்படி கொடுப்பதில் அவருக்கு இணை அவரேதான். "முழுப்பாடலும் பாட மாக்காமல் வந்தால் உரித்துவிடுவேன்" என்று முதல்நாள் எச்சரிக்கை வேறு செய்திருந்தார்.

அன்று பயத்துடன்தான் பாடசா லைக்குச் சென்றேன். அந்த ஆங்கிலப் பாடலில் எல்லோருக்கும் ஏழு, எட்டு வரிகள் தெரிந்திருந்தன. எனக்கு ஆக நான்கே நான்கு வரிகளே தெரிந் திருந்தன. "இன்று ஆசிரியர் வராமல் விட்டால் எவ்வளவு நன் றாயிருக்கும்" என்றுநான் சொல்லி முடிப் பதற்கும் அவர் பிரம்பும் கையுமாக வகுப் பிற்குள் நுழைவதற்கும் சரியாகவிருந்தது. பிரம்புடன் அவரைக் கண்டதும்எனக்குத் தெரிந்திருந்த நான்கு வரிகளில் இரண்டு வரிகள் என்னிடமிருந்து விடை பெற்றுக் கொண்டன.

பாடம் தொடங்கியது. ஐந்தாறு வரி கள் தெரிந்தவர்களையே அடிப்பதற்காக மூலையில் நிறுத்திவிட்டார். எனது உடல் நடுங்க ஆரம்பித்து விட்டது. ஒவ்வொரு வராகச் சொல்லிக்கொண்டே வந்தனர். எனது முறை வந்தது. திடீரென்று எழுந்து முற்றும் தெரிந்தவனைப் போல இரண்டு வரிகளையும் விரைவாக பொரிந்து தள்ள ஆரம்பித்தேன். இரண்டாவதுவரி முடிவதற்குள், எனக்குத் தண்ணிப் பாடம் என்று எண்ணிய ஆசிரியர் "சரி நல்லது உட்காரலாம்" என்று கூறினார். படாரென்று மிடுக்குடன் உட்கார்ந்தேன். அன்று தப்பியது தம்பிரான் புண்ணியந் தான்.

× × ×

அப்போது எனக்குச் சுமார் பத்து வயதிருக்கலாம் என நினைக்கிறேன். புகை வண்டியில் ஏறிப் பார்ப்பதற்கு எனக்கு அளவுகடந்த ஆசை. எதையாவது நினைத்

துக்கொண்டு படுத்தால் அது கனவில் தோன்றும் என்று யாரோ சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஒவ்வோர் நாளும் புகைவண்டியை நினைத்துக் கொண்டே படுக்கைக்குச் செல்வேன். கனவில் நான் நினைக்காத பல நிகழ்ச்சிகளே தோன்றின. புகைவண்டியோ, அதில் நான் ஏறுவது போன்றோ ஒருநாளும் அந்தப் பாழாய்ப்போன கனவில் தோன்றவில்லை.

ஒருநாள் புகைவண்டியில் ஏறிப் பார்ப்பதற்கு மட்டுமின்றிப் பிரயாணம் செய்வதற்கும் வாய்ப்புக் கிடைத்தது. கனவிலல்ல—நனவிலேதான். கொழும்பில் வாழும் சில உறவினர் என்னைப் புகைவண்டியில் அழைத்துச் சென்றனர். எனது மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது. சதா எதிர்பார்த்துக் கொண்டிருந்த நிகழ்ச்சி நடைபெற்றால் மகிழ்ச்சிக்குச் சொல்ல வேண்டுமா? என்ன!

ஒரே இடத்தில் இருக்க என்னால் முடியவில்லை. அங்கிங்கென்னாதபடி எங்கும் ஓடி ஆடிக் கும்மாளம் அடித்துக் கொண்டிருந்தேன். சுழன்று கொண்டிருந்த மின்சார விசிறியின் விசை—'சுவிச்' எனது கண்ணிலே பட்டுவிட்டது, துடிப்பு மிகுந்த பருவமல்லவா? என்னால் சும்மா இருக்க முடியவில்லை. அந்த விசையைத் திருகி விளையாடவேண்டுமென்ற ஆசை என்னை உந்தித் தள்ளியது. ஒருவரும் என்னைக் கவனியாத வேளையில் மெள்ள ஒரு ஆசனத்தில் ஏறி நின்று அந்த விசையைத் திருகினேன்... அடுத்த கணம்...! 'டப்' என்று புகையிரம் நின்றுவிட்டது.

எனது உடலெல்லாம் கிடுகிடுவென்று நடுங்க ஆரம்பித்து விட்டது 'குப்' என்று வியர்த்து வேறு கொட்டியது. பயத்தில் தொண்டை கிழியக் கத்த ஆரம்பித்து விட்டேன். பலர் என்னைச் சூழ்ந்து கேள்வி மேல் கேள்வி கேட்டனர். "தம்பி! என்ன நடந்தது ஏன் இப்படி அழுகிறாய்?" என்று பரிவோடு கேட்டார் ஒரு பெரிய மீசைக்காரர். "அதோ அந்த விசையைத் திருகிப் புகைவண்டியை நிறுத்திவிட்டேன். போலிஸ்காரன் பிடித்துக் கொண்டுபோய் விடுவானே..." என்று கூறிவிட்டு மீண்டும் அழுதேன்.

எல்லோருமே 'கொல்' என்று சிரிக்க ஆரம்பித்துவிட்டனர். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. பேந்தப் பேந்த விழித்தேன். மின்சார விசிறியின் விசையைத் திருகிப் புகையிரதத்தை நிறுத்திய உன்னுடைய வீரம் மெச்சத்தக்கதுதான் தம்பி!" என்று கூறிவிட்டு வெடிச்சிரிப்புச் சிரித்தார் அந்தப் பெரிய மீசைக்காரர். நான் மின்சார விசிறியின் விசையைத் திருகுவதற்கும், புகைவண்டி ஒரு ஸ்டேசனின் நிற்பதற்கும் சரியாக இருந்ததென்ற உண்மையைப் பிறகுதான் என்னால் உணர முடிந்தது.

## மிக நீளமான மண் புழு

மிகவும் நீளமான புழுவின் நீளம் 12 அடி. மொத்தம் ஒரு அங்குலம். இது ஆஸ்திரேலியாவில் காணப்படுகின்றது. இது எரிமலைபோன்று புற்றை உண்டாக்கி உள்ளே வாழும்.

For Best Photographs Visit :

# RANEE STUDIO

KALMUNAI

SPECIAL DISCOUNT WILL BE ALLOWED FOR SCHOOLS AND WEDDING SITTINGS.

- SPECIALIST IN COLOURING.
- CINEMA SLIDE MAKING AND
- NAME BOARD PAINTING.

ALL KIND OF BLOCK MAKING & PICTURE FRAMING WILL BE UNDERTAKEN

At Moderate Charges. Always At Your Service,

# RANEE STUDIO

**KALMUNAI.**

- நவீன முறையில் அழகான படங்கள் பிடிப்பதற்கு.
- கல்முனை ருணி ஸ்ருடியோவுக்கு விஜயம் செய்யுங்கள்.
- சினிமா சிலைட்ஸ் விசேஷ முறையில் தயாரித்துத் தரப்படும்
- படங்கள் பிரேம் போடுவதும் "புளக்குகள்" செய்வதும் குறைந்த விலையில் சிறந்த முறையில் செய்துதரப்படும்:
- விளம்பரப் பலகைகள் நவீன முறையில் எழுதிக் குறித்த காலத்தில் தரப்படும்.
- பாடசாலைகளுக்கு விசேஷ சலுகைகள் உண்டு.

# ருணி ஸ்ருடியோ

## கல்முனை

வெளிநாடு செல்ல வேண்டுமென்று நானும் அவரும் திட்டமிட்டுக் கொண்டிருந்த போதுதான் ''தேன் நிலவு'' படப்பிடிப்புக்காகக் காஷ்மீர் செல்லும் சந்தர்ப்பம் வந்தது. வேறு திட்டங்களையெல்லாம் ரத்துச் செய்து விட்டு மே மாதம் முதல் வாரத்திலேயே காஷ்மீருக்குக்கிழம்பினேம். காஷ்மீர் போவதற்கிடையில் பட்ட சிரமமென்றல் அப்பப்பா அது சொல்லில் அடங்காத பெரியகதை. பாஸ்போட் விஷயத்திலே, விமான நிலையத்திலே இப்படியெல்லாம் பெரிய தாமதமாகி விட்டது. கடைசியாக அவர் நாலாந் திகதியே புறப்பட்டுச் செல்ல நானும் மகள் விஜியும், பத்தாம் திகதிதான் புறப்பட்டுச் செல்ல வேண்டியதாயிற்று

காஷ்மீர் மிகவும் ரம்மியமான இடமென்பதில் சந்தேகமில்லை. நெஞ்சையள்ளும் இயற்கைக் காட்சிகளுக்கும் பஞ்சமேயில்லை. கண்ணுலே கண்ட அத்தினையையும் விபரிக்க என்னுல் முடியாது. சில சம்பவங்களை மாத்திரம் உங்களுக்குக் கூறுகிறேன்.




ராஜ்பாக் :

ராஜ்பாக் என்னும் பகுதியில் உள்ள வீடுகள் அப்படியொன்றும் ஆடம்பரமான வையாக இல்லை. அங்கே வருஷத்தில் ஆறு மாதத்துக்குப் பனி பொழியும். பனியிலே வீடுகளெல்லாம் மூடப்பட்டு விடுவதிலிருந்து பாதுகாப்பதற்காக கருங்கற்களால் சுவர்கள் கட்டியிருக்கிறர்கள். ராஜ்பாக்கில்

ஒரு உணவு அதிகாரியின் வீட்டில் நான் தங்கினேன். அவர்கள் மிகவும் மதிப்புடனும் ஆதரவுடனும் என்னிடம் பழகினுர்கள். ராஜ்பாக் பகுதியிலேதான் (சித்திராலய) படப்பிடிப்பு யூனிட் தனிமையாக மூன்று வீடுகளை வாடகைக்கு எடுத்துக் கொண்டு தங்கியிருந்தனர். நடிகர்களுக்கும் சிப்பந்திகளுக்கும் சென்னைச் சாப்பாடு கிடைக்க வசதி செய்வதற்காக பிரயாணம் செய்யும் பொழுதே வேண்டிய சாமான்களுடன் சமையற்காரரையும் இவர்கள் அழைத்து வந்திருந்தார்கள். ஸ்ரீதர் செய்திருந்த இந்த ஏற்பாட்டினுல் சாப்பாடு பற்றிய கவலை அதிகமாக யாருக்கும் இருக்கவில்லை. ஆனுல் நல்லெண்ணெய் பற்றுக்குறை மாத்திரம் காணப்பட்டது. நல்லெண்ணெய் இல்லாமல் போன குறையை அந்த ஊர் மக்களின் நல்லெண்ணத்தால் அனைவரும் மறந்தே விட்டார்கள். ராஜ்பாக் பகுதியில் ஓடும் பஸ்கள் மாத்திரமல்ல டாக்ஸிகளும் அரசாங்கத்தின் கணக்கிலேயே இருக்கின்றன. ஆனுல் இந்த டாக்ஸிப் பஞ்சத்தை ஈடு செய்ய அனேகமான குதிரை வண்டிகள் அங்கே கிடைக்கக் கூடியதாயிருக்கிறது. தனியொருவர் பிரயாணம் செய்வதாயிருந்தாலும் அவர்கள் பத்திரமாக ஏற்றிக்கொண்டு குறிப்பிட்ட இடத்திலே விடுகிருர்கள். புது ஊர்க்காரர்களிடமும் கொஞ்சம் கூடுதலான வாடகை வசூலிப்பதில் இவர்கள் சமர்த்தர்களாக இருக்கின்ருர்கள்.

காஷ்மீரில் அதிகம் ஏழைகளைக் கண்டேன். ஏழ்மை நிலை காரணமாக அநேகமாக எல்லா வீட்டிலும் சிறு சிறு கைத்தொழில் செய்கிருர்கள். வனப்பு மிகுந்த இந்த நகரை வருஷத்தில் எட்டு மாதங்கள் வரை பனி விழுங்கி விடுவதால் மக்கள் வெளியே சென்று வேலை செய்வது அசாத்தியமாய் விடுகின்றது. வீட்டிலே உள்ள பெண்கள் பின்னல் வேலை போன்ற வேலைகளிலே ஈடுபட்டுக்கொண்டு சுறு சுறுப்பானவர்களாக காட்சி அளிக்கிருர்கள்.

### வைஜந்திமாலா :

''தேன்நிலவு'' படத்திலே நடிப்பதற்கு அவரும் ஜெமினி கணேசனும் வையந்திமாலாவும் வந்திருக்கிருர்கள் என்பதை அங்கு வாழ் சினிமா ரசிகர்கள் தெரிந்து வைத்திருக்கிருர்கள். அவருடன் நான் ஸ்ரீநகர் கடைத்தெருவைப் பார்க்கப் போயிருந்த பொழுது நான் தான் வைஜந்திமாலா என்று நினைத்துக் கொண்டு பலர் வந்து சூழ்ந்து கொண்டார்கள். நான் வைஜந்திமாலா இல்லை என்று அவர்களுக்கு விளக்கிச் சொல்லித் தப்பித்துக்கொள்வது. பெரிய சிரமமாகப் போய்விட்டது.

### மலிவான குங்குமப் பூ :

''குங்குமப்பூ மிகவும் மலிவாகக் கிடைக்கிறதே ஒரு தொயலா விலையென்ன தெரியுமா? ரூபா 3-8-0 தான்'' என்று கம்பீரத்துடன் நெஞ்சை நிமிர்த்திப் பேசினுர் அவர். ''அடே அப்படியானுல் கொஞ்சம் கூட வாங்கியிருக்கலாமே'' என்று அவரிடம் கூறிவிட்டு அவர் வாங்கி வந்திருந்த குங்குமப் பூவில் கொஞ்சம் வாயில் போட்டுக் கொண்டேன். அது கரைந்து போகாமல் அப்படியே இருந்தபோதுதான் அது ''டூப்ளிகேட்'' குங்குமப்பூ என்பதை அறிய முடிந்தது. தேங்காய் கொப்பருவைச்சீவி அதற்கு வண்ணம் பூசி குங்குமப்பூ என்று விற்றிருக்கிருர்கள் என்பதை அதன் பின்பு தெரிந்துகொண்டேன்.

### கோ கர்ணுக் :

ஸ்ரீ நகருக்கு 56 மைலுக்கு அப்பாலுள்ள கோகர்ணுக் என்ற இடத்திலே ஒரு அதிசயமான காட்சி கண்டேன். ஒரு இடத்தில் பூமியிலிருந்து ஆகாயத்தை நோக்கி தண்ணீர் கொப்பளித்து வேகமாகப் பாய்ந்து கொண்டிருக்கிறது. பவுண்டனிலிருந்து பீறிட்டுப் பாய்வது போல அந்தப் பிளவிலிருந்து தண்ணீர் மேல் நோக்கிப் பாய்கிறது. தண்ணீரைத் தொட்டால் ''ஜில்'' என்று குளிராக இருக்கிறது.

### சந்தணவாடி :

அமர்நாத்துக்குப் போகும் இந்த வழியிலே பனி படர்ந்து கிடக்கிறது. இங்கே ''தேன் நிலவு''க்குரிய காட்சிகள் சிலவற்றைப் படம்பிடித்தார்கள். படம் பிடிப்பில்

வைஜந்திமாலாவும் அவரும்கலந்து கொண்டார்கள். நானும் அதைப் பார்க்கச் சென்றிருந்தேன். அங்கு வாட்டகைக்கு வைக்கப்பட்டிருந்த குதிரைகள் பனிக்கட்டிகளில் சறுக்கி விழாமல் நடந்துசெல்கின்றன.

**ஆள்தூக்கிகள் :**

சிறிது தூரம் பனிப் படலங்களுக்கு மேலே வழுக்கி விழாமல் நடந்து செல்ல வேண்டியிருந்தது. நம்பியாரும் இன்னும் சிலரும் கடந்து சென்று விட்டார்கள். நான் கையில் வைத்திருந்த தடியின் உதவியால் வழுக்கி விழாமல் நடந்துசென்றேன் ஆனல் வைஜந்திமாலாவையும் அவரது பாட்டியதுகிரியையும் ஒரு பலகையில் வைத்துத்தான் ஆள் தூக்கிகள் தூக்கிச் சென்ருர்கள். இதற்கென்றே ஆள் தூக்கிகள் பலர் அங்கு இருக்கிருர்கள். இந்தப் பகுதியிலே தான் ''ஸ்கேட்டிங்'' என்னும் பனியிலே சறுக்கி ஓடும் விளையாட்டு நடைபெறுகிறது. பல பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து இதில் கலந்து விளையாடுகிருர்கள்.

**காஷ்மீர்மக்கள் :**

காஷ்மீர் மக்கள் வெள்ளை வெளேரென்று இருக்கிருர்கள். அவர்கள் உடைகளை நன்கு மூடி உடுத்துக்கொள்ளுகின்ருர்கள் அந்தப்பெண்மணிகள் தலையிலே அதிகம் பின்னல்கள் பின்னி விட்டிருக்கிருர்கள். இத்தனை பின்னலையும் எப்படித்தான் பின்னி முடிக்கிருர்களோ என்று எண்ணத் தோன்றுகிறது நமக்கு.

**படகுவீடு :**

நீரில் மிதக்கும் இந்தப் படகு வீட்டில் சாப்பாடு முதலிய எல்லா வசதியும் இருக்கின்றன. இந்தப் படகு வீடுகளிலே மாதம் ஒன்றுக்கு ரூபா 1500 இருந்து 2500 வரை கொடுத்து உல்லாசமாகப் பொழுதுபோக்க எத்தனையோ பேர் வந்துகொண்டிருக்கிருர்கள்.

டாம்பேக், நகீன்பெக், நெக்ற்ரு பார்க், ஸ்ரீநகர் வீதிகள் குல்மார், சந்திரவாடி, பகல்கேம்ப் ஆகிய பகுதிகளில் ''தேன்நிலவு'' படப்பிடிப்புகள் நடந்தன. இன்பமாகக் களித்த அந்த முப்பது நாட்களும் இன்னும் என் நினைவை விட்டு நீங்கவே இல்லை.

## செம்பவளத் தீவு

இலங்கைக்குச் செம்பவளத்தீவு என்பதும் ஒரு பெயராகும். பவளப் பாறைகள் கடலில் வாழும் சிறு பிராணிகளின் எலும்புக் கூடுகளால் உண்டாகின்றன. இப் பிராணிகள் குடிக்கும் உப்பு நீரிலிருந்து பெறப்படும் சுண்ணும்பு அவற்றின் உடலூடாகச் சென்று வயிரமான எலும்புத் தன்மையுடைய பவளப்பாறைகளாக மாறுகின்றன. இந்நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெறுவதால் பவளப் பாறைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. இலங்கைத் தீவும் இப்படியாகப் பாறையினுல் உண்டானதாகும்

ஓய்வு நேரங்களை இலக்கியத்துக்கே ஒதுக்கிவைத்து ஊக்கமுடன் உழைக்கும் இவ்விளங் கவிஞரின் சொந்தப் ''பெயர்'' அந்தோனிமுத்து என்பது. இவரது கவிதைகள் தேசிய முரசில் வெளிவந்துள்ளன.

# நிலைத்த எண்ணம்

—மட்டுநகர் முத்தழகு—

அன்பென்னும் சொல்லுக்கு உவமைகாட்ட
அணிகலனாய் யேசுபல கொடுமைபெற்றார்
பனிமழையில் பாலகனாய் அவதரித்தார்!
படுத்துறங்கப் பாவினத்தின் உரிமைபெற்றார்!

நாடாளும் பேராசை பிடித்தமன்னன்!
நாயாகத் தேடினான் யேசுவைத்தான்
வாடாத மலரானார் ஏசுநாதர்!
வாடியதோர் சருகானான் அந்தமன்னன்!

போதகராய்ப் பலபுதுமை செய்துவந்தார்!
''பழிதீர்க்க'' மறுகூட்டம் திட்டமிட்டார்!
ஆதாரம் காட்டாமல் அறைந்துகொல்ல
ஆட்டுமந்தைக் கூட்டத்தின் தலைவன்சொன்னான்

வேங்கைக்குள் வெள்ளாட்டுக் குட்டியைத்தான்
விளையாட்டுப் பொருளாக அவர்நினைத்தார்!
தேங்கிவைத்த வலிமைகெடப் பாரமான
''தீயவர்கள்!'' ஏற்றிவைத்தார் சிலுவையொன்றை

விழுந்தெழுந்து! பலமுறையும் வலுவிழந்தும்!
வசைவார்த்தை கசையடிகள் தொகைவிழுந்தும்
புழுவாகத் துடிக்கவைத்தே! அறைந்துசொன்னார்
''பழிகாறர்'' அவரெண்ணம் நிலைக்கவைத்தார்.

தேனமுத இலக்கிய மன்றம் 1962

கல்முனை—கிளை



இலக்கிய மன்றத்தின் செயற்குழு அங்கத்தவர்கள்

முன்வரிசை இடமிருந்து வலம் : செல்வி ம. பத்மாவதி, திருவாளர்கள் : கே. இராஜ
ரெத்தினம், த. இராஜதுரை, எஸ். கிருஷ்ணமூர்த்தி, செல்வி ந. குணநாயகி.

பின்வரிசை இடமிருந்து வலம் : செல்வி பொ. லோகிதலீலாவதி,
திரு. ஏ. குலசேகரம், ஜனுப் முகமது மூசா, திரு. கு. சண்முகம்,
செல்வி ஆர். ஞானமலர்.

மலையகத்து வட்டாரத்திலே கலைசிறக்கப் பாடுபடும் இக்கவிஞர் தன் 'காதல்' நினைவைக் கூறுகிறார் கேளுங்கள்.

# காதல் நினைவு

*—தமிழோவியன் பதுளை—*

மாதுளைப் பழத்தின் வண்ணம்
மங்கையின் சிவப்புக் கன்னம் !
மாதுளை மலரின் சிவப்பு
மங்கையின் மதுவூறு மிதழ்கள் !
மாதுளை விதைகள் வரிசை
மங்கையின் பற்கள் ! அந்த
மாதுளைப் பழத்தின் வடிவம்
மங்கையின் தனங்கள் காட்டும் !

❋

மாதவள் பெயரும் பொட்டு !
மான்விழி மீனாய் வெட்டும் !
சாதுவும் மயங்கிப் போவான்
சதிராடு மழகால் எனக்கோ
வாதையே யளித்து வந்தாள் !
வனிதையின் நினைப்பா லேக்கம் ;
ஏதையும் மறந்தேன் ! காதல்
எண்ணத்தில் மூழ்கித் துடித்தேன் ?

[ஒரு நாள்... ...!]

தேயிலை மலையி னுடேத்
திடுமென வீழு மருவியிற் ;
சேயுரை மொழியின் சுவையைச்
செப்பிடும் பொட்டும் தனியே.;
நேசமாய்ப் பார்த்தாள் ! தூர—
நின்றவ ளோடிக் காதற்
பாசமா(ய்) யவள் கரத்தைப்
பற்றினேன் ; அறைந்தாள் பொட்டு !

❋

கெஞ்சி மன்றாடி ; உண்மைக்
காதலைக் கேட்பா யென்று ;
அஞ்சியே உரைத்தேன் ! அவளோ—
"அதுநடக் காது" என்றென்
நெஞ்சினைச் சிதைத்தாள் ! காதல்
நினைப்பையுங் குலைத்தாள் ! எனினும் ;
வஞ்சியின் நினைவோ இன்னும்
வற்றாமல் என்னை வாட்டும் !

# அன்புள்ளம்

— எஸ். ராஜம் புஷ்பவனம் —

கூலி வேலை செய்யும் மூத்தமகன் கந்தனைக்காட்டிலும், கம்பெனியொன்றின் டைரக்டராக இருக்கும் இளையமகன் தியாகராசன் நன்றாக ஆதரிப்பான் என்று கொழும்புக்குப் போன நல்லம்மா. மீண்டும் கந்தனின் வீட்டுக்கே திரும்பி வரக்கூடியதாக அப்படி என்ன நடந்து விட்டது?

''செல்லம்! செல்லம்!......'' அதைத் தொடர்ந்து லொக்! லொக் கென்ற இருமல் ஒலி! கிழவியின் கண்கள் தன் அறைக்கு வெளியே தெரியும் நீண்ட கூடத்தின் கரையில் உள்ள சமையற் கட்டுள் நுழைந்தன. அவள் புருவங்கள் நெழிந்தன. வெறுப்புடன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள். பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது. கிழவியின் மருமகள் செல்லம் சமையற் கட்டிலிருந்து கிழவியை நோக்கி வந்தாள். ''கூப்பிட்டீர்களா? அம்மா'' ''ஆமா, நான் கூப்பிட்டா உன் காதில விழுமா? என்ன செய்ய உங்களுக்குப் பாரமாக் கிடக்கிறேனே. என்னைச் சொல்லனும்! ம்! அந்த முருகன் எப்ப தான் என்னை அழைப்பானோ?... தவித்த வாய்க்கு தண்ணி கொடுக்கக்கூட நாதி இல்லை!'' கிழவியின் வெறுப்பு, வார்த்தையாய் வடிவெடுத்து செல்லத்தின் உள்ளத்தைக் குத்தியது. அடி உதட்டை மடக்கிக் கடித்தவாறு பொறுமையாய் நின்றாள். மௌனமே கிழவியின் கோபத்தைத் தூண்டியது. ''நான் பேசினா கேட்கக்கூட யாரிருக்கிறா இங்கே'' என்றாள். அவளது மருமகள் செல்லம் எதுவும் பேசவில்லை. நீரை எடுத்துக் கொடுத்துவிட்டு அகன்றாள்.

கிழவியின் முணுமுணுப்பு அவளை வேதனை செய்தாலும் கிழவிகளின் வழக்கமிதுதான் என விட்டுவிடும் மனவியல்பைப் பெற்றிருந்தாள். அவள் விபரமறிந்து அவ் வீட்டு மருமகளானதிலிருந்து இன்று வரை கிழவியின் குணமறிந்து நடந்து வருபவள். கிழவி நல்லம்மா தன் அறையைப்பார்த்தாள். வலதுபக்கத்துச் சுவற்றில் அவள் கணவன் படம் மாட்டப்பட்டிருந்தது. அவள் கண்கள் அதை பார்த்ததும் பனித்தன. ''என்னை விட்டு விட்டுப் போய் விட்டீர்கள்... நான் படும் பாடு யாருக்குத் தெரியும்!'' திருப்தியே இல்லாத அவள் மனம் பழம் நினைவிலாழ்ந்தது.

திருக்கோணமலை துறைமுக வீதியில் தான் அவள் முதல் முதல் குடிவந்தாள். பத்து ஆண்டுகளை மகிழ்வுடன் கழித்தாள். பத்தாவது ஆண்டு எதிர்பாராத விதமாக விபத்தொன்றில் சிக்கி அவள் கணவன் உயிர் துறந்தான். சிறிய குழந்தைகளிருவரையும் வைத்துக்கொண்டு அவள் பட்ட பாடு கொஞ்சமா? தானே வெளியில் சென்று உழைத்து மக்களைக் காப்பாற்றினாள். மக்களைப் படிக்க வைத்தாள். ஊர் வாய் கண்டதெல்லாம் பேசியது. அஞ்சவில்லை அவள். மக்களை உத்தியோககாரர்களாக்குவது மட்டுமே அவள் லட்சியம். இலட்சியத் தாயாக மாறினாள். மூத்தவன் கந்தன். படிப்பு அவனுக்கு பரமவைரி. அவன் ஊர் சுற்றியாகித் தாயின் வெறுப்பைத் தேடிக் கொண்டான். நல்லம்மாவின் ஆசைக் கனவுகள் சிதைந்தன! கொடுத்ததுதானே கிடைக்கும். ஆனால் இளையவன் தியாகராசன். அண்ணனுக்கு நேர் மாறாக நடந்தான். படிப்பில் சூடிகையாக விளங்கினான். முதலாவதாகத் தேறித் தாயை மகிழ்வித்தான். இளையவன் ''கெட்டிக்காரன்'' என்று யாவரும் கூறும்போது நல்லம்மா களிப்படைவாள். தனி அன்பைச் செலுத்தி வந்தாள். இரண்டும் அவள் கண்கள்தான், ஆனால் தியாகராசா மேல் அவள் அலாதி அன்பு செலுத்தினாள். காலச்சக்கரம் சுழன்றது அரசாங்க உதவிப்

பணம் பெற்று மேல் படிப்பை தொடர்ந்தான் தியாகராசன். துறைமுகத்திற்கு வேலே தேடிக் கந்தன் போனுன். தற்போது கொழும்பில் பிரபல கம்பெனி ஒன்றின் டைரக்டராகக் கடமையாற்றுகிறுன். பங்களாவாசம். தியாகுவிற்கு ஓர் குறைவுமில்லே! அவனே எண்ணும் போது பெருமையால் அவள் உள்ளம் பூரிக்கிறது. அவன் பணக்காரனுனதும் அவனுகவே தனக்கு விரும்பிய பெண் உஷாவை மணந்து கொண்டான். தியாகுவின் அதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணிப் பூரித்தாள். கந்தன் ஆயிரக்கணக்கான துறைமுகத் தொழிலாளர்களில் ஒருவனுனுன் வறுமையில் பிறந்து வளர்ந்தவள் தான் நல்லம்மா. ஆனுல் தற்போதெல்லாம் அவள் எதிலும் திருப்தி காணவில்லே. எதற்கும் முணுமுணுப்பு! கந்தனும் அவன் மனேவி செல்லமும் அன்புடன் கவனித்து வந்தாலும் இளேயவன் மேல்தான் அவள் அன்பு சென்றது. ஏற்கனவே உழைத்து ஓடாய்ப்போயிருந்த நல்லம்மாவிற்கு ஆஸ்மாவியாதி வேறு பிடித்துக் கொண்டது.

இருமல் ஒன்று வந்து அவள் சிந்தனேத் தொடரை அறுத்தது. பாயில் படுக்கச் சென்றவள் எழுந்து அமர்ந்தாள். மங்கலான வெளிச்சம் அவ்வறையெங்கும் வியாபித்திருந்தது. சுவாமி படங்களும் சில தேசத் தலேவர்களின் படங்களும் மாட்டப்பட்டிருந்தன. சுவரின் வலப்பக்கம் அவள் கணவன் படம். அறையின் மூலேயில் ஓர் தேக்க மரபீரோ; அறை நடுவில் பாய்! இதைத் தவிர அவ்வறையில் வேறெருு பொருளுமில்லே. ''பாட்டி!'' என்றவாறு ஓடி வந்து மேலே விழுந்தான் சின்னப் பேரன். 'டேய்! ஏண்டா மேலே விழற! தள்ளியிரு! நான் என்ன மரமா! வந்து விழறியே!'' என்று கிழவி பொரிந்தாள். அன்புடன் பற்றி அவள் கழுத்தை வளேத்த பிஞ்சுக் கரங்களே விடுவித்துக் கோபமாக விழித்தாள். ''ம்... கொஞ்ச நேரம் நிம்மதியாக இருக்க விடமாட்டான்கள்... இளேயவனுக்கு கடிதம் போட்டிருக்கு...வாரானே என்னவோ? வந்தாக் கூடப் போயிடனும் என்றவாறு படுக்கையில் சாய்ந்தாள்.

வாசலில் கார் வந்து நிற்கிற சப்தம்கேட்டதும் தட்டித் தடுமாறி எழுந்தமர்ந்தாள் வாசலேக் கடந்து விரைவாக வந்தான் தியாகராசா! ''அம்மா!'' என்றவன் ஓடிவந்து தாயினருகே அமர்ந்தான். கிழவியின் முகம் பிரகாசமானது. ''டேய் தம்பி! சித்தப் பாவுக்கு ஒரு கதிரை எடுத்து வந்து போடு'' ''வேண்டாம் அம்மா, ஏனம்மா இப்படி இளேத்துப் போய் விட்டீங்க! போன முறை பார்த்ததைவிட ரொம்ப மெலிந்து போய் இருக்கிறீர்களே'' ''ஆமாப்பா! உன் அண்ணு சம்பளத்தில் எல்லாம் கவனிக்க முடியுமா? ஏதோ இந்த அளவாவது காப்பாத்துருனே!'' கிழவி இதைக் கூறும்போது தியாகராசாவின் முகம் கறுத்தது. கைநிறைய உழைத்தும் தான் தாயைக் கவனிக்கவில்லே யென்று தாய் மறைமுகமாய்க் கூறுகிருளா? அவன் நிமிர்ந்தான். ''அம்மா! உங்களே அழைத்துக் கொண்டு போகத்தான் சும்மாவந்திருக்கிறேன். ''என்ன?'' ''ஆமா! அம்மா உடல் தேறிய பிறகு இங்கு வரலாம்'' கிழவியின் உள்ளம் மகிழ்வால் துள்ளியது. ''ஆமாப்பா! நான் கூட அதைத்தான் நினேத்தேன்.'' அதன்பின் கந்தன் வேலே விட்டு வந்தான். தாயை எவ்வளவோ தடுத்தும், அவள் தம்பியுடன் புறப்பட்டு விட்டாள். இனி அவளேத் தடுக்க முடியாது. அம்மாவாவது அவன் வாழ்க்கையை கண் குளிர கண்டு விட்டு வரட்டும். என்னேயும், என் குழந்தைகளேயும் தான் விரும்பவில்லே, அம்மாவாவது அவன் உழைப்பில் உண்டு வரட்டும் என்ற சிந்தனேயுடன் தாயை வழியனுப்பி வைத்தான் கந்தன்.


கொழும்பில் வெள்ளவத்தைக் கடலோரத்தை நோக்கிச்செல்லும் பாதையில் ஓர் பெரிய பங்களா! மாடிக்கட்டடத்தின் முன் அவள் சென்றகார் நின்றது. அது தான் தியாகுவின் வீடென்றதும் அவள் அடைந்த வியப்பிற்கோர் அளவில்லே! அவளது இரண்டாவது மருமகள் உஷா வரவேற்ருள். மேலே நாட்டு வழக்கத்தை ஒட்டியே அவள் ஆடை அணிகள் காட்சி அளித்தன. அவள் நல்லம்மாவிற்கு தனியாகவே அறை ஒன்றை ஒதுக்கிக் கொடுத்தாள்! தனக்கு அளிக்கப்பட்ட அறையுள் நுழைந்தாள். அழகிய மெத்தை வைத்துத் தைத்தகட்டில்! கண்ணுடிபோல் பளபளக்கும் மேஜை, நாற்காலிகள். ஜன்னலே எதிர்த்தாற் போல் கட்டில் போடப்பட்டிருந்தது. வெளியே சீமை

மலர்த் தோட்டம். கற்கள் பரவி, இடை வெளிகளில் பாத்தி கட்டி அவைகளில் பூஞ் செடிகள் நடப்பட்டிருந்தன. டேய்ஸி-- பாப்பிடேய்ஸி, சீனியர் ரோஜா போன்ற மலர்களும் புன்முறுவல் பூத்து நின்றன. எங்கும் தூசு தும்பின்றி தூய்மை! வேலைக் காரர்கள் தோட்டக்காரன் என்று பணியாட் கள் பலர். அவர்கள் நல்லம்மாவிடம் காட்டிய மரியாதை அளவற்றது. இவை களை எண்ணி மகிழும் கிழவி, தன் ஆஸ்மா கூட சுகமாகி விட்டதாக உணர்ந்தாள். அறையிலேயே அமர்ந்திருந்து ஒரு வாரத்தை மகிழ்வுடன் கழித்தாள். இடையே எப்போ தாவது ஓர் முறை வந்து கால் மணி நேரம் பேசி விட்டுச் செல்வான் தியாகு! ஆனால் இருந்து விட்டு தென்படும் உஷர்வோ மிக குறைவாகவே உரையாடி விட்டு செல் வாள். மருமகள் உஷா செல்லம் போல் உணவு பரிமாறிக் கவனிக்க வில்லை என்று அவள் எண்ணி வருந்தினாலும் மறுகணம் மனதைத் தேற்றிக் கொள்வாள். ஆமாம், அவளுக்கு வீட்டுக்குள்ளேதான் வேலை! பாவம்! இவள் எங்கே யெல்லாம் போக வேண்டியிருக்கு போக வேண்டிய இடத்திற் கெல்லாம் போய் வாராள். இந்த வேலைக் காரர்களை கவனிக்க நேரமில்லை! என்னைக் கவனிக்க ஏது நேரம்!''

மேசைமீது வைத்திருந்த பாலும், பழங் களும், அப்படியே இருந்தன. அதைப் பார்த்ததும் அவளுக்கு செல்லத்தின் குழந்தைகள் நினைவு வந்தது. சின்னவ னுக்குப் பழம் என்றால் உயிர். இங்கு வந்து ஏன் இந்தக் குழந்தைகள் தொந்தரவு பண் ணுவதில்லை! உஷா சொல்லியிருப்பாள் பாட்டியை தொந்தரவு பண்ணாதே என்று அதுதான் வரவில்லை! செல்லம் அப்படிச் சொன்னாலும் அதுகள் விடாது...சீ! அது களும் குழந்தைகளா?

அவ்வறை வாசலில் வந்து உள்ளே எட்டிப் பார்த்தாள் நான்கு வயதுச் சிறுமி பேபி! ''இங்க வாம்மா'' என்று வாஞ்சை யுடன் அழைத்தாள் நல்லம்மா. துரு துரு வென்று இருந்த பேபியின் கண்கள் அவ் வறை முழுதும் நோட்டம் விட்டன. ''நான் வரமாட்டேன்'' ''ஏன்?'' ''அம்மா பேசுவா'' ''சரியம்மா! ஒருக்கா வந்திட்டு போ'' குடு குடு வென்றோடிச் சென்று வாரியணைத்தாள். குழந்தையின் மாம்பழக் கன்னத்தில் முத்தம் கொடுத்தாள் ''பால் வேணுமா?'' ''வேண்டாம்'' குழந்தை அவள் பிடியிலிருந்து திமிறியது. நல்லம்மா அணைத்தவாறே கெஞ்சிப் பேசினாள் ''பேபி! ஒரு பழம் சாப்பிடுமா'' ''ம் உஹூம் அம்மா அடிப்பா'' ''ஏன் பழம் சாப்பிட்டா அம்மா அடிப்பாளா?'' ''இல்லை உன் கிட் டவாங்கினா அடிப்பா பாட்டி!'' மழலைச் சொல்லில்தான் குழந்தை கூறியது. ஏன் இங்கு வரக் கூடாதுன்னு சொல்லி வைத் தாளா?'' துடிக்கும் உள்ளத்தோடு கேட் டாள். நல்லம்மா! ''ஆமா பாட்டி; இங்க வரக்கூடாதுன்னு சொன்னா; உன் ஆஸ்மா எனக்கும் ஒட்டிக்கொள்ளுமாம்'' வேல் ஒன்று பாய்ந்தது நல்லம்மாவின் இதயத்தை தாக்கவதற்கு? சின்னஞ்சிறு குழந்தை ஒன்று அவளுக்கு புரியாததை புரியவைத்து விட்டது. உஷா பழகும் விதமும் குழந்தை களைப் பிரிக்கும் விதமும் அப்போதுதான் அவளுக்குத் தெள்ளத் தெரிந்தது. திமிறிக் கொண்டு ஓடினாள் பேபி. அவள் ஓடும்வேகத் தில் கிழவியின்கையிலிருந்த பழம் நிலத்தில் விழுந்தது. அதுஅவளைப் பார்த்துச் சிரிப்பது போல் இருந்தது. இங்கு அவள் அன்பு யாருக்கும் வேண்டாத பொருள். ஆனால் செல்லத்தின் குழந்தைகள் அவள் அன்பிற் காக ஏங்குகின்றன. கிழவியின் கண்கள் கலங்கின. தனிமை அவளைச் சுட்டது. செல் லத்தின் களங்கமற்ற சேவை அவளைச் சித் திரவதை செய்வதுபோல் நினைவில் தோன் றின. அக் குடும்பத்துடன் ஒன்றி வாழும் வாழ்வே அமைதியைத் தரும் என்று எண்ணினாள். மனதில் கனமான சுமை ஏறி யது. தியாகுவின் வருகைக்காகக் காத்தி ருந்தாள். தியாகு வந்து எவ்வளவோ தடுத் தும் புறப்பட்டுவிட்டாள். ''மாமிக்கு இங்கு என்ன குறை'' என்றாள் உஷா, ''ஒன்று மில்லையம்மா! சிறு குழந்தைகள் என்னைத் தேடும். செல்லத்திற்கு ஒன்றும் அடங்காது அவளைப் பாடாய்ப் படுத்தும்'' ''மாமிக்கு செல்லம் அக்காமேல்தான் அன்பு'' கிழவி யின் உதடுகள் துடித்தன. அனுபவசாலி யானதால் பொறுமையுடன் ''இன்னொரு நாள் வந்து இங்கேயே தங்கி விடுகிறேனே? வரட்டுமா?'' விடை பெற்றுக் கொண்டாள் நல்லம்மா!

தன் பாயில் அமர்ந்திருக்கிறாள் நல்லம்மா. அவளது சின்னப் பேரன் அவளது கழுத்தை தன் கரங்களால் சுற்றி அணைத்தபடி சாய்ந்து நிற்கிறான். ''செல்லம்! செல்லம்!'' உரிமையுடன் குரல் கொடுக்கிறாள் நல்லம்மா. அடுக்களையிலிருந்து வெளியே வந்தவள் ''என்னம்மா'' என்றவாறு அருகே வருகிறாள். ''வெற்றிலைத் தட்டத்தை எடம்மா'' வெற்றிலைத் தட்டத்தை எடுத்து வைக்கிறாள். ''எண்டா பாட்டியை பாடாய்ப் படுத்துகிறாய்?'' ''அவன் இருக்கட்டும்! வேறு யார் கிட்டே போய் விளையாடுவான்'' நல்லம்மா தானா? இப்படிப்பேசுகிறாள். செல்லம் திகைப்பும் வியப்பும் கலந்த பார்வையுடன் கிழவியைப் பார்த்துவிட்டு வெளியே செல்கிறாள். ''முருகா!'' மனமுருகிக் கூவுகிறாள் கிழவி. பட்டும், மெத்தையும் பணியாட்களின் உபசாரமும், பார்வையும், தராத சுகத்தை அந்தச் சிறிய அறையில் காண்கிறாள்; அங்கு செல்லத்தின் அன்பும், உரிமையும் அவளை உன்னத ஸ்தானத்தில் வைக்கிறது. இங்கு சுதந்திரம் உண்டு; கிழவி நல்லம்மா ஏதோ முணுமுணுக்கிறாள். சற்றுத் தொலைவிலுள்ள முருகன் கோவில்மணி அடித்து ஓய்கிறது. ''பாட்டி இந்தா திருநீறு,'' பெரிய பேரன் பிஞ்சு விரல்களை விரிக்கிறான். அதனுள் வெண்திருநீறு சற்று நீர்ப்பதமாய் காட்சியளிக்கிறது. அதை ஆர்வத்துடன் வாங்குகிறாள், அவள் கண்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிகிறது. பேரன்களை அணைத்துக் கொள்கிறாள். அவள் மனம் அவ்விரு பிஞ்சு உள்ளங்களின் அன்பில் ஒன்றுகிறது. அங்கு அமைதி, ஆனந்தம் பிறக்கிறது. அவ்வன்புள்ளங்களின் அன்பிலே இறைவனைக் கண்டாற் போல் ஆனந்தம் கொள்கிறாள் நல்லம்மா.



## யானையும் திமிங்கலமும்

பூமியில் வாழும் மிருகங்களில் பெரியது யானை. நீரில் வாழும் பிராணிகளில் பெரியது திமிங்கலம். இதனை நீங்கள் அறிவீர்கள். இவை இரண்டிலும் எடை கூடியது எது தெரியுமா? திமிங்கலம்தான். ஒரு யானையின் சராசரி நிறை ஆறுதொன். ஒரு திமிங்கலத்தின் நிறை யானையின் நிறையின் முப்பது மடங்கு அதாவது 180 தொன். ஒரு திமிங்கலத்திலிருந்து 500 கலன் எண்ணெய் எடுக்க முடியுமென்று கூறப்படுகிறது.

◉ மனோரம்மியமான
பலகாரவகைகள்

◉ மனத்திருப்திதரும்
சாப்பாட்டு வகைகள்

இன்றே ஒரு முறை
விஜயஞ் செய்யுங்கள்.

**மதரூஸ் கபே**

திருமலை வீதி, மட்டக்களப்பு

**For All Your Daily Needs**
**in**
Groceries, Provisions
Patent Medicines
Milk foods
&
Beauty Products
at
Keenest Prices

VISIT
**GAMINI**
**STORES**
(Prop. K. H. E. JAYASEKARA)
15, Trinco Rd, Batticaloa.

1. Globe Brand Butter
2. Anchor Brand Butter
3. திறம் சுருட்டு புகையிலை
4. மற்றும் எல்லாவித சாய்ப்புச் சாமான்கள்

எங்களிடம் மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்

**PARMESWRAI**
**STORES**
1, Trinco Rd. Batticaloa
Phone No: 383

விரும்பி உண்ணச் சிறந்த
'புரியாணி'
ஆனந்தமாக அருந்துவதற்கு
'ஐஸ்கிரீம்'
இடைநேர உணவான
'கொத்துரொட்டி'
இவைபோன்ற பல
ருசிகரமான ஆகாரங்களை
ரசித்து உண்பதற்கு
ஒருமுறை
விஜயஞ்செய்து பாருங்கள்.

**மஜீதியா**
**ரெஸ்ரோரண்ட்**

20, திருமலை வீதி மட்டக்களப்பு

கிழக்கிலங்கையைச் சேர்ந்த களுவாஞ்சி குடியில் வாழும் எஸ். ஏரம்ப மூர்த்தி என்னும் இயற் பெயரையுடைய இக்கவிஞர் தனது நெஞ்சில் முகிழ்ந்த மலர்களிலொன்றை இங்கே விரித்துக் காட்டுகிறார்.

# நெஞ்சில் முகிழ்ந்த மலர்

—எருவில்மூர்த்தி—

இதயத்தை விழிகளெனும் வேலாற் கிண்டி
இளநகையால் முளையொன்றை ஊன்றிக் காதற்
பதியத்தை உருவாக்கிப் பாசநீரைப்
பக்குவமாய்ப் பெய்திட்ட பருவமங்கை
உதயத்துத் தாரகைபோல் ஒளிர்ந்து வாழ்வில்
உறவாம்நல் யாழ்மீட்டி உவக்குமுன்னம்
விதிவைத்த பொறியினுக்கோர் இலக்கதாகி
வேதனையை எனக்கீந்தே விலகிச்சென்றாள்.

நெஞ்சத்திற் பதிபட்ட முளையோ என்றன்
நிம்மதியை உணவாக்கிக் கொண்டேகாலம்
கொஞ்சத்துட் கருத்தெங்கும் கிளைகள் வீசிக்
கொடுந்துயரத் துளிர்விட்டு வளர்ந்ததாலே
இஞ்சித்தும் அமைதியினைக் காணுகிக்
கிழித்தெறிந்த நார்போலத் துவண்டே ஓர்நாள்
மஞ்சத்திற் செயலற்றுக் கிடந்த வேளை
மலரொன்றை உள்ளத்தே மலரக் கண்டேன் !

காதலெனுஞ் செடியினிலே பூத்த அந்தக்
கவிதையெனுங் கவின்மலரை நுகர்ந்தபோது
ஓதரிய சுகங்கண்டேன் ! உவகைகொண்டேன் !
உள்ளத்தைக் கவர்ந்தவளை அதிலே கண்டேன் !
சீதளப் பொன் மதிவதனம், செயலார் கண்கள்
செவ்விதழ்கள் எல்லாமே சிரிக்குங்காட்சி !
மேதினியில் எனைமேலும் வாழச் செய்ய
மென்மலராய் நெஞ்சத்தே முகிழ்ந்தாள் போலும் !

கட்டையிலே எனைஏற்றக் காட்டைநோக்கிக்
கால்எட்டுச் சுமந்தேகுங் காலம்மட்டுந்
தொட்டிடுமா இனித்தொல்லை ? அதுதான் இல்லை !
துணைக்கவள்தான் இல்லையெனினும் அவள் என்நெஞ்சில்
நட்ட செடி நாள்தோறும் கவிதை பூக்கும்
நானவற்றிற் சொக்கிநிறை இன்பங் காண்பேன் !
கெட்டலையேன் ஒருபோதும் ! ஆமாம், அந்தக்
கிளையொன்றிற் பூத்ததுதான் இதுவும் ! –நன்று ?

''ராட்சதன்'' என்று அலறிய அவளின்வாய் ''ராசாவே'' என்று குழறுகிறது. இதுதான் க்ஷணப் பித்தமா?

# க்ஷணப் பித்தம்

— எம். ஏ. ரஹ்மான் —

**ப**ஞ்சைகள் வாழும் கொலனி. கொட்டைப்பாக்குக் குடிசைகள். ஒன்றிலிருந்து பிரளய காலத்து இரைச்சல் வெளிவருகின்றது. அடி ஆக்கினை பொறுக்கமுடியாது புழுவாய்த் துடித்து, கோட்டானக அலறும் பெண்.

பூசாரி முன்னுல் ஆடிய பேய்பிடித்த பெண்ணுட்டம் தலைவிரி கோலமாக வீதிக்கு அவள் ஓடிவருகிருள். வேடிக்கை பார்க்கும் கூட்டத்தின் மத்தியில் புதிதாகப் பிறந்துவிட்ட வீரம்.

''ராட்சதன். என்னைக் கொல்லப் பாக்குருன். இப்பவே பொலீசுக்குப் போய் இவனை மறியல் வீட்டுக்கு அனுப்பாட்டி நானும் பத்தினி இல்லே...'' பத்ரகாளிக் குதியாட்டம்.

இரைச்சல் கரைந்து நிசப்தம் குடியேறுகிறது. இந்தக் காட்சியினைக் குடிசை வாசலில் நின்று பார்த்த கணவன் கதவினை அடைக்கிருன். கூட்டம் கலைகிறது.

× × ×

**அ**வனுடைய உள்ளக் குகையில், 'இராட்சதன் ; போலீஸ் ; மறியல் வீடு' என்ற சொற்கள் மடியாது எதிரொலித்துக் கொண்டேயிருக்கின்றன. எதிரொலியின் கொடூரத்தில் துளிர்க்கும் விரக்தி... ஒரு க்ஷணத்தின் பின்னத்தில் ஜனித்து, பரிணமித்து, பூதாகரமாக விரியும் எண்ணச் சுழற்சியில் எதிர்ப்பின்றியே அலைக் கழிக்கப்படுகின்ருன். தர்க்கப் பிரமேயங்கள் அஸ்தமிக்க உணர்ச்சி உந்தலில் கிரியை தொடங்குகிறது.

''ஐயோ என் ராசா தூக்குப் போட்டுக்கிட்டாரே! ஓடியாந்து காப்பாத்துங்கோ,'' என்ற அலறல் அப்பிராந்திய மெல்லாம் பரவுகிறது.

மீண்டும் கூட்டம் சேருகின்றது.

ஓர் இளைஞன் பாய்ந்து சென்று குடிசையின் கதவைப் பெயர்த்துத் தள்ளுகிருன். நிலத்தில் கவிழ்ந்து கிடந்த நாற்காலியை நிமிர்த்தி வைத்து உததரத்தில் தொங்கிய தூக்குக் கயிற்றினை அறுத்தெடுக்கின்ருன். தற்கொலைப்பாதையை நாடியவனைப் பக்குவமாகக் கீழே இறக்கி வைக்கின்ருன். கழுத்தில் சுருண்டு கிடந்த சுருகுதடத்தினை அவிழ்க்கின்ருன்.

''நல்லகாலம். முடிச்சுச் சரியாக விழவில்லை. ஆள்தப்பிடுவான்,'' என்று ஓர் அனுபவஸ்தர் சொல்லுகின்ருர்.

சிகிச்சை நடைபெறுகின்றது.

மூச்சு மீளுகின்றது. விழிகள் திறக்கின்றன; வியப்புடன் கூட்டத்தைத் துளாவுகின்றன.

''எனக்குத் தாலிப்பிச்சை தந்த புண்ணியவான் இவர்தான்'' என்று அவள் ஓர் இளைஞனைக் காட்டுகிருள்.

இரு கரங்களும் தாமாகச் சேருகின்றன. தலையைச் சற்றே உயர்த்தி, விழிகளில் நீர்மல்கக் கரங்கூப்பிச் சேவிக்கின்ருள்.

கூட்டம் கலைகின்றது.

# தேனமுதம்

—நாகூர். ஏ. பாவா—

பச்சைப் புளிமாங்காய் பாக்குவெட்டி யால்வெட்டி
மச்சியெனக் கீந்தாள் மனமுவந்து — இச்சையாய்
நான்புசித்தேன் நன்றாக நாவசைத்தே பார்த்தவுடன்
தேன்கனிநே ராகுமின்பத் தீன்.

கத்திக் குரலெழுப்புங் கைத்தறியில் நூல்நூற்றுப்
பத்து நிமிடத்தில் பொத்துவாள் — அத்தாங்கு
வையம் சிறக்கவே வாழ்வாளென் மச்சியின்
கையையும் தின்னுமோ களி.

பாளை வெடிசிரிப்பும் பவழ இதழ்த்துடிப்பும்
வாழை மடல்போல் வடிவழகும் - பாழைபோல்
பைத்தியமும் பேதலிக்கும் பாவை அவள் குறும்பு
அத்தனையும் போதை எனக்கு.

ஈரக்கை தாவுகையில் என்மெய் நடுக்கமுறும்
சேரப் பொழிமுத்தஞ் சிந்தியவாய் – ஊறியே
வெள்ளக்கா டாகி வெறியாடல் ஆட்டிடுமே
ஒல்லுமெந்தன் மச்சியென ஓது.

ஆடல் அழகி அவளெனது மச்சிபனங்
கூடலுள்ளே நின்றிடித்துக் கொட்டுகின்ற — கோடை
மழையின் குளிராலே மக்கி மசிந்து
தழைபோல் விழுந்தாளென் தாழ்.




◉ றலி பைசிக்கிள்

◉ உஷா தையல் மெஷின்

◉ லோட்டஸ் டயர்

◉ லோட்டஸ் ரியூப்



மற்றும்

◉ கல்வனைஸ் கூரைத்தகடுகள் ◉ அலுமேனியன் கூரைத்தகடுகள்

எல்லாவித இரும்புச் சாமான்களும்

கல்முனையில் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம்

# கொழும்பு ஸ்டோர்ஸ்

பொலிஸ் வீதி, கல்முனை.
(பஸ் நிலையத்திற்கு முன்பு)

---

# ஒலியை ரசியுங்கள்.

திருமண வைபவங்களா ? பொதுக்கூட்டங்களா ??

களியாட்ட விழாக்களா ???

## எதுவானாலும் சரி

மிகவும் தெளிவான முறையில், புதுப் புது இசைத்தட்டுகளுடன் ஒலிபெருக்கிகள் தேவையென்றால் ஒருமுறை விஜயம் செய்து எங்கள் ஒலிபெருக்கிகளின் ஒலியை ரசித்துப்பாருங்கள்.

விபரங்களுக்கு :

# ரேடியோ எலக்றோண்ஸ்

30, பொலிஸ் றோட், கல்முனை.

# பொலநறுவைப் பிரயாணம்

—கே. இரா—

கல்முனே கொமேசியல் கல்லூரியிலே ஆசிரியராகப் பணி புரியும் இவர் கல்முனே தேனமுத இலக்கிய மன்றத்தின் தலைவராகவும் இருந்து வருகிறார். கே. இராஜரெத்தினம் என்பது இவரது சொந்தப் பெயர். தனது பொலனறுவைப் பிரயாண அனுபவங்களை இக்கட்டுரையில் அழகாக எடுத்துக் கூறுகிறார்.

அன்று சனிக்கிழமை அதாவது, சென்ற ஆனி மாதம் இருபத்து மூன்றும் நாள் காலை 7-30 மணியளவில் மட்டக்களப்பு, கல்முனை, வர்த்தகக் கல்லூரி ஸ்தாபகர் திருமதி. இரத்தினசிங்கம் அவர்கள் தலைமையில் அதிபர், நான்கு ஆசிரியர்கள் பிரயாண ஒழுங்கு பற்றி முக்கிய பொறுப்பை எடுத்துக் கொண்ட திரு. திமிலை மகாலிங்கம், மாணவ மாணவிகள் உட்பட நாற்பத்தைந்து உருப்படிகளையும் உருப்படிகளுக்கு வேண்டிய உணவுப் பொருட்கள், சிற்றுண்டிகள் யாவற்றையும் தாங்கிக் கொண்டு ஜா...எல் உல்லாசப் பிரயாண பஸ் திருமலை வீதியிலே தனது பவனியை உல்லாசமாகவே ஏற்படுத்திச் சென்று கொண்டிருந்தது. உற்சாகங் கொண்ட மாணவ. மாணவிகளின் இனிய கானங்களுக்கு பக்கவாத்தியங்களுடன் சேர்ந்து பஸ்சில் கட்டியிருந்த எங்கள் வர்த்தகக் கல்லூரியின் கொடியும் தன் உற்சாகத்தைக் காட்டுவதற்காகவோ, என்னவோ ஓய்வில்லாமல் பட, படவெனக் கைகொட்டுவதுபோல் கொட்டிக் காற்றிடையே மிதந்து சென்றது.

சென்று கொண்டிருந்த பஸ் சடாரென ஒரு ''பிரேக்கைப்'' போட்டு ''ம்'' என்று சத்தத்துடன் நின்றது. நேரம் 8-35. பாட்டுக்கள் தாளங்கள் போட்டுக் களைத்த பருவம் பசி எடுத்தது. ஆனல் வெளியே சொல்லிக் கொள்ள அவ்வளவு நன்றாயில்லை. இதே நிலைதான் பஸ்சுக்கும் ஏற்பட்டது. அதற்குத் தண்ணீர் விடாய் போலும். நின்ற இடத்தைப் பார்த்தோம். கிரான். ஆமாம் அருகில்தான் ஆச்சிரமும் இருந்தது. காலைச் சாப்பாட்டை இங்கே முடித்துக் கொள்ளலாமே என்று ஒரு தினுசாகச் சொல்லுவதும், சொல்லாததுமாய் இழுக்கப் பசியின் அகோரம் தாங்காதவர்களெல்லாம் ஓ...ஓ.. இங்கேயே முடித்துக் கொண்டால் இலேசாகி விடுமென்று இறங்கிக் கொண்டனர். ஆச்சிரமத்தினுள் சென்று நாங்கள் தயாராகக் கொண்டு போன காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டோம். மிகுதியாயும் கிடந்தது. அதையும் எடுத்துச் சென்றோம். ஆபத்துக்குத் தேவைதானே.

கிரானை விட்டு 9-00 மணிக்கு ஒருவரையும் வெளிவிடாமல் பஸ் உள்ளடக்கிக் கொண்டு புறப்பட்டது. பாடல்கள், ஆடல்கள் எல்லாம் நடந்து கொண்டிருக்க பஸ்சின் சக்கரங்கள் இலேசாக உருண்டு கொண்டிருந்தன. ஒரு பகுதியில் இனிய கானம். மறுபகுதியில் ஆட்டம், நடுப்பகுதியில் டப்பிளாச் சமா. இந்தச் சமாவினுல் ஒரு ''டப்பிளர்'' படார். நபர் காலைச் சாப்பாட்டை ஜாஸ்தியாகப் போட்டு விட்டாரோ என்னவோ இப்படியாக நேரம் போனதே தெரியாமல் நாங்களும் எங்கள் விளையாட்டைக் காட்டப் பஸ்சும், பார்க்க வேண்டிய பொலநறுவைப் பால் பண்ணையைக் கடந்து இரண்டு மூன்று சங்கிலி சென்று விட்டது. இதில் இருந்து ஒருவர் இதைக் கவனித்தார் போலும். உடனே ''பால்ப் பண்ணை, பால்ப்பண்ணை'' என்றார். இதென்னடா இது என்று அப்போதுதான் பார்த்தோம். பாற் பண்ணையைப் பஸ் கடந்து விட்டது. பின் திரும்பிப் பாற் பண்ணையைப்11-50 க்கு அடைந்தோம். சூடு காட்டியபின் குளிர்ச்சியாக்கப்பட்ட பால் பைந் நாற்பது சதவீதம் எங்கள் அதிபர் வாங்கித்தர ஒவ்வொருவரும் இரண்டு மூன்று ''கிளாஸ்'' பருகிக் கொண்டோம்.

அருந்திய நேரம் பால் அமிர்தமாகத் தானிருந்தது. எங்களுக்குப் பண்ணையில் சம்பந்தப்பட்ட இருவர் பலதைப் பற்றியும் விளக்கிக் கூறினர்கள். ஒரு அழகான பெரிய அரபியக் குதிரை, ''கேப்'' மாடுகள் பலவற்றையும் பார்த்து வியந்து விட்டுப் பண்ணையிலிருந்து 12-20 க்கு விடை பெற்றேம். எங்கள் பாட்டும், ஆட்டும், பஸ் பொல நறுவை வாடிவீட்டெதிரில் போய் நின்றதும் ஒய்ந்தது. நேரம் 12-30 எல்லோரும் வெளியிறங்கினேம்.

பராக்கிரம சமுத்திரம், அதைச் சுற்றிய பரந்த அணைக்கட்டு. அருகில் வாடி வீடு. இனிமையான காற்று உல்லாசப் பிரயாணிகள் வருவதும் போவதும். இது வாடி வீட்டினெதிர்க் காட்சி. பராக்கிரம சமுத்திரத்தின் மத்தியிலே இயற்கையோடு இயைந்து ஒரு பட்டமரம். சுற்றுப்புறம் முற்றிலும், இயற்கை அன்னையின் எதிரொலி. உண்மையிலே எங்களை மறக்க வைக்கும் உல்லாசம்தான், வாடிவீடா? இன்பபுரி. இவ்வுல்லாசச் சூழலிலே பசியை மறந்த எங்களுக்குச் சாப்பாடு பற்றிய நினைவேயில்லை. இவ்வுல்லாசச் சூழலிலே நினைவிருந்தவர்கள் நினைவூட்டினர்கள். ஆயத்தமானேம். இதனிடையில் இன்னுமொரு உல்லாசப் பிரயாணப் பஸ்சும் எங்களருகில் வந்து நின்றது. நேரம் போனதே தெரியவில்லை. சிலர் சாப்பாட்டை மறக்க இன்னுமொரு சந்தர்ப்பம். அவ்வெழில் தங்கிய இடத்தில் பல படங்களை எடுத்துக் கொண்டோம். சாப்பாடு ஒருவாறு முடிந்தது. இடியப்பமும் இறைச்சிக் கறியும்தான் எங்கள் மதிய உணவு. கேட்கவா வேண்டும். போட்டுக் கட்டினேம். சிலர் நடக்க இயலாப் பருவம். மதிய போசனத்துக்குப் பிறகு ''டப்பிளா'' உபயோகித்த இடமெல்லாம் குறிப்பிட்ட சிலரே உபயோகித்தார்கள். இல்லையேல் அதன் கதியும் வேருக இருக்கலாம்.

பக்கத்துப் பிரயாணிகளுக்கெல்லாம் கைகளைக் காட்டிக் கொண்டு வாடி வீட்டடியை விட்டு 1-40க்கு பஸ் விருப்பமின்மையோடு இழுபட்டது. எங்களுக்கெல்லாம் அதே ஏக்கம்தான். பஸ் புராதன கட்டிடங்களின் மத்தியில் பெருமூச்சொன்று விட்டுக்கொண்டு நின்றது. ஒவ்வொரு இடமாகப் பார்த்தோம். அந்நாளைய அரசர்களின் மாண்பையும் திறனையும் எடுத்துக் காட்டும் ஒவ்வொரு இடங்களையும் இப்போது இருப்பதைவிடத் திறமையாக நம் அரசினர் பாதுகாத்ததனுல்தான் நம் பின் சந்ததியினரும் இவர்களின் உண்மைத் திறனை உணர ஏதுவாக இருக்கும். இளவரசிகள் குளிக்குமிடம், உபசரணை மண்டபம், கைவேலை, கற்றூண்கள், சிற்ப வேலைகள், ஆகா... என்னே திறமை. கோயில்கள். டகோபாக்கள். ஆலயங்கள் இவையெல்லாம் நம் ஆதிகால அரசர்களின் திறனையன்றே எடுத்துச் காட்டுகிறது. அங்கிருக்கும் சிலைகளை நோக்குங்கால் பக்தியும் பாவனையும்தான் மேலிடுகிறது. மனிதன் தன் கற்பனையில் காண்பதெல்லாம், கனவல்லாது நனவாக்கவே பாடுபடுகிறன். இந்த ரீதியில் நோக்கினுல் நம் ஆதி அரசர்கள் எவ்வளவுகற்பனையும் செயல்திறமையும் கொண்டிருக்கிறர்களென்பது அறியக் கிடக்கிறதன்றே, நம் புராதன கட்டிடங்களையும், அவைகளுக்கு மத்தியிலிருந்து, பல உண்மையை விளம்பக்கூடிய அநேக படங்களையும் எடுத்துக் கொண்டோம். நடப்பதில் சற்றுக் களைப்புத் தென்பட்டாலும் புராதனச் சூழலைச் சுற்றுமிடத்து களைப்புக் கொஞ்சம் குறைவாகவே இருந்தது. ஆனுல் தண்ணீர்த் தாகம் தாங்க இயலாமல் கொஞ்சநேரம் பட்டபாடு பள்ளங்கள் காணுமிடமெல்லாம் எட்டிப் பார்த்து ஏமாந்தோம். சுற்றி வளைந்து நோட்டத்தை விட்டவிடத்து ஒரு குளம் போல் ஒன்று தென்பட்டது. அருகில் சென்று பார்த்தால் சேறுமயம். பின் வாங்கிக்கொண்டு செல்லுமிடத்து ஒரு கடை கண்ணில் பட்டதுதான் தாமதம். உலக ஓட்ட நிலைகளை முறியடிக்கக்கூடிய ஓட்டம். ஓட்டத்தை நிறுத்த முடியாமல் கடையின் தூணைப் பிடித்து ஒருவாறு நானும் நின்றேன். அடுத்த கணம் மடக் மடக்கென்று தொண்டைக்குழி மேலும், கீழும் எழுந்து ''சோடாத் தண்ணீரை'' உட்தள்ளித் தாகத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டது' யாவற்றையும் பார்த்து முடித்தபின் பஸ் நகர்ந்தது. விட்டுப் பிரிய மனமில்லை. ஆனுல் காலமும் நேரமும், எங்களை விட்டுப் பிரிந்துகொண்டிருந்தது

தான் காரணம். 3–25 க்கு புராதனச் சூழலை முற்றுகவே பிரிந்துவிட்டோம்.

பாட்டும் ஆட்டமும் வலிய வந்தது. ஒரே உல்லாசம். இப்போது பஸ் கொஞ்சம் கெதியாகவே நேரத்துடன் போட்டி போட்டுக் கொண்டிருந்தது. சைக்கிள் சாரதி ஒருவர் எங்கள் பஸ்சின் பின்புறத்தைக் கண்டதும், தன் திறமையை எடுத்துக் காட்டுவதற்காக எங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு ஓடி வந்து கொண்டிருந்தார். ஆனுல் ஓட்டம் பலிக்கவில்லை. பரிதாப நிலை. பஸ் ரோட்டை விட்டு விலகிச் சென்று புல் தரையில் நின்றதும், பக்கத்தை நோட்டம் விட்டோம். இடம் வெலிக்கந்தை. யாவரும் இறங்கி பஸ்சில் வாழைப்பழத்தோடு தேநீருக்குப் பதிலாக தோடரசத்தைச் சுவையுடன் உட்கொண்டோம். ஒரே களிப்பு யாவரும் ஏறி அமர்ந்தோம். ஒரு உறுமலுடன் பஸ் வேகமாகக் கிளம்பியது. நேரம் 4–45. ஆடல் பாடல்களுடன் பல ஊர்களைக் கடந்து மட்டுநகர் நோக்கி வந்து கொண்டிருந்தோம். காலைச் சாப்பாடு கொஞ்சம் மிச்சம் என்று சொன்னேன் அல்லவா? அதை ஒருவர் வெழுத்து வாங்கிக் கொண்டிருந்தார். கிரான் என்ற இடம் இருவர் கழிந்தனர். ஏருவூர் இன்னும் இருவர். பாரம் குறையக் குறைய வேகம் கூடக் கூட இருந்தவர்கள் எழும்பினுர்கள். எழும்பியவர்கள் ஆடினுர்கள். பாடினுர்கள். விழுந்தார்கள் எழுந்தார்கள். அந்நேரம், "சீட்டில்" அமர்ந்திருந்தவர்களின் மொத்தம் பத்துத்தானிருக்கும். கோட்டமுனைப்பாலம். கைதட்டு, பாட்டு ஆட்டம் வலுத்தது. இடப் பக்கம் திரும்பிய பஸ் "வெத்திலை போட்ட பத்தினிப் பெண்ணை"ச் சுற்றுவது போல மட்டு நகர் முற்ற வெளியை ஒரு சுற்றுச் சுற்றி வந்து ஓ என்று இசைச்சலுடன் மட்டு நகர் வர்த்தகக் கல்லூரி முன்னுல் நின்றது. நேரம் 7–10.

பலருக்குக் காரில் வீடு சென்றடையும் வாய்ப்பு கொடுத்து வைத்தார்கள். நானும் இன்னெருவருடன் இந்தச் சனிக்கிழமையை ஒரு நல்ல முக்கியத்துவம் வாய்ந்த மறக்க முடியாத நாளாக்கி விட்டோமென்று உரையாடிக் கொண்டு நடராசாவில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தோம். அதனிடையில் ஒரு சந்தி. அவர் வலப்பக்கம பிரிந்தார். நான் இடப்பக்கம் பிரிந்தேன். இடையில் வாயிலிருந்து "குட்நைட்களைப்" பரிமாறிக் கொண்டோம்.

## வெட்டுக் கிளியுடன் போர்

ஒரு வெட்டுக்கிளி இருபது முதல் நாற்பது முட்டைகள் வரை இடும். மணலில் இடும் இம்முட்டைகள் சூரிய வெப்பத்திஞல் பொரிக்கும். 1889 ல் செங்கடலுக்கூடாகச் சென்று வெட்டுக்கிளிகள் 22, 000 சதுர மைல் நிலத்தில் பரவக்கூடியனவாக இருந்தன. இவைகளைக் கொல்ல மக்கள் இராப்பகலாக வேலை செய்தனர். 1881 ல் சைப்பிரஸ்தீவில் 1, 300 தொன் முட்டைகள் மணலிலிருந்து தோண்டி எடுத்து நாசஞ் செய்யப்பட்டன.

வாடிக்கைக்காரர்களைத்
திருப்திப்படுத்துவதே எங்கள்
நோக்கம்

அழகை அழகுபடுத்துவது
ஆடை அலங்காரம்

உங்கள் தேவைக்கேற்றவாறு மிகவும்
சந்தோஷ கரமான டிசைன்களில்
வரவழைக்கப்பட்டு குறைந்த விலையில்
விற்குமிடம்

சீப் சைட்

பிரதான வீதி, கல்முனை.

உங்கள் திருப்தியே எங்கள் திருப்தி

எலைட் சுப்பர்லோன் ஜோர்ஜட்
கோயம்புத்தூர், சேலம், பனரிஸ்
பெங்ளூர், பட்டுசேலை,
வேட்டி சால்வை தினிசுகள்
ரெடிமேட் சேட் வகைகள்

ஆகியன குறைந்த விலையில்
விற்குமிடம்

பாவா
டெக்ஸ்டைல்ஸ்

மெயின்வீதி, கல்முனை.

*Gifts*

Choice Selection
for all
Guatily Valve

❋ TOILET REQUISITES ❋ PERFUME & COSMETiCS
❋ FANCY GOODS ❋ GROCERIES
❋ STATIONERY,

etc. et.c

THE TOWN'S SHOP

★ STARLIGHT

10, 12 AMEN CORNER. BATTICALOA.

அவளின் அங்கங்கள் பேசுகின்றன. அசைந்து செல்லும் அழகு பேசுகின்றது ஆனால் அவளின் வாய்மாத்திரம் பேசவில்லை என்கிறார் இந்தக் கவிஞர்.

# வாயாற் பேசாள்

—சோமலிங்கம்—

கரைதட்டும் அலைவிட்ட துரையோ? அந்த
கனகத்தில் வார்த்தெடுத்த சிலையின் பற்கள்
விரைவற்ற நடைதன்னைப் புருக்கள் தந்து
வெட்கி அவை விண்ணேக்கிப் பறந்ததோதான்
திரைமூடி மறைக்கின்ற தனங்கள் தன்னை
தென்னையிலே பறித்தெடுத்து மறைத்திட்டாளோ?
சுரையினிலே வார்த்து வைத்த தேன்எடுத்து
சொல்லுடனே கலந்து அவள் சொல்லவில்லை.

முழுநிலவோ அவள் வதனம் மலர்கள் தேடி
மொய்க்கின்ற வண்டுகளோ விழிஇரண்டும்
தளிர்மேனி மாவினிலே பெற்றிட்டாளே
தாமரையின் தடாகத்தில் குதித்துப்பாயும்
வரியுடைய வரால்தானே அவளின் கால்கள்,
வஞ்சி அவள் வடிவத்தை என்ன என்பேன்
புரியாது பிறருக்கு அவளின் பேச்சு
புரிந்துவிட எனக்கு மட்டும் விழியால் சொல்வாள்.

எலுமிச்சம் பழமோ அக்கன்னி மேனி
இலுப்பு மலரோ அவளின் வெண்மைப் பற்கள்
மலையினிலே ஆடுகின்ற மயிலோ சாயல்
மாம்பழமோ அவளுடைய கன்னம்தானும்
விலைமதிக்க முடியாத சிலையோ அந்த
விற்புருவ நுதலாளின் விழி இரண்டும்
சிலையாக்கி எனைவிட்டு மறையும் அந்த
தேன்மொழியாள் என்னுடனே பேசமாட்டாள்.

கொச்சிப்பழம் அவளின் இதழ்கள் காட்டும்
குலைவாழை அவளுடைய நாணம்காட்டும்
பச்சை நிற நெற்பயிர்கள் தென்றல் தொட்டு
பழனத்தில் ஆடுதல் போல் அசைந்து செல்வாள்
மச்சிஅவள் எனக்குத்தாள் ஆனாலும் நான்
வாய்திறந்து பேசுதற்கு முடியவில்லை
மிச்சமில்ல முதலைப் போல் செல்வாள் என்னை
வேதனையில் விட்டிடுவாள் வாயாற்பேசாள்.

மார்கழியை அடுத்துவருவது தைப்பொங்கலல்லவா ? அதனை முன் கூட்டியே கூறிவைக்கிறார் கவிஞர் முகிலன்.

# "இன்பப் பொங்கல்"

--முகிலன்—

ஞாலம் எங்கும் பரந்துள
நம் தமிழர் வீடெலாம்
கோலம் பெற்றுப் பொங்கலின்
குதூகலிப்புத் தோன்றிடும்

உயர்வு தாழ்வு இன்றியே
உலகத் தமிழர் ஒன்றியே
அயர்வு நீக்கும் ஆதவன்
அடிபணிந்து வாழ்த்துவர்.

உழவர் உள்ளம் தோய்ந்துளல்
உவகை வெள்ளம் பாய்ந்திடும்
மழலைப் பிஞ்சு நெஞ்சிலும்
மகிழ்வு நின்று விஞ்சிடும்.

பெண்குலக் கொடிகளும்
பின்னும் உள்ள தமிழரும்
மண்ணில் என்றும் இலாதவாறு
மகிழ்வு கொண்டு ஆடுவர்

பச்சை அரிசிப் பொங்கலை
பார்க்க நாவும் ஊறுமே
இச்சகத்திலே தமிழ்
இன்பமுண்டு தோழரே !

பொங்கல் பொங்கல் பொங்கலே
பெருமை மிக்க பொங்கலே
எங்கள் உள்ளம் மகிழவே
என்றும் வருக பொங்கலே.

# மட்டக்களப்பில் திருமணச் சடங்கு

—வி. சு. கதிர்காமத்தம்பி—

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழமையாகிவிட்ட இக்காலத்திலே மட்டக்களப்புப் பகுதியிலே வழக்கிலிருந்து வரும் 'திருமணச் சடங்கு' பற்றிச் சுவைபட எடுத்துக் கூறுகிறார் இக்கட்டுரையின் ஆசிரியர்.

மட்டக்களப்புத் தமிழர்கள் இலங்கையின் பிறபாகத்தில் வாழ்ந்துவரும் தமிழர்களிலிருந்து, பண்பாடு பழக்கவழக்கங்களில் கணிசமானவளவு வேறுபட்டிருப்பதைக் காண முடிகின்றது. இவர்களது வாழ்க்கை ஒழுங்குகள் சில தனித்துவம் பெற்றிருப்பதை நாம் நோக்க வேண்டும். இந்த வகையில் இப்பகுதியில் நிலவிவரும் திருமணச் சடங்குகள் என்னும் மங்கல நிகழ்ச்சிபற்றி இக் கட்டுரையில் காணுவோம்.

குறிப்பிட்ட வாலிபனொருவனுக்கும் யுவதிக்கும் மனவிசைவு ஏற்பட்டுக் கொண்டதும், மணச்சடங்கின் பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன. பெரும்பாலும் மட்டக்களப்பின் பழம் பெருங் கிராமங்களில், அவரவர் சாதி குலம் கோத்திரத்துக்குள், மாமன் மகளை வதுவை செய்து கொள்ளும் முறை பின்பற்றப்படுகிறது. 'வெளியூர் அழகனைக் காட்டிலும் உள்ளூர் முடவனே மேல்,' 'வைக்கலில் விளைஞ்சதை வைக்கலிலேயே கட்டிப்போட வேண்டும்' என்பன போன்ற பழமொழிகள் இம் மக்களிடத்தே வழங்கி வருவது இதை ருசுப் படுத்துகின்றது.

மாப்பிள்ளை தத்திக்கும் பெண்பிள்ளை தத்திக்கும் பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் சுமுகமாக முடிவெய்தியவுடன், சம்பிரதாய நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன. முதலில் பெண் தத்தியார் பலகாரப் பெட்டிகள் சகிதம் முகூர்த்த வேளை ஒன்றில் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று, திருமண ஒழுங்குகள் பற்றிப் பேசுவர், இது "பலகாரப் பெட்டி வைத்தல்", "மாப்பிள்ளை கேட்டுப் போதல்" என்றெல்லாம் அழைக்கப் படுகின்றது. மாப்பிள்ளை வீட்டார் வெகு தடல்புடலாக பெண் தத்தியாரை வரவேற்பர். இரு தத்தியாரும் அமர்ந்திருக்கும் சபையில், மாப்பிள்ளை தத்தியார் 'உங்கள் பிள்ளைக்கு என்ன தருவீர்கள்' என்று சீர்வரிசைகளை வினவுவர். பெண் வீட்டார் தம் கருத்தை வெளிப் படுத்துவர். இச் சந்தர்ப்பத்தில் இரு தத்தியாரும் தங்கள் தங்கள் நலனைப் பார்த்துக் கொள்வதில் பேச்சுவார்த்தைகள் பிரச்சனையின் பாற்படும். அப்போது பொதுவான சில முதியோர்கள் நிலைமையைச் சீராக்கி சுமுக நிலையை ஏற்படுத்துவர். அநேகமாக முதியோர்களின் முடிவே பின்பற்றப்படும். பிறகு சம்பிரதாயமாக பெண் வீட்டாரின் பலகாரப் பெட்டிகள் மாப்பிள்ளை வீட்டாரால் ஏற்றுக் கொள்ளப் படுவதால், சம்மதம் உறுதிப்படுத்தப் படுகிறது. அத்தோடு அப் பலகாரப் பெட்டிக்குள் பிரத்தியேகமாகத் தயாரிக்கப் பட்டிருக்கும் 'மாப்பிள்ளைப் பலகாரம்' எடுக்கப்பட்டு, அதனுள்ளிருக்கும் மோதிரத்தை மாப்பிள்ளை அணிந்து கொள்வார்.

மேற்படி கல்யாணப் பேச்சுவார்த்தைகளில் முறிவு ஏற்பட்டு திருமண ஒழுங்கு

கள் குலைந்து விடுமானால், பெண் வீட்டாரின் பலகாரப் பெட்டிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, வேறொரு தினத்துக்கு மாப்பிள்ளை வீட்டாரால் பதிலுக்கு பலகாரப் பெட்டிகள் பரிமாறிக் கொள்ளப் படுகின்றன. இந்த வகையில் பலகாரப் பெட்டிகளைக் கொடுத்து, நடந்தவைகளை மறந்து விடும் ஒரு பண்புமிகு வழக்கம் மேற்கொள்ளப்படுவதுபோற்றுதற்குரியது. இப்பகுதியாரின் சீதனங்கள் பெரும்பாலும் வயல், வீடு வளவு, போடப்பட்ட நகை முதலான ஆதனங்களாகவே இருக்கின்றன. பணம் முக்கியத்துவம் பெறுவதில்லை என்பது கவனிக்கத்தக்கது.

திருமணப் பேச்சு வார்த்தைகள் சாதகமாக முடிவடைந்ததும், கல்யாணம் நடைபெறும் முகூர்த்த நாள் அச் சபையிலேயேயுள்ள பெரியோர்களால் நிச்சயிக்கப்படுகின்றது. இவ்விடத்தில் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் என்றதிருமணப் பரிபாஷையின் விளக்கத்தைப் பெறுகின்றோம். இனி குறிப்பிட்டவொரு முகூர்த்தத்தில் மாப்பிள்ளை வீட்டார் 'தாலிக்குப் பொன்னுருக்கும்' வைபவத்தை ஒழுங்கு செய்வதின் மூலம் திருமணச் சடங்கின் ஆரம்ப கிரியை துவக்கப்படுகின்றது. இதற்கு பொற்கொல்லர் அழைக்கப் பெற்று, வீட்டினுள் நிறைகும்பம் வைத்து பிள்ளையாருக்கு மடை வைக்கப் படுகின்றது. இம் மடைமுகத்தில் வைதது பொற்கொல்லர் தாலிக்கு வேண்டிய பொன்னை உருக்கி வார்த்துக் கொண்டு செல்வார்.

கல்யாண் ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்விடைக் காலத்தில் பெண் வீட்டார் தீன் பண்டங்கள் பல தயாரித்து மாப்பிள்ளைக்கு அனுப்பிப் பராமரித்துக் கொண்டிருப்பது இப்பகுதியில் ஊறிப்போன ஒன்றாகும். குரக்கன் மா போன்ற உயிர்ச்சத்துக்கள் செறிந்த தானியவகைகளில் இத்தீன் பண்டங்கள் வகைவகையாகத் தயாரிக்கப்படுகிறது. இப்படியே மாப்பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாருக்கு தீன் பண்டங்களை அனுப்பிக் கொள்வதின்மூலம் 'கொடுக்கல் வாங்கல்' நடைபெற்றுக் கொண்டிருப்பது, இரு குடும்பங்களிடையேயும் உறவை வளர்ப்பதற்குச் செய்யும் கைங்கரியமாகின்றது.

கல்யாண முகூர்த்த நாளில் மாப்பிள்ளையின் சுற்றத்தார், மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று கலகலத்திருப்பர். மேலும் மாப்பிள்ளைவீட்டுக்கும் பெண்வீட்டுக்கும் ஓடிஓடி கல்யாணப் பந்தர்கள் சோடிப்பதில் ஒரு கூட்டம் சுறுசுறுப்பாய்க் காணப்படும். இனி, பெண்வீட்டிலிருந்து உறவினர் சிலர் சென்று மாப்பிள்ளையைக் கல்யாண ஊர்வலமாக அழைத்துவர ஆயத்தமாவர். மாப்பிள்ளையின் உச்சியில், மணமகளின் சகோதரன் தேங்காய்ப்பால் தடவி, முழுகவார்த்து, உடையணிவித்து வெளிக்கிடுத்தி விடுவார். இவரை 'மாப்பிள்ளைத் தோழன்' என்று கூறுவார்கள். மாப்பிள்ளையின் ஊர்வலத்தில், இம் மாப்பிளைத் தோழரும், தலைப்பாகை கட்டி மாப்பிள்ளையோடு கைகோர்த்த வண்ணம், குடை பிடித்து வந்துகொண்டிருப்பார். இடையிலுள்ள கோயில்களுக்குச் சென்று கற்பூரம் கொளுத்தி தேங்காய் உடைத்துக் கொண்ட மாப்பிள்ளையின் ஊர்வலம் மணமகளின் வளவு வாயிலை அடையும். இவ் வூர்வலத்தில் மணமகனின் சகோதரிகள் கூறை பலகாரப்பெட்டிகளை ஏந்தியவாறு குரவை ஒலி செய்து வருகின்ற காட்சி பொலிவானதாகும்.

மாப்பிள்ளையின் ஊர்வலம் அண்மித்ததைக் கண்டுகொண்ட பெண்வீட்டார், குறிப்பாகப் பெண்கள் தங்கள் வளவுக் கடவலுக்கு வந்து கூடி, போட்டிக்கு குரவை போட்டு வரவேற்பர். அப்போது இருபக்கத்து இளைஞர்களும் போட்டி

போட்டுக்கொண்டு சீனவெடி கொளுத்தல் வானைப் பிளக்கும். இச் சந்தர்ப்பத்தில் ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி நடை பெற்றுக் கொண்டிருக்கும். அதுதான் 'கூறைப்பெட்டி பறித்தல்' ஆகும். மாப் பிள்ளையின் சகோதரியும் தோழிகளும் கொண்டுவந்த கூறைப் பெட்டியையும் பலகாரப் பெட்டிகளையும், பெண்ணின் சகோதரியும் தோழிகளுமாகக் கூடி, கட வலில் நின்றபடியே இழுத்துப் பறிப்பர். மாப்பிள்ளை தத்தியாரும் பெட்டிகளை விடாது பற்றிக்கொள்வர். இந்தமாதிரி யான மல்லுக்கட்டல் சிறிது நேரத்துக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும். ஈற்றில் பெண்வீட்டாரே பெட்டிகளைப் பற்றிக் கொண்டதாக எடுத்துக்கொண்டு, மாப் பிள்ளையையும் பரிவாரங்களையும் அழைத்து வீட்டு வாயிலுக்குச் செல்வர்.

வீட்டு வாசலில் நிறை குடம் வைத்து குத்து விளக்கேற்றப்பட்டிருக் கும். அதன் முன்னிலையில் போடப்பட் டிருக்கும் வெள்ளையில் மாப்பிள்ளை வந்து நின்று கொள்வார். அப்போது மணப் பெண்ணையும் அழைத்து வந்து, மாப்பிள் ளையின் இடது புறத்தில் நிற்பாட்டுவர். பெண்ணின் சகோதரி முறையானவள் ஆலாத்தியெடுத்து கண்ணூறு கழிப்பிப் பாள். மணமகன் தான் வாங்கி வந்த கூறைச் சேலையையும் சட்டையையும் எடுத்து, பெண்ணின் தலையிற் போட்டு விடுவார். பிறகு மாப்பிள்ளையின் தந்தை யாரும் பெண்ணின் தந்தையாரும் தத்தம் மக்களது கைகளைப் பற்றி, கைபிடித்துக் கொடுப்பர். இனி, மணமகன் பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டுவார்.

இப்பொழுது மணமக்களை மணவ றைக்கு எழுந்தருளச் செய்வர். ஆங்கு சமைத்து வைக்கப்பட்டிருக்கும் ஏழு மரக்கறியும் சோறும் பெண்ணினால் கலத் திற் போட்டுக் கொடுக்கப்படும். மண மகன் மூன்று வாய் உண்டு கொண்டு பெண்ணுக்குக் கொடுப்பார். பெண், மணமகனின் கையில் நீரூற்றிக் கழுவி விட்டு, தானும் மூன்றுபிடி சாப்பிட்டுக் கொள்வார். இதைச் 'சோறு போடுதல்' அல்லது 'கலத்தில் போடுதல்' என்று சொல்வார்கள். இதற்காக மட்டக்களப் புக் கிராமப்புற வீடுகளில், பிரத்தியேக மான கலங்களும் வட்டில்களும் இருப்ப தைக் காண முடிகின்றது. சாதாரண மக் களின் கல்யாணச் சடங்குகளிற்கூட இக் கலத்தில் போடும் நிகழ்ச்சி நடைபெறு கின்றது.

மேற்படி கலத்திற் போட்டு முடிந் ததும், தயாரித்து வைக்கப்பட்டிருக்கும் "பால் பழம்' பெண்ணினால் மணமகனுக் கும், மணமகனால் பெண்ணுக்கும் வழங் கப்படுகிறது. இதன்பின் விசேட மணப் பந்தருக்கு தம்பதிகள் வந்தமருவர். விருந் தினர்கள் இவர்களை அண்டி ஆசி கூறியும் சன்மானம் வழங்கியும் விருந்துண்டு மகிழ்ந்து செல்வர். ஈற்றில் புதுமணத் தம் பதிகள் பள்ளியறை சென்று கொள்வர். இத்தகைய திருமணச் சபைகளில் முறை தவறி நடப்பவர்களிடம் விருந்து கேட்ட லும், விருந்து நடத்தலும் அடிக்கடி காணப்படும்.

இத்தகைய சுவையான மட்டக்களப் புத் திருமணக் காட்சி பொருள் பொதிந்த தென்பதை அனைவரும் ஒத்துக் கொள் வர். இம் முறைகள் தற்சமயம் அருகிக் கொண்டு கிராமங்களில் குறுகிக் கொண் டது. ஆனாலும், இம் மண முறையை ஆரியக் கலப்பில்லாத தனிமுறை என ஆராய்ச்சியாளர் சிறப்பிப்பர்.

# இனி ஒலிக்காது!

## அ. ஸ. அப்துஸ்ஸமது.

''எல்லாமே என் ஊடுதான். ஒவ்வொருத்தருக்கும் தனித்தனி ஊடு எதுக்கு? எல்லாரும் எங்கேயும் இருக்கலாம் தானே'' என்று கேட்கிருள் சித்தி ருஹிலா. கடைசியிலே அவளுக்கு......

அவளுக்கு வயது பன்னிரண்டைத் தாண்டியிருக்கும். கொழு கொழுவென்று பருத்த கட்டுமஸ்தான தேகம்; வயதை இன்னும் கூடுதலாகக் காட்டிற்று. குறு குறுவென்னும் வட்டக் கருவிழிகள் ஒரு விநாடியில் இவ்வுலகு முழுவதையுமே சுற்றிவந்தன. இன்னும் பூப் பெய்தவில்லை. இன்ருே நாளையோ என்றிருந்தது அவள் தோற்றம்.

வாரிவிடாமல் புழுதி படிந்திருந்த அவளது நீண்ட கருங்கூந்தல், இரு புயங்களிலும் அனுயாசமாக விசிறிக் கிடந்தது. முகத்தில் படை படையாக அப்பியிருந்த அழுக்குகளினூடே அவளது இளமை அழகு மன்னியது. கந்தலான அழுக்கு நிறைந்த கவுண் ஒன்று முழங்கால்வரை அவள் உடலை மூடி இருந்தது.

பாதையாற்போன என்னை உற்றுப் பார்த்துக்கொண்டு நின்ற அச்சிறுமி, ஒரு மின் வெட்டில் பாய்ந்து என் கைகளைப் பிடித்தபடி 'எங்க போறீங்க நானு' என்று ஆவல் ததும்பக் கேட்டாள்.

எனக்கு ஒரே திகைப்பாயிருந்தது அவள் செய்கை. 'ஏன் புள்ள கேக்கிருய்? நீ யாரு? என்றேன்.

நானு? நான்தான் சித்திருஹிலா. என்னை உங்களுக்குத் தெரியல்ல. தும்பள இல என்னத் தெரியாதவங்களே இல்லயே... ஹி ஹி ஹி நீங்க எங்க போறீங்க...

'வீட்டுக்கு'

'உங்க ஊடு ரொம்பத் தூரமா?'

'இல்ல இந்தவழியால கொஞ்சத்தூரம் போனு வரும்!

'அந்த பத்து பதினஞ்சி படியேறிப் போறஊடா'

'ஆமாம் ஏன் கேக்கிருய்!

'சும்மா கேட்கப்படாதா? உங்க ஊட்டுக்கு நான் ஒரு நாளக்கி வாறன், இப்ப எங்க ஊட்டுக்குப் போவமா?

''இன்னொரு நாள் பார்க்கலாம்'' பேச்சின் இடையே பலகாரம் விற்பவனொருவன், தள்ளுவண்டி ஒன்றில் பலகாரங்களையெல்லாம் வைத்துக் கொண்டு அந்த வழியே வந்தான்.

என்னுடன் பேசிக்கொண்டிருந்த சித்தி ருஹிலா, ஓடிப்போய் தட்டிலிருந்து ஒரு வடையை எடுத்துக் கொண்டு. ''டுயோ! டுயோ! டுய்!! என்று குரலெழுப்பியபடி பிரதான பாதைவழியே ஓடிக் கொண்டிருந்தாள்.

வடைக்காரன் அவளை ஒன்றும் செய்யவில்லை. அவளைப் பார்த்தபடி. சிரித்துக் கொண்டே நின்ருன். அவன் பார்வையில் ஒரு இரக்க உணர்ச்சி தென்பட்டது.

சித்திருஹிலா, அழகான பேர்—அழகான பிள்ளை பருவ வயது–இது ஏன் இப்படி நடக்கிறது?......

சிலநாட்கள் கழிந்தன.

லெட்சுமி பவான் சைவக் கடையொன்றில், காலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். சாப்பாடு அரைவாசி முடிந்திருக்கும். யாரோ 'படக்' என்று என் இலையை இழுத்தார்கள்.

அதிர்ச்சியோடு வலப்பக்கம் திரும்பினேன். சித்திருஹிலா மிக ஆவலோடு என் எச்சில் உணவைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். என்னை அவள் கவனிக்கவே இல்லை. புலனெல்லாம் இட்டலியிருந்தது. போதாக்குறைக்கு குழம்பு பரிமாறி வந்த பையனைப் பார்த்து ''இங்க! கொஞ்சம்

குழம்பு விர்றீங்களா ?'' என்று கேட்டுக் கொண்டிருத்தாள்.

நான் எழும்பி கையலம்பிக் கொண்டு தேனீர் குடித்துக் கொண்டிருந்தேன். பக்கத்தில் ஒருவர் பஸ்ஸிற்குப் போகும் அவசரத்தில் நின்றபடியே தேனீர் குடித்துக் துக் கொண்டிருந்தார். — படக்' கென்று அவர் கையிலிருநத தேனீரைப் பறித்து இருமிடறில் மீதித் தேனீரைக் காலி செய்தாள் சித்திருஹிலா. அவர் அப்படியே பிரமித்துப்போய் நின்ருர்.

ருஹிலா' கடைக்காரரைப் பார்த்து வாறன் ஐயா! என்று ஒரு புன்முறுவல் பூத்தபடி 'டுயோ டுயோ டுய்' என்று குரலெழுப்பிக் கொண்டு சிட்டாய்ப் பறந்தாள்.

என்றுமில்லாதபடி அன்று கண்டிக்குப் போகும் பஸ் சனக்கூட்டம் குறைவாக இருந்தது. பஸ் வெளிக்கிட இன்னும் பத்து நிமிஷம் இருந்தது. கண்டக்டர் நர்ட்டின் பொருளாதார நிலைபற்றி யாருக்கோ வரட்சியும் கசப்பும் நிறைந்த சொற்பொழி வொன்றை ஆற்றிக்கொண்டிருந்தான்.

கடகடத்து பஸ்ஸில் ஏறிவந்தாள் ருஹிலா. நேரே கண்டக்டரிடம் போய் ''அண்ணன் பத்துச்சதம் தாங்கோ அண்ணன்' என்று மிக வினயமாகக் கேட்டாள்.

இது யார் பிள்ளை இவ்வளவு உரிமையோடு, வெட்கமே இல்லாமல் காசுகேட்கிறது என்று எவ்வோரும் பிரமித்து நின்றனர்.

''நீ என் கூட வருவ யெண்டாத்தான் காசு தருவேன்'' கண்டக்டர் ஒரு நிபந்தனை போட்டான்.

''இல்ல அண்ணன்! இன்ளெரு நாளக்கி நான் கட்டாயமா வருவேன். இப்ப பத்துச்சதம் தாங்க'' கண்டக்டரின் கையை பற்றிப் பிடித்துக் கொண்டாள் ருஹிலா.

கண்டக்டர் சிரித்த படி பத்துசதத்தை எடுத்து நீட்டினுன். டுயோ டுயோ டுய். அந்த டுய் போய் பக்கத்தில் இருந்த மாம்பழக் கடையில் நின்றது.

''இந்னுய்யா காசு'' என்று கடைக்காரனிடம் காசை வீசிவிட்டு யாழ்ப்பாணத்துக் 'கறுத்தக்கொழும்பான்' ஒன்றை எடுத்தாள் ருஹிலா.

''என்ன பிள்ள இது மாம்பழம் 15 சதம் குறையாது! நீ யென்னடா யெண்டா கேள்வி பார்வை இல்லாம எடுத்துக்கிருய்'' என்று ருஹிலாவிடம் இருக்கும் பழத்தைப் பறிக்க முயன்ருன் கடைக்காரன்!

இதனிடையே ருஹிலா நான்கு யார் ஓடிவிட்டாள். பழத்தில் அவளுடைய பன்னிரண்டு பற்களும் பதிந்து பாதியை உள்ளே வாங்கிக்கொண்டது. கடைக்காரன் செய்வதறியாது ருஹிலாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இன்னுமொரு நாள் ருஹிலாவை கம்பளை ஞாயிறு சந்தையில் சந்தித்தேன். என் கையில் மரக்கறி 'பேக்' ஒன்றிருந்தது. என்னைக்கண்ட ருஹிலா...ஓடிவந்து என்கை பேக்கை பிடித்தபடி, தாங்கோ நானு நான் எடுத்து வர்ரேன்' என்ருள்.

''இல்ல புள்ள வேண்டாம்'' என்றேன் நான்.

''ஏன் நானு நான் உங்க ஊட்டுக்கு வரட்டா'' என்ருள்.

'வாவேன் போவம்'

ம் ம்...ஒங்கவூட்டுல சின்னக் குழந்தை இரிக்கா.

''அழகான குழந்தை இரிக்கி. உன்னக் கண்டா சிரிக்கும் வாறயா ?''

''ம் ம் ம் வரமாட்டேன் எங்க வூட்டுக்கு நீங்க வருகிறீங்களா ?''

''சரி! உன் ஊடு எது?''

என் ஊடா... என் ஊடு... எல்லாமே என் ஊடுதான். ஒவ் வொருத்தருக்கும் தனித்தனி ஊடு எதுக்கு! எல்லாரும் எங்கேயும் இருக்கலாம் தானே.

சித்திருஹிலா என்ன பேசுகிருள். தத்துவமா? பொதுவுடமையா? சமரச ஞானமா?

பைத்தியக்காரிதான். அவள் ஏன் ஒரு நல்ல கருத்தைச் சொல்லக் கூடாது! பைத்தியம் பலவகை. நம் எல்லோர்க்குமே ஒவ்வொருவகை உண்டு.

பைத்தியக்காரர்களின் உலகம் விசித்திரமானது தான்; நமக்கு! ஆனல் அது பேதமற்றது, சமத்துவமானது. எல்லோருமே பைத்தியக்காரர்களாக இருந்தால் உலகம் இன்றையவிட நன்ருயிருக்கும். பகுத்தறிவையும் தத்துவங்களையும் வைத்

துக் கொண்டுதான், மனிதன் புரட்டிவிட்டது என்ன? எல்லாம் வெறும் ஒப்பு. உள்ளத்தையும் உணர்வையும் கட்டுப்படுத்த இயலாமல் ஒப்புவாழ்வு வாழ்வதை விட, பைத்தியக்காரர்களின் உலகம் எவ்வளவோ மேல்.

''டுயோ, டுயோ, டுய்!'' சித்திருஹிலா என்னை மறந்து ஓடிக்கொண்டிருந்தாள்.

'என்ன தம்பி! அந்தப்புள்ளயப் பத்தி மிச்சமா யோசிச்சிக்கிருந்திங்களா ?' என்ருர் ஒரு வயோதிபர்.

''ஆமா! இல்ல! சும்மா அவளுடன் பேசிக்கிட்டு நிண்டன். அதுசரி! இந்த அழகான இளம் புள்ளக்கு இப்படிக் குணபேதம் ஏன் ஏற்பட்டது? உங்களுக்குத் தெரியுமா''

தெரியாம என்னதம்பி! என் பக்கத்து வூடுதானே......! அவ உம்மாவுட்ட தவறு இப்படியாப் போச்சு.

அப்படியெண்டா......

''இந்தக் குழந்தை சிறிசா இருந்தப்போ, அழுகிற குழந்தய தூங்கப்பண்ண ஏதோ ஒரு வகை லேகியத்தக் குடுத்து வந்திச்சு மனுசி! சொற்பகாலம் போனப்புறம், லேகியம் சரியாப் பிடிக்கல்ல. வெறுந் தேயிலயில அபின் கொஞ்சமாசேர்த்துக் குடுத்திச்சி. இத்தனைக்கும் புள்ள அழுததோ, தூங்காமல் அடம்புடிச்சதோ சாதாவான விஸயம்தான். அப்புறம் சரியா எட்டுவயதுல இப்பிடி குணபேதமாயிற்று வைத்தியர்களே கைவிட்டுட்டாங்க பாவம்!''

அந்த மடத்தாய்மீது எனக்குக் கோபம் கோபமாக வந்தது. இப்படியும் ஒரு பேய்த்தாய் இருப்பாளா......என்னமோ எல்லாம் அவரவர் வினை!

அன்று மஹிய்யாவைக்குப் போவதற்காக வந்தேன். கம்பளை பஸ்நிலையம் பெரும் அமளி துமளியாக இருந்தது.

பஸ், யாரிலோ மோதிவிட்டதாம்.

யாரையோ என்று யாரோ ஒரு அனுமதேயப் பேர்வழி சொன்னுன். கம்பளையில யாரைக் கேட்டாலும் சொல்வாங்களே அந்தச் சிரித்த முகத்தழகி சித்திருஹிலா, அவள்மீது தான் பஸ் மோதி இருக்கிறது.

பஸ் றிவேஸில் வந்திருக்கிறது! சித்திருஹிலா 'டுயோ டுயோ' போட்டுக்கொண்டு ஓடி வந்தவள். பின் பக்கமாக பஸ்ஸைக் குறுக்க கடக்க முயன்றிருக்கிருள்...கொடிய மனிதர்களின் இதயம் போன்ற அச்சக்கரங்கள் அவள் வயிற்றில் ஏறி விட்டன.

அவளது கண்கள் மூடின. உணர்வற்றுக் கிடந்தது அவள் உடல். அவள் முகத்தில் என்றும் காணப்படும் புன் முறுவல் மட்டும், இன்னும் மறையவில்லை.

எல்லோரும் 'சித்திருஹிலாவா' ஐயோ! என்று பதறிக் கொண்டிருந்தனர். சிறிது நேரம் எங்கும் அமைதி... அவள் கண்கள் ஒரு தரம் மிரண்டன. அவளது உதடுகளில் ஒரு புன்னகை மட்டும் நெளிந்தது.

சித்திருஹிலா! 'ஒவ்வொருத்தருக்கும் தனித்தனி ஊடு எதுக்கு? எல்லோரும் தான் எங்கேயும் இருக்கலாமே! என்று கேட்ட சித்திருஹிலா, தானிருப்பதற்கு உயர்ந்ததோர் இடத்தைத் தேர்ந் தெடுத்துக் கொண்டாள்.

முழு அமைதி அவள்முகத்தில் நிலவியது. 'டுயோ டுயோ டுய்'-இச் சப்தம் கம்பளை கடை வீதிகளில் இனி ஒருநாளும் ஒலிக்காது.

✽

## குதிரைப்பலம்

ஒரு குதிரைப் பலம் என்பது **33,000** இருத்தல் பாரத்தை ஒரு நிமிடத்தில் ஒரு அடி உயர்த்தக் கூடிய ஆற்றல். இது மின்சார இலகுக் கணக்கில் (ELECTRICAL UNITS) **746** வாற்றுக்குச் சமமாகும்.

# சமரசவாழ்வு அமைப்போம்!

— திமிலைக்கண்ணன் —

உலகெலா மொன்று ஓர்குலம் மக்கள் – நாம்
ஒற்றுமைப் படகினிற் பவனி செல்வோம்! – கொடுங்
கலகத் தரக்கரைக் கொலை களவை – நடுக்
கடலிடை வீழ்த்தி வதைத்திடு வோம்!

வஞ்சனைப் புலையரை வாழவிடோம் – இந்த
மண்ணி லெவரையுந் தாழ விடோம்! – புதுப்
பஞ்சணை மெத்தையிற் படுத்துறங்கி – நிதம்,
பாதகஞ் செய்வர் தனை யொழிப்போம்!

மனிதநல் லுரிமைகள் தாழ விடோம்! – இந்த
மண்ணினிற் கொடுமைகள் வாழ விடோம் – இன்பக்
கனிதரும் சுதந்திரப் பயிர் வளர்ப்போம் – அதைக்
கயவர்கள் அறுவடை செய்ய விடோம்

மடமைகள் ஒழிந்திடப் போர் தொடுப்போம் – தெய்வ
மணங்கமழ் அறக்கணை தனைத்தொடுப்போம்–மண்ணிற்
பொடிபடப் பொடிபடத் தீதகலப் – புதுப்
பொலிவுறு நவயுக வாழ்வமைப் போம்!

கடமையிற் கருத்துடன் அறம் வளர்ப்போம்–மக்கள்
கவலைகள் மிடிமைகள் தனையொழிப்போம் - உள்ளத்
திடம்பெறு சுதந்திர வீரர்கள்நாம்–அன்புத்
தேசிய "சமரச வாழ்வமைப்போம்!"

வளர்ந்து வரும் இளங்கவிஞர் இந்த 'ஈழத்து நாதன்' 'தேன முதம்' பத்திரிகையில் பல கவிதைகள் எழுதியிருக்கிருர். இவ ரது சொந்தப் பெயர் செ. பத்மநாதன்.

# நீயும் ஒரு பெண்ணே?

— ஈழத்துநாதன் —

கண்ணுலே காதல்நீ பேசியன்று — என்
எண்ணத்தை உன்மட்டுத் திருப்பிவிட்டாய்
அண்ணுச்சி யென்றுநீ கூறிநின்று — என்னைக்
கண்ணுளன் எனக்கருதி வந்துவிட்டாய்

இனவுணர் களவாகத் தொடர்பு கொள்ள — வாய்
அண்ணுச்சி யெனமொழிந்த போதுமாங்கே
விழியுந்தன் குறிசொல்ல மறந்ததில்லை — என்னை
அழைத்தந்தக் காட்சி மறையவில்லை.

உள்ளத்தை உருக்கிடும் மொழி இறைத்தாய் — என்னை
மெள்ளத்தான் உன்வலையில் மாட்டிவிட்டாய்
தள்ளித்தான் நிற்காது அருகில் வந்தாய் — உன்னை
அள்ளத்தான் உணர்ச்சிதனைக் கல்லிவிட்டாய்

பித்துப் பிடித்துநான் முத்தம் தந்தேன் — நீ
இத்தனைக்கும் என்மேல் அன்பு தந்தாய்
சத்தியம் எத்தனை செய்துவிட்டாய் — என்னை
நித்தியம் நேசிப்ப தென்று சொல்லி

ஐயையோ அந்நாளை நான் மறவேன் — என்
மெய்யெல்லாம் அம்பாலே குத்துதையா
ஐயத்திற் கிடமின்றி அண்ணனென — அத்
தைய...லழைத்தென் மனம் சிதைத்தாள்.

பூமியில் வாழ்வொன்று மில்லையினி — என்
நாவினில் எழுந்திடும் ஓசைமனத்
தீயினில் உருவெடுத் தோடுதுபார் — அது
நீயுமொரு பெண்ணே வென இசைத்து.

# கூடார சினிமா

— 'நவம்' —

'பார்வதிக்கு வடிவான மாப்பிள்ளையுமாச்சு பார்ப்பதற்குப் படமுமாச்சு, பார்ப்பதற்குப் படமுமாச்சு. என்ற நல்லெண்ணத்தில், அன்னம்மா, சண்முகம்--பார்வதி தொடர்புக்கு 'எருப்' போடுருள். எரு நன்கு வேலைசெய்கிறது. அவள் போட்ட 'எரு' பார்வதியின் வயிற்றில் கருவாக வளர்ந்தது--அது.........

"பார்வதி" "டூரிங்" சினிமா அந்தக் கிராமத்தில் முகாம் போடுவதைக் கேள்விப்பட்டதும், கிராமமே கலகலக்கத் தொடங்கிவிட்டது. ஆண்கள், பெண்கள், பெரியவர், சிறியவர் என்று எல்லாருமே குதூகலிக்கத் தொடங்கிவிட்டனர்.

இந்தச் சினிமாவுக்குத்தான் எத்தனை சக்தி, உலகத்தில் எல்லாருடையவும் ஏகோபித்தஅங்கீகாரத்தைப் பெறக்கூடியதுஎன்று ஒன்று இருக்குமானுல், அது நிச்சயம் சினிமாவாகத்தானிருக்க வேண்டும்.

நேற்றுவரை சோம்பிக்கிடந்த அந்தக் கிராமம், கூடார சினிமா வரப்போகிறது என்ற வதந்தியைக் கேட்டதும், எப்படிச் சுறுசுறுப்படைந்தது. யாருடைய வாயைப் பார்த்தாலும் இதே பேச்சுத்தான்.

கண்மூடிக் கண்திறப்பதற்குள் பல "தேத்தண்ணி"க் கடைகள் முளைத்து, அடுத்த நாள் தோன்ற இருந்த படக்கூடாரத்துக்குக் கட்டியம் கூறத் தொடங்கிவிட்டன.

இப்படி ஊரே ஒருமித்து வரவேற்கக் காத்துக்கிடக்க—அந்த ஊரில் ஒரு ஜீவன்–அன்னம்மா மட்டும் இந்தக் கோலாகலத்திலிருந்து தன்னை முற்றுக நீக்கிக் கொண்டிருந்தது பெரிதும் ஆச்சரியத்துக்குரிய தொன்றுதான். அதிலும் அவள் ஒரு சினிமாப் பைத்தியமாக இருந்தும்,

ஏதோ வரக்கூடாத அபாயம் ஒன்று தன் ஊருக்கு இப்படிச் சினிமாக் கூடாரம் ரூபத்தில் வருவதாக அவள் எண்ணி அஞ்சினுள். நெஞ்சில் இனம் தெரியாத ஓர் அதிர்ச்சி -- நடுக்கம்--பதகளிப்பு.

அன்னம்மா இப்படி அரண்டு நடுங்கியதற்கு, சினிமா சம்பந்தமாக இந்நாளில் எழும் சர்ச்சைகள்--வாதப் பிரதிவாதங்கள் காரணமாக இருக்க முடியாது.

ராஜாஜி, தேசமக்களைச் சினிமாப் பார்க்கக்கூடாது என்றதும், பெரியார், சினிமாவை ஒழிப்பேன் என்று கர்ஜித்ததும், சினிமா நடிகரான எம். ஆர். ராதாவே சினிமாவுக்கு எதிரான கருத்தை வெளியிட்டதும் ஆகிய சினிமா பற்றிய "பெரிய" விஷயங்கள், பாவம், கள்ளங்கபடமில்லாத கிராமப் பெண்ணுன அன்னம்மாவுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

அப்படியென்றுல், இன்று அவள் சினிமாவைக் கண்டு மருளக்காரணம் ?

காரணம் இருக்கத்தான் செய்தது. காரணமெனில் சாதாரணக் காரணமில்லை. பயங்கரமான காரணம்.

வேதனை கலந்த சிந்தனையுடன் அன்னம்மா முத்தத்துக் குருத்து மணலில் போய் அமர்ந்தாள்.

தனக்கே உரியதான பைசாச வேகத்தில் அவளுடைய சிந்தனைரதம் பின்னேக்கி உருண்டது.

வைகாசி மாதம் --

மட்டக்களப்புப் பகுதியில் மார்தட்டிக் கொண்டு நிற்கும் முந்திரிய மரங்களெல்லாம் பழுத்துச் சொலுத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன.

அன்னம்மா அவருடைய தாயாருடன் குத்தகை எடுத்த முந்திரியத் தோட்டத்தைக் காவல் காத்துக் கொண்டிருந்தாள். பகலில், பழங்களை ஆய்ந்து, ஈக்கிலில் கோத்துக் கொண்டு சந்தைக்கு விற்கக் கொண்டுபோய் விடுவாள் அன்னத்தின் அன்னை.

அவள் சென்றபின் அன்னம்மாவுக்கு நிறைய வேலையிருக்கும். பழங்களைக் கொத்த வரும் கிளிக்கூட்டங்களைத் துரத்துவது, ஊரிலுள்ள ஊதாரிச் சிறுவர்களின் அட்டகாசத்தைக் கண்காணிப்பது, உதிர்ந்துவிழும் பழங்களைப் பொறுக்கிச் சேகரிப்பது, கொட்டைகளைச் சுட்டுப் பருப்பாக்குவது, சமைப்பது என்று இப்படி எத்தனையோ வேலைகள். மீதி நேரத்தில், பக்கத்துத் தோட்டத்திலிருந்த தன் சிநேகிதி பார்வதியுடன் பொழுதைப் போக்குவாள் அன்னம்மா.

பார்வதி கன்னிப்பெண். அன்னம்மா குடும்பப்பெண். அவள் கணவன் ஓர் உழைப்பாளி. காட்டிலே விறகு வெட்டுவது, கரத்தையில் ஏற்றுவது காத்தான்குடி—ஆரப்பற்றையில் அதைக்கொண்டு பணமாக்குவது, பணத்தைச் சாப்பாடாக்குவது. மீந்த நேரத்தில் தன் மாமி—மனைவியின் ''ஸீஷன்'' உழைப்பான முந்திரியத்தோட்டத்தில் அவர்களுக்கு ஒத்தாசை செய்வது. இவைதாம் அன்னம்மாவின் கணவனின் அன்றாட வேலைகள்.

அன்று அன்னம்மா மட்டும், சற்று நிதானத்தைக் கைப்பிடித்திருந்தால்—அற்ப ஆசைக்கும், சிறுபொழுது இன்பத்துக்கும் அடிமையாகாமல் விட்டிருந்தால்... இரண்டு இனிய உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும். இன்று சினிமாவைப் பார்த்து அவள் மிரள வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்காது.

பூதகணங்களைக் கொண்டு புராதன காலத்தில் பெரிய, பெரிய மாளிகைகளையும் பிரமாண்டமான கட்டிடங்களையும் சமைத்தார்களாம். இன்று வெட்டவெளியாக இருக்கும் நிலப்பரப்பில் நாளை கண்மூடிக் கண் திறப்பதற்குள் பெரிய கட்டிடங்களைப் பூதகணங்கள் கட்டிவிடுமாம்.

பூதகணங்கள் கட்டி முடிக்கக்கூடிய அத்தனை பெரிய கட்டிடமாக இல்லாது போனாலும், அந்தக் கிராமத்தின் வெம்புப் பகுதியில் திடீரென்று முளைத்த ஒரு கூடாரம் பூதகணங்களால் தோற்றுவிக்கப்பட்டதுபோல் திடீர்க் காட்சி தந்தது.

நேற்றுவரை காயான் பற்றையும், கிளாச் செடிகளும், சேனைச் செடிகளும், ஈச்சம்பற்றையும் மண்டிக் கிடந்த அந்த வெம்புப் பிரதேசம், தனிவெளியாக மாறி அந்த வெளியின் மத்தியில் அழகானதொரு சினிமாக் கூடாரத்தைத் தாங்கி நின்றது, ஒரு புதிய பிரதேசத்தைப் பார்ப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தியது.

அன்னம்மா—பார்வதி உட்பட அந்தக் கிராமத்தில் உள்ள ஜனங்களின் உள்ளங்களெல்லாம் மலர்ந்தன. பின்னே என்ன? அந்த நாளில் படம் பார்ப்பதென்றால் லேசுப்பட்ட காரியமா?

நாலு மைலுக்கு அப்பாலுள்ள புளியந்தீவில் ''காசிம் கோளுக்கு'' ''செக்கன் ஷோ'' பார்ப்பதற்கு பின்னேரம் 4 மணிக்கே மாட்டு வண்டியில் ஏறிக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ''நடராஜா சர்வீஸ்' தான் தஞ்சம். இக்காலத்தைப்போன்ற பஸ் வசதியோ? கார் வசதியோ? அப்பொழுது இல்லாத காரணத்தால் படம்பார்க்கப் போவதென்பது ஒரு பெரிய ''புறொப்ள'' மாக இருந்து வந்தது.

இந்த நெருக்கடியான கட்டத்தில் அந்தச் சினிமாக் கூடாரம் திடீரென்று அங்கு வந்து முளைத்தது, ஒரு வரப்பிரசாதமாகப்பட்டது கிராமத்துச் சினிமா விசிறிகளுக்கு. சீதேவியே வலியத் தம் காலடி தேடிவந்துள்ளதாக மக்கள் குதூகலம் அடைந்தனர்.

ஆனல்—

அதே சினிமாக் கூடாரம் ஓர் அபலைப் பெண்ணின் உயிரையும், அவள் வயிற்றில் வளர்ந்த ''குருத்தையும்'' வெட்டிச்சாய்க்கும் எமனுகமாறும் என்று அப்பொழுது யாரும் அறிந்திருக்கவில்லை.

கூடார சினிமாவில் அன்று பட ஆரம்ப தினம்.

தென்னங் குருத்தாலும், மாவிலை தோரணங்களாலும், செவ்விளநீர்க் குலைகளாலும், ''டூரிங் டாக்கிஸ்'' அலங்கரிக்கப் பட்டது.

பல நிற மின்சார ''பல்''புகள் ஒளியை உமிழ்ந்து, அந்தப் பிரதேசத்தைப் பகலாக்கிக்கொண்டிருந்தன.

ஒலிபெருக்கியில், தியாகராஜபாகவதர், சின்னப்பா பாடிய இசைத்தட்டுகள் முழங்கிக்கொண்டிருந்தன.

அன்று திரையிட இருந்த படமும் புதிது, அதுவரை மட்டக்களப்புக்கே வரவில்லை. கூட்டத்துக்குக் கேட்கவேண்டுமா?

ஊரே திரண்டு வந்து ''டூரிங் சினிமாவை'' மொய்த்துக் கொண்டது. அந்தக்

கூட்டத்தில் அன்னம்மாவும், பார்வதியும் முன்னணியில் நின்ருர்கள் என்று சொல்லவும் வேண்டுமா ?

''கிர்ர்ரிங்......''

டிக்கட் கொடுப்பதற்காக மணி அடிக்கிறது.

கலரி டிக்கட் கொடுக்கும் ''கூட்டை'' நோக்கிப் பெண்கள்படை முன்னேறுகின்றது. அந்தப் ''படை''யின் முன்னணியில் நமக்குத் தெரிந்த இருபெண்கள் அன்னம்மா, பார்வதி இருவரும். படம் பார்க்கப் போகிறோம் என்ற இன்ப போதையில் முன்னேறிக்கொண்டிருக்கிருர்கள்.

அதோ டிக்கட் 'கூட்டின்' துவாரம் நெருங்கி விட்டது. உள்ளே இருக்கும் டிக்கட் விற்கும் இளைஞன் சண்முகத்தின் முகம் நன்கு தெரிகின்றது.

படியப் படிய வாரிவிட்ட சுருட்கேசம். பார்ப்பவர்கள் உள்ளங்களைக் கௌவி இழுக்கும் அரும்பு மீசை மைனர் ஷேர்ட். சண்முகத்தின் அத்தனை அழகு சாதனங்களும் அந்த டிக்கட் பெறும் துவாரத்தினூடாகக் ''குளோஉளப்'' காட்சியில் தெரிகின்றன. தன்னையும் ஒரு சினிமா நடிகன் என்று நினைக்கும் ஒரு மிடுக்கு அவன் கண்களில் பளிச்சிடுகின்றன.

டிக்கட் பெறும் அந்தத் துவாரத்தினூடாக ஒவ்வொரு காப்புக் கையாக நீளுகின்றது. கையைக் கொண்டு முக வனப்பை நோட்டம் பார்த்துக் களிக்கும் திறன் கொண்ட சண்முகத்தின் கண்கள் மளமள வென்று தன் தொழிலைக் கெச்சிதமாகச் செய்கின்றன.

''பிஞ்சுக்கை, பழுத்தகை, பருவக்கை என்று ஒவ்வொன்ருய்க் கரங்கள் பணத்தை நீட்டுகின்றன. பணத்தைப் பெறுவதும், டிக்கட்டைக் கிழிப்பதுமாக இயங்கிக் கொண்டிருக்கின்ருன் சண்முகம்.

அதோ ஒரு பூங்கரம் ஒன்று அவன் முன் நளினமாக நீள்கின்றது.

துணுக்குற்ற சண்முகம் அந்தப் பூங்கரத்துக்குரிய பொன் முகத்தைப் பார்க்கின்ருன்.

அவன் பார்வையில் தாக்குண்ட அந்தப் பூங்கரத்தின் பொன்முகத்தை நாணத்திரை போர்வையிடுகின்றது.

க்ஷணப் பொழுது நில நடுக்கம் ஓய்கின்றது.

''எத்தனை டிக்கட் ?'' சண்முகத்தின் வாய் கடமையைச் செய்கின்றது.

''ரெண்டு''—பூங்கரம்.

''மற்றுள் எங்கே ?''—சண்முகம்.

'இந்தா இருக்கிறன்'' — அன்னம்மா முகத்தை நீட்டுகின்ருள்.

டிக்கட்டும் பணமும் கைமாறுகின்றன. கூடவே கருத்தும் பரிமாறப்படுகின்றது

அப்படிப் பரிமாறப்பட்ட கருத்து, சண்முகம்—பார்வதி இருவரையும் சங்கமிக்கச் செய்யும் ஜாலவித்தையைச் செய்கின்றது. அந்த சங்கமத்துக்கு அன்னம்மாவின் ஒத்துழைப்பு வேகமாகக் கிடைக்கின்றது.

அன்னம்மாவுக்கிருந்த படப்பித்து பார்வதியோடு சண்முகம் பழகுதற்கு பல இலகுவான பாதைகளை அமைத்துத் தருகின்றது. அப்புறம் ?

அன்னம்மாவின் ஆலோசனையின் பெயரில் சண்முகத்தின் சாப்பாட்டு ஜாகை பார்வதின் வீட்டுக்கு இடம் பெயர்கின்றது.

திரையிடப்படும் அத்தனை படங்களும் ''ஓசி''யில் பார்க்கக் கிடைக்கின்றது அன்னம்மா—பார்வதி ரஸிகைகளுக்கு.

அதற்கு ஈடு.

பார்வதி

பார்வதிக்கு வடிவான மாப்பிள்ளையுமாச்சு பார்ப்பதற்குப் படமுமாச்சு என்ற நல்லெண்ணத்தால் அன்னம்மா சண்முகம்–பார்வதி தொடர்புக்கு ''எரு''ப்போடுகின்ருள்.

''எரு'' நன்கு வேலை செய்கின்றது.

அவள் போட்ட ''எரு'' பார்வதியின் வயிற்றில் கருவாக வளர்ந்து அதுவே பார்வதியின் உயிரைப் பலி வாங்கும் எமனுக மாறும் என்பது அப்பொழுது அன்னம்மாவுக்கோ ? பார்வதிக்கோ தெரியாமற் போயிற்று.

இடைவேளைக்காகப் போடப்பட்ட லைட் அனைத்தும் மீண்டும் அணைந்தன.

திரையில் விளம்பரங்களும் அடுத்துத் திரையிட இருக்கும் படங்களின் பெயர்களும் மாறி மாறி விழுந்து கொண்டிருந்தன.

திடீரென்று ஒரு புதிய சுலோகம் திரையில் பளிச்சென்று விழுந்தது.

எமது ஆதரவாளர்களுக்கும் ரசிகப் பெருமக்களுக்கும் ஒரு முக்கிய அறிவிப்பு. இந்த வாரத்துடன் நாம் வேறு இடத்துக்கு ஜாகையை மாற்றுவதால் இதுவே உங்கள் மத்தியில் நாம் படம் காண்பிக்கும் இறுதி வாரமாகும். இதுவரை நீங்கள் எமக்குத் தந்த நல்லாதரவை நெஞ்சில் நிறைத்து வைத்திருக்கின்றோம். மீண்டும் உங்கள் முன்னிலையில் நாங்கள் தோன்றும் போது இதே ஆதரவை நீங்கள் தந்து எம்மை ஆதரிக்க வேண்டுமாய்ப் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். நிர்வாகி.

அறிவிப்பைப் பார்த்து அன்னம்மாவும், பார்வதியும் அதிர்ந்து விட்டனர். இன்று மத்தியானம் சாப்பிட வந்த சண்முகம் இது பற்றி ஒரு வார்த்தைதானும் சொல்லவில்லையே என்று ஆச்சரியப்பட்டனர்.

இன்று காட்சி முடிந்து அவன் சாப்பிட வந்த சமயம் பார்வதியும், அன்னம்மாவும் விஷயத்தைக் கேட்டனர்.

“உண்மைதான்” என்று தலையசைத்தான் சண்முகம், எவ்வித சலனமுமின்றி.

“அப்போ பார்வதியின் நிலை ?” என்றாள் அன்னம்மா.

“கூடாரத்தைத் தூக்கி விட்டால் குடியே எழும்பி விடுவதாக அர்த்தமா ? அடிக்கடி பார்வதியை நான் வந்து பார்க்கின்றேன். ஒரு நல்ல நாளில் அவளை என் மனைவியாகவும் ஏற்றுக் கொள்ளுகின்றேன். மனதைக் குழப்பிக் கொள்ளாதீர்கள்” சண்முகம் சினிமா “டயலக்கை” ஒப்புவித்தான்.

× × ×

சினிமா போன்று நிலையற்றதாகியது பார்வதியின் வாழ்வு. அன்று போன சண்முகம் போனவனேதான்.

அதற்காகச் சதா ஏங்கிக் கொண்டும் கண்ணீர் சிந்திக் கொண்டும் இருக்கவில்லை பார்வதி. நிதானமாகக் காரியமாற்றினாள் அவள். அந்தப் பிராந்தியத்தில் செழித்து வளரும் நச்சுக்காய் சண்முகம் தரத்தவறிய வாழ்வையும் அனுமதியையும் அவளுக்கும் அவள் வயிற்றில் வளர்ந்த கருவுக்கும் நல்கியது.

× × ×

சொர சொர என்ற குருத்து மணலில் கையை ஊன்றி எழுந்தாள் அன்னம்மா.

பாவமன்னிப்பு பட நோட்டீசை வினியோகித்துக் கொண்டு போனான் பார்வதி “டூரிங்” சினிமா கொம்பனியைச் சேர்ந்த ஒருவன்.

அன்னம்மா விரும்பினாலும் விரும்பா விட்டாலும் அந்த ஊரில் அந்தக் கூடார சினிமா முகாமிடத்தான் போகின்றது.

✽

## அடைகாக்கும் ஆண்

அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் பெண் பிராணிகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் அடைகாக்கும் ஆண் பிராணிகளும் உலகில் வாழுகின்றன என்பதை அறியும் போது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. ஆண் தீக்கோழி முட்டைகள் மீது குந்தி அடைகாக்கும். சில தவளைகள் முட்டைகளை உள்ளே விழுங்கிக் குடலில் வைத்துக் கொள்கின்றன. வெப்ப மண்டலங்களில் வசிக்கும் ஒருவகைக் குரங்குகளில் ஆண்குரங்கு குட்டிகளைக் கொண்டு திரிகிறது. ஆனால் தாய் தான் உணவு கொடுக்கிறது.

நாடற்றவர்களை யெல்லாம் சேரச் சொன்னார்கள். சேருகிறேன் என்றால் அடித்துத் துரத்துகிறார்கள். நான் என்ன பிதற்றுகிறேனா?

# பிதற்றல்

— இர. சிவலிங்கம் —

யாருக்கு வேண்டும் என்னை? மண்வேண்டிப் பலர் போட்டியிடுகிறார்கள். பொன்வேண்டி உலகமே ஓயாது அலைகின்றது. புகழ்வேண்டித் திரிவார் எத்தனை பேர்? அதிகாரம் வேண்டி அலைவார் ஆயிரமுண்டு. மங்கையரை நாடி மனம் நெகிழ்வார் எத்தனை பேர்? வானத்துப் பறவைகளை வலை வீசிப்பிடித்து வாணிபம் செய்வாரும் உண்டு. உயிரை மறந்து ஆழ் கடலின் அடியிலே முத்தெடுப்பார்கள். நீந்தித் திரியும் மீனினங்களை நிறையப் பிடித்து விற்றும், உண்டும் வாழ்வார்கள். காட்டு மலர்களை மாலையாக்கி, மாலையை காசாக்குவார்கள். ஆட்டையும் மாட்டையும் ஆவலுடன் வலிந்து பணமீந்து பெறுவார்கள். அவைகள் உயிரிழந்த பின்னரும் கூடத்தான். ஆனால் என்னை விரும்புவார் யாருளர்? ஈன்றெடுத்த அன்னையில்லை. அருகழைக்கத் தந்தையில்லை. ஆண்டவன் குரலோ ஒலிப்பதில்லை. நான் மனிதன்! நாயாயிருந்தாலும் கூட யாராவது வளர்த்திருப்பார்கள். ஆனால் பணமற்ற, பதவியற்ற, அஃது இரண்டு மற்றதால் அறிவற்ற, அழகற்ற, ஆற்றலற்ற என்னை யாருக்கு வேண்டும்?

நான் பிறந்தபொழுதே என் தாய் என்னை வேதனையில் வெறுத்திருப்பாள். வளரும் பொழுது, வறுமை என்னைக் குழந்தைச் செல்வமாய் கருதச் செய்திருக்காது. அரைவயிற்று உணவிற்கு பங்குக்கு வந்த பாவியாய் வளர்ந்திருப்பேன். விளையாட முடியாது, உடலில் வலுவின்மையால் பசியால் துடிக்கும் போது விளையாட முடியுமா? பசிதான் விளையாட்டுக் காட்டுகிறதே! பார்த்திருக்க வேண்டியதுதான். நல்ல உடை இல்லையே என்று எண்ணி வெட்கப்படத் தெரியாது என் உள்ளத்திற்கு. ஆகவே கந்தையைக் கட்டி பள்ளி சென்றேன். அங்கு படிப்பில்லை. மற்றச் சிறுவர்களுக்குக் கிடைக்கும் பாலும் பன்சும் இல்லை என்பசியைப் போக்குவதற்கு. ஏனென்றால் அது ஓர் தோட்டப் பாடசாலை! நான் ஒரு தொழிலாளியின் மகன். அங்கு நான் கற்றதெல்லாம் விறகு பொறுக்கவும், சாணமள்ளவும், காய்கறிச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றவும் தான். இந்த வித்தையை இன்று விலைக்கு விற்கலாமென்றால் வாங்குவாரில்லை.

பருவம் வந்தபின் தோட்டத்திலே புல்வெட்டத் துடித்தேன். ஆசையாலல்ல அதிலே சம்பளமுண்டு என்பதால்தான். ஆனால் எனக்கு அந்தவேலை தரப்படவில்லை. ஏனென்றால் அந்தத் தோட்டத்தில் புற்கள் குறைவு. ஆனால் கூலிகள் அதனினும் அதிகம். புல் பிடுங்குவதற்குப் பதிலாக ஆள் களைவதற்குப் பார்த்திருந்தார்கள். நான் களைந்தெறியப்பட்டேன்.

அருகிருந்த நகரத்தை நாடினேன். 'கெட்டும் பட்டணம் போ' என்கிறார்களல்லவா? கெட்டபின்தான் அங்கு போகவேண்டுமோ, என்னவோ?

பஸ் ஸ்ராண்டில் மூட்டை தூக்குவோமென்றால் அங்கு அதே வேலைக்கு என்னை விடப் பெரியவர்கள் பலர் இருந்

*Visit*

# MUBARACK'S

கல்யாணக் கூறைச் சேலைகளுக்கும்
பலவித ஜவுளி வகைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

## முபாறக்ஸ்

மட்டக்களப்பு.

# SANNA BAKERY & OILMANSTORES

**10, Adigar Rd. Batticaloa.**

**Service is Our Motto**

Expert Bakers in Our Employ

**To make delicious**

- RICH CHOCOLATE,
- PLUM
- JAM ROLL &
- BUTTER CAKES Etc.

Orders for Wedding and
Birthday Cakes Undertaken

**'Try us once and be Satisfied.'**

## மட்டுநகர்ப் பெருங்குடி மக்களே!



எங்களிடம்

- பலவகையான உணவுப் பொருட்களும்
- பாடசாலைக்குரிய உபகரணங்களும்
- "மார்சல்ஸ்" பேனா முதலியவைகளும்

உயர்தர வாசனைத் திரவியங்களால் தயாரிக்கப்படும்
காரம், குணம், மணம் நிரம்பிய

## "லெட்சுமி பீடா"வும்

கிடைக்கும். தேவைகளுக்கு இன்றே ஆடர் செய்யுங்கள்.

**மகாலெட்சுமி ஸ்டோர்ஸ்,**

*11, சென்றல் ரோட்,* மட்டக்களப்பு.

தார்கள். புகையிரத நிலையத்திலும் அதே நிலைதான். இக்காலத்தில் அவரவர்கள் மூட்டையை அவரவர்களே சுமந்து கொள்கிறார்கள். அது வேறு! தூக்க வேண்டுமென்றால் என்னால் தூக்க முடியாத பாரந்தான் கிடைக்கிறது. நான் என்ன செய்ய?

பிச்சை எடுக்கத் துணிந்தேன். அங்குந்தான் போட்டி. அதிலும் பெண்கள் அதிகம். பிச்சைப் போட்டியில் வெற்றி அவர்களுக்குத்தான். என்னைக் கண்டு ஏசுபவர்கள் பெண்ணைக் கண்டு இரங்குகிறார்கள். முதல் முறை இந்த பிச்சைக்காரக் கூட்டத்தில் தான் அன்பைக் கண்டேன். என்னை வருந்தி அழைத்து உண்ணச் செய்தவர்கள் இந்தக் கூட்டத்திலேதான் உண்டு. அதுவும் எப்பொழுதும் இல்லை. தேவைக்கு அதிகமாகக் கிடைத்தால் அதைப் பகிர்ந்து கொடுப்பவர்கள் பிச்சைக்காரர்கள் தான். மற்றவர்களிடத்திலே நான் காணவில்லை இந்த நல்ல பண்பை.

நான் பசியாலும், குளிராலும் நடுங்கித் திரிந்த நகரத்தில் ஓர் நல்ல காலம் பிறந்தது. பிச்சைக்காரர்களுக்கு ஓர் விடுதி கட்டினார்கள். வயோதிபர்களுக்கும், நோயாளிகளுக்கும் அது ஓர் அமைதி இல்லம். மற்றவர்களுக்கு வேலை தரப்படும் என்றார்கள். எனக்கு வேண்டியதெல்லாம் அது தானே? விரைந்து சென்றேன். விடுதியின் முன்னே பெரியதோர் வரிசை. ஒவ்வொருவராக அழைத்து விபரங்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். என் முறை வந்தது. பெயரைக் கேட்டார்கள். நினைத்துப்பார்த்துச் சொன்னேன்! என் பெயரை நான் காதால் கேட்டுப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன! பெற்றார் பெயரைக் கேட்டார்கள். அதையும் சொன்னேன். 'நீ தோட்டத் தொழிலாளியின் மகனா?' என்றார்கள். ஆம், என்றேன். 'உனக்கிங்கு இடமில்லை' என்றார்கள். எனக்கு ஏனென்று விளங்கவில்லை. எனக்கும் மற்றப் பிச்சைக்காரர்களுக்கும் என்ன வித்தியாசம்? எனக்கு விளங்கவேயில்லை.

அன்று நகரத்தில் பெரியதோர் கூட்டம். தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்து குவிந்திருந்தார்கள். மிகப் பெரிய ஊர்வலம். நானும் போனேன். பெரியவர் ஒருவர் பேசிக்கொண்டிருந்தார். "இந்த நாட்டை வளப்படுத்தியவர்கள் நாம். நாம் நட்ட தேயிலை இந்த நாட்டை வாழ்விக்கிறது. நம்மை வேலை இல்லாமல் ஆக்கி, நாடற்றவர்கள் என்று நசுக்கும் ஆணவம் ஒழிய வேண்டும். அதற்காக தொழிலாளர்கள் எமது கட்சியில் சேர வேண்டும். மற்றக் கட்சியில் சேரக் கூடாது. அவர்களை நம்பக் கூடாது. எமது கட்சியில் சேர்ந்தால் நாடற்றவர்களுக்கு நல்லதோர் வழி செய்வோம். நாடற்றவர்களுக்கு பிச்சைக்கார விடுதியில் கூட இடமில்லை என்று சொல்லும் அரக்கத்தனத்தை ஒழிப்போம். நமது பணத்தால் கட்டப்பட்டது அது. ஆனால் நம்மவருக்கு அங்கு இடமில்லை." என்றெல்லாம் கூவினார் அவர்.

எனக்கு இப்பொழுது விளங்கியது, எமக்கு ஏன் பிச்சைக்கார விடுதியில் இடமில்லை யென்று துரத்தினார்கள் என்பது. நாடற்றவன் என்றால் யாரென்று எனக்கு விளங்கவில்லை. எனக்குத் தெரியும் நான் ஓர் நாதியற்றவன் என்று. இரண்டும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். என்னைப்போன்றவர்களுக்கு பரிந்து பேசும் ஒருவர் இருப்பதைக் கண்டு என் பஞ்சடைந்த கண்கள் கூட மகிழ்ந்தன. அவரின் வீர உரை கேட்டு என் நலிந்த உடல் கூடத் துடித்தது. அவர் கட்சியில் சேரவேண்டும் என்ற ஆசை என்னை அறியாமல் பிறந்தது. கூட்டத்தினூடாக நகர்ந்து நகர்ந்து தலைவர் இருக்குமிடத்

திற்குச் சென்று, அவர் பேசி முடியுமட்டும் கால் கடுக்க நின்றேன். பேசி முடித்த பின் கூட்டத்தாரின் கைதட்டல் கேட்டு, மகிழ்ந்த முகத்தோடு நாற்காலியில் அமர்ந்தார். நான் அவரை நோக்கிக் கொண்டு நின்றேன். அவர் மெதுவாக மேடையிலிருந்து இறங்கினார். நான் அவரை நோக்கி ஓடி வணங்கினேன். 'ஐயா, நானும் உங்கள் கட்சியில் சேருகிறேன். நான் ஓர் நாதியற்றவன்' என்றேன். அவர் கண்கள் சிவந்தன. 'அயோக்கியப் பயலே' என்று ஓங்கி யறைந்து விட்டார். வேறு சிலர் ஓடி வந்தார்கள். அவர்களிடமும் அந்தப் பெரியவர் சொன்னார். 'பாருங்கள் இவன் திமிரை. இவன் நமது கட்சியில் சேருகிறானாம்'' என்றார். மற்றவர்களும் ஆத்திரத்தில் என்னைப் புடைத்தார்கள். கூட்டத்தை விட்டு ஓடி ஒளிந்துகொண்டேன் அடிக்குப் பயந்து. என்தலை சுற்றுகிறது. எனக்கு ஒன்றுமே விளங்க வில்லை. நாடற்றவர்களையெல்லாம் சேரச்சொன்னார்கள். சேருகிறேன் என்றால் அடித்துத் துரத்துகிறார்கள். நான் என்ன பிதற்றுகிறேனா ?... யாருக்கு வேண்டும் என்னை ?



## சத்திர சிகிச்சையும் தமிழரும்

மீன் கொத்திப் புள்ளின் மூக்கு நெடுவெள்ளூசி போன்றது என்று சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. நெடுவெள்ளூசி என்பது வெட்டுக் காயங்களைத் தைப்பதற்குப் பயன் படுத்தும் ஒருவகை ஊசியாகும். காயங்களைத் தைக்கும் ஊசியைப் பற்றிக் குறிப்பிடுவதால் அந்தக் காலத்தில் சத்திர சிகிச்சைமுறை இருந்திருக்கிற தென்பது புலனாகின்றது.

# வாழ்க்கை

— அன்புமணி —

ஊசியும் பொத்தானும் விற்பதால் வரும் சொற்ப வருமானத்தைக் கொண்டு நிம்மதியாக வாழுகிறன் யூசுப் காக்கா.

மாதம் முன்னூறு ரூபாவுக்கு மேல் சம்பளம் கிடைத்தும் என்னல் நிம்மதியாக வாழமுடியவில்லே

இருவிதமான வாழ்க்கையை எடை போட்டுக் காட்டுகிருர் கலேக்கழ்கத்தின் நாடகப் போட்டியில் முதற் பரிசைப்பெற்ற திரு. அன்புமணி (இரா. நாகலிங்கம்) அவர்கள். படித்துப்பாருங்கள்.

கால யந்திரத்தில் ஏறிக்கொண்டு இறந்த காலத்துள்ளும் எதிர்காலத்துள்ளும் பிரயாணம் செய்ய முடியுமாஞல் எவ்வளவு நேர்த்தியாக இருக்கும். எத்தனே விநோதங்கள், எத்தனே புதிய அனுபவங்கள் ! அசட்டுத் தனமான கற்பனேதான். என்ருலும் அந்த எண்ணமே எவ்வளவு இன்பமாக இருக்கிறது. அத்தகைய கிளுகிளுப்பை இதோ நான் உணர்கிறேன்.

ஆறு வருடங்கள் !

அப்பப்பா, அதற்குள்தான் எத்தனே மாற்றங்கள்

ஆறு வருடங்களுக்குமுன் தினம் இதே பாதையால் நான் பிரயாணம் செய்வேன். கால்கள் சைக்கிளே மிதித்துக் கொண்டிருந்தாலும், கண்கள் எதிர்ப்படும் காட்சிகளே ரசித்துக் கொண்டிருக்கும். மனம் எதை எதையோ தொட்டுக் கொண்டிருக்கும். தினமும் குறிப்பிட்ட சில இடங்களில், குறிப்பிட்ட சில மனிதர்கள், குறிப்பிட்ட சில சம்பவங்கள் அதோ, அந்தப் பெரிய வாகை மரத்தடியில் சில இளவட்டங்களின் அரட்டை, அந்தச் சுமைதாங்கியில் சில பெண்மணிகள் படுவான்கரைக் கிராமத்துப் பெண்களிடம், வெற்றிலே, கீரை, பொன்னுங்காணி முதலியவற்றுக்காக நடத்தும் பேரம், இந்த வளேவில் வெள்ளே வெளேரென்ற உடையில் பள்ளிக்கூடம் செல்லும் சிறுமிகளின் கூட்டம், இங்கிருந்து பள்ளிக்கூடம் வரும் வரை இங்கொன்றும் அங்கொன்றுமாக பள்ளிக்குச் செல்லும் சிருர்களின் குறுநடை ; இந்த இடத்தில் வேலிக் 'கடப்பில்' இடுப்பில் குழந்தையுடனும் பக்கத்தில் வீட்டு நாயுடனும் காட்சியளிக்கும் ஏழைச் சிறுமி சனசமூக நிலேயத்துக்கு எதிரே பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் கூட்டம்.

இத்தனே புதினங்களேயும் இன்றும் நான் காண்கிறேன். ஆனுலும் எத்தனே வித்தியாசம் !

அசிங்கமான தோற்றத்துடன் கோலி விளேயாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் வாலிபர்களாகி சற்று அழகாக உடுத்திக் கொண்டு, சுருளாக வாரிவிடப் பட்ட தலேயுடன் காட்சியளிக்கிருர்கள். அதற்குப்பதிலாக வேறுசில சிறுவர்கள் 'சட்டிக்கோடு' விளேயாடிக் கொண்டிருக்கிருர்கள்.

பழைய இள்வட்டங்களில் கூட சிலர் அதோ தென்படுகிருர்கள். ஆனுல் அவர்கள் அரட்டையையும், விளேயாட்டையும், கேலியையும் இப்போது காணவில்லே. வாழ்க்கையை உணரத் தொடங்கிவிட்டார்கள் போலும்.

குறு குறு நடையுடன் சென்ற பள்ளிச் சிறுமிகள் இப்போ தாவணிபாவாடையுடன் நாணிக் கோணிக் கொண்டு செல்கிருர்கள். அடடே சில பழைய முகங்களேக்கூட அடையாளம் கண்டு பிடித்துவிட முடிகிறதே.

இதோ இந்தக் 'கடப்பில்'தான்--ஆகா! அந்த ஏழைச் சிறுமி இவ்வளவு வளர்ந்து விட்டாளா? அட கடவுளே! அவளுக்கு இரண்டு குழந்தைகள் வேறு.

இதோ பள்ளிக்கூடம் வந்து விட்டது.

ஆறு வருடங்களுக்கு முன் இதே பாடசாலையில் மாணவனுகக் கொட்டம் அடித்துக் கொண்டிருந்தேன். இன்று இதே பாடசாலையில் ஆசிரியனுகக் கடமை ஏற்கச் செல்கிறேன். பாடசாலையின் தோற்றத்தில் மாற்றம் எதுவுமில்லை. தோட்டத்தின் நிலையும் அப்படித்தான்.

இன்னதென்று விவரிக்கமுடியாத ஒரு விநோத உணர்ச்சியுடன் வாசலைத் தாண்டி உள்ளே செல்கிறேன்.

இதென்ன விந்தை!

வாசல் அருகில் யூசுப் காக்கா!

தலையில் கிழிந்த தொப்பி, காலில் நைந்த கான்வாஸ் செருப்பு. உடலில் அதே அழுக்கேறிய சாரமும் பொத்தல் தைத்த பழைய கோட்டும். வியாபாரம் கூட அதே பழையவியாபாரம்தான், கைகளில் இமிடேஷன் மாலைகளும், ஊசி, பொத்தான், நிப்பு முதலியவை செருகப்பட்ட அட்டைகள். முன்னுல் ஒரு அகலமான அட்டைப் பெட்டியில். பென்சில், பேனை, இரேசர், பிளேடுகள், மிட்டாய், டொபி முதலியன.

திடீரென்று இறந்த காலத்துள் பிரவேசித்து விட்டது போன்ற ஒரு உணர்ச்சி!

"யூசுப் காக்கா!" என்றேன் என்னையுமறியாமல்

அவர் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. எப்படி முடியும்? அரைக் காற்சட்டையுடனும், அழுக்கடைந்த சட்டையுடனும் ஒரு டொபிக்காக அவரை வளைய வந்த 'குறும்பன்', அப்பழுக்கற்ற வெள்ளை உடையில் 'ஆஜானுபாகுவாக' அவர் முன் நிற்பேன் என்று அவர் எதிர்பார்த்திருக்க முடியாதல்லவா?

"நான்தான் காக்கா நாராயணன்--குறும்பன்"

"அடேடே! தம்பியா? அடேயப்பா! எப்படி வளர்ந்திருக்கே?"

"நீ மட்டும் அப்படியே இருக்கிறுயே, நெடுகிலும் இதேதானு!"

"ஆமா தம்பி, இதே வியாபாரம் தான், இதே இடம்தான். அல்லாட கிருபையால் எனக்கு ஒரு குறையுமில்லை. ஆமா, நீங்க எப்படி சொகமா இருக்கீங்களா? கண்ணுலம் கின்னுலம் கட்டியிருக்கீங்களா?......

"ஹிஹி......ம்... குழத்தைகூட ஒன்று இருக்கிறது.

"அடடே! அப்படியா? மிச்சம் சந்தோசம். மிச்சம் சந்தோசம்!

"அது சரி உன் குடும்பம் எப்படி? கஷ்டம் இல்லாமல் சீவியம் நடக்குதா? சந்தோஷமாக இருக்கிறீங்களா? குழந்தைகள் எத்தனை?"

"அல்லாட கிருபையால ஒரு கவலையுமில்லாமல் காலம் போகுது. இப்ப நாலு குழந்தைங்க. பெரியவனை ஊரில் பள்ளிக்கூடத்தில் சேர்த்திருக்கேன்"

"அப்படியா?"

திடீரென்று அவன் வாழ்க்கைப்படகு என் சிந்தனை ஆற்றில் மிதந்தது.

இந்தச் சின்ன வியாபாரத்தில் கிடைக்கக் கூடிய வருமானம் ஆறுபேரைக் கொண்ட குடும்பத்தைப் பாதுகாப்பது மல்லாமல் அதைச் சந்தோஷமாகவும் வைத்திருக்க முடிகிறது. ஊசியும் பொத்தானும் விற்பதால் தினம் எவ்வளவு வந்து சேரப் போகிறது. அந்த சொற்ப வருமானத்தைக் கொண்டு யூசுப் காக்கா சந்தோஷமாக வாழ்க்கையை நடத்துவது விந்தை இல்லையா?

யூசுப் காக்காவின் வாழ்க்கையை ஒப்பிட்டது மனம். மாதம் முன்னூறு ரூபாவுக்குமேல் சம்பளம் கிடைத்தும், நிம்மதி

யில்லை. நாலா பக்கமும் கடன். என்னுடன் படித்த இப்ராஹிமும், இம்மானுவேலும் வேறு துறைகளில் ஈடுபட்டு ஆயிரக் கணக்கில் பணம் சாம்பாதிப்பதை எண்ணி எண்ணி மனம் புழுங்குவதிலேயே என் நிம்மதியில் பாதி போய்விடும். அவர்களுடைய மாமனார்கள் கொழுத்த சீதனம் கொடுத்தார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி என் மனைவியின் இளம் உள்ளத்தைப் புண் படுத்துவதனால் எத்தனையோ நாட்கள் நரகவேதனை 'அனுபவிக்க நேர்ந்ததுண்டு.

திரும்பவும் நான் இறந்த காலத்தினுள் சென்று யூசுப் காக்கா கொடுக்கும் மிட்டாயை ருசித்து மகிழும் 'குறும்ப' னாக மாறக் கூடாதா ?

''டாங்...! டாங்... டாங்...!

பாடசாலை மணி என் சிந்தனையை வெட்டியது.

''காக்கா மணி அடித்து விட்டார்கள். நான் இப்போ இந்தப் பள்ளிக் கூடத்தில் ஆசிரியராக வந்திருக்கிறேன். பிறகு பார்க்கிறேன். ''என்று கூறிவிட்டுப்புறப்பட்டேன்

''தம்பீ !'' என்று கூப்பிட்டார் யூசுப் காக்கா.

''இந்தாங்க, இதைக் குழந்தைக்குக் கொடுங்க'' என்று கூறி என் கையில் எதையோ திணித்தார். பார்த்தேன் இரண்டு 'டொபி'கள்.

என் கண்கள் பனித்தன. அவரை அப்படியே கட்டிக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

''சரி காக்கா''. என்று கூறியபடி காற்சட்டைப் பைக்குள் அவைகளைப் பத்திரப் படுத்திக் கொண்டு பாடசாலையை நோக்கி நடந்தேன்.

அவர் கொடுத்த 'டொபி'களில் ஒன்று தான் என் குழந்தைக்குக் கிடைத்தது. ஒன்றை நான் களவாடிவிட்டேன்.

◉

## மட்டக்களப்பு

### ( நாநில மயக்கு )

திருவளர் தாமரைத் தெண்ணீர்ப் பொய்கைவாய்
உருவ ஒண்சிறுஅர் மலராய்ந் துழக்கலின்
செழுநீர்ப் பறவைத் தொழுதிக ளெழுந்தே
கொழுமாற் றெம்புகிற் குயிலொடு பயிலும்
தாட்டுணை கூடலர் சதங்கைக் கூத்தொலி
சூட்டுமிசை மயிலின் தோகைதுயி லெழுப்பும்
பால்மலி ஒருமைப் பகட்டொடு மயங்கி
மால்மருப் பிலானை வனந்தொறுந் திரியும்
குடம்பொழி பசுவினம் கண்துயி லிடந்தொறும்
மடம்பயில் வன்புல் களிக்கும்

புலவர்மணி ஏ. பெ. —

## கையெழுத்துப் பிரதிகள்

சமீப காலத்தில் எமது பகுதியில் ஏற்பட்டுள்ள இலக்கிய விழிப்புணர்ச்சி பல கையெழுத்துப் பத்திரிகைகளை உருவாக்கியிருக்கிறது. கிழக்கிலங்கையிலே இயங்கி வரும் கையெழுத்துப் பத்திரிகைகளில் எமக்குக் கிடைத்த சிலவற்றின் விபரங்களைக் கீழே தருகிறோம். இலக்கிய வளர்ச்சியில் அக்கறையுள்ள அன்பர்களுக்கு இது மிகவும் பயனுடையதாயிருக்கும் என்பது எமது நம்பிக்கை.

| பத்திரிகையின் பெயர் | ஆசிரியர் | முகவரி |
|---|---|---|
| காலைக்கதிர் | கிரீதரன், தீன், கவிவாணன் | ஏறுவூர் |
| விண்ணொளி | பொன்னரி, தர்மா | கிரான் |
| கிழக்கொளி | சோமு, இளந்திரையன் | கொம்மாதுறை |
| பொற்கிழி | மஹ்றூப்கரீம் | காத்தான்குடி |
| கலைக்கன்னி | நவலி, கலையேந்தி | ,, |
| இலக்கிய இதழ் | நவ இலக்கிய மன்றம் | ,, |
| மழலைத் தென்றல் | ஆசிரியர் பெயர் தெரியவில்லை | முதலைக்குடா |
| ஆம்பல் | முகில்வண்ணன், சிவா | பாண்டிருப்பு |
| பாண்டிச்சோலை | கு. க. பிள்ளை, அமுதன் | ,, |
| துளசி | சண்முகம் | காரைதீவு |
| இளைஞர் மலர் | கணபதிப்பிள்ளை | ,, |
| முல்லை | சாம்பசிவம் | ,, |
| குறிஞ்சி | பொற்குணநிதி | ,, |
| தமிழ்மணி | தங்கராசா | ஆரயம்பதி |
| கதிரவன் | மாயமான், மலைமதி | திருகோணமலை |
| கயல் | ஆசிரியரின் பெயர் தெரியவில்லை | ,, |


◉ நாட்டிலே உலவிவரும் நற்கருத்துச் சஞ்சிகைக்கும்

◉ வீட்டிற்கு வேண்டிய விருப்பமுள்ள பொருட்களுக்கும்

◉ சிந்தனைச் சிற்பிகளின் சிரசான புகைத்தினுசுக்கும்

◉ புத்தகங்கள்

◉ பால்வகைகள்

இத்தனைக்கும்

# குமரன் ஸ்ரோர்

குமரன் ஸ்ரோர்

27, திருமலை வீதி, மட்டக்களப்பு.

# "விவேகி"

மாத இதழ்

வருட சந்தா ரூ 4.

விபரங்களுக்கு :

ஆசிரியர், விவேகி

29, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 274.

# மூன்று பிடி மண்

ஏ. யூ. எம் அப்துல் கரீம்.

முந்திய நாட்களிலே நிகழ்ந்த மேடுபள்ளமான நிகழ்ச்சிகளெல்லாம் 'மூன்றுபிடி மண்' போடும் வேளையிலே சமப்படுத்தப் பட்டு விடுகின்றன. இது இறுதியிலேதான் ஏற்பட வேண்டுமா ?

மெல்லிய தென்றல் காற்று மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. நீலவானில் மின்னும் நட்சத்திரங்களுக்குத் தலைமை தாங்கி நடாத்திச் செல்வது போல் முழுமதி தன்பூரண ஒளியை அள்ளி வீசிக்கொண்டு பட்டுப் போன்ற எழில் மேகங்களினூடே தவழ்ந்து கொண்டிருந்தது, களங்கமற்ற குழந்தையின் உள்ளத்தை இக்காட்சிகள் ஒத்திருந்தன !!! கல்முனைப் பகுதியிலே கரவாகுவட்டை விளைந்தால் கலகலப்புக்குக் குறைவேயில்லை. ஆனால் இம்முறை ...? பருவமழை பொய்த்து விட்டதால் வாய்க்கால்கள் வரண்டுகிடந்தன இயற்கையை நம்பி ஏற்கெனவே பயிரிட்ட விவசாயிகள் வானத்தையும் வயலையும் மாறி மாறிப்பார்த்தனர். குளத்திலே—ஆற்றிலே இருந்த கடைசிச் சொட்டுக் தண்ணீரும் காலியான நேரத்திலே கதிர்கள் பொதி வைத்து நின்றன. இரண்டொரு முறை தண்ணீர் பாய்ந்து விட்டால் கதிர்க் குலைகள் தங்கமாய்ப் பழுத்து விடும். தண்ணீருக்காக ஏங்கி நின்ற கல்முனைப் பகுதிக் கமக்காரர்கள், கல்லோயா அணைக் கட்டுக்குப் பொறுப்பான அதிகாரிகளை வலம் வந்தனர். பேட்டியும் பயன் தந்தது அணையிலிருந்து ஒன்றரை அடிக்தண்ணீர் விடும்படி உத்தரவும் கிடைத்தது, இரவையெல்லாம் பகலாகக் கருதி விவசாயப் பெருமக்கள் குளத்து மடைகளிலே முக்காலி கட்டி நீர்ப்பாய்ச்சுவதில் ஈடுபட்டிருந்தனர். ஊரிலே பெரிய புள்ளியும், புதுப் போடியாருமான சம்சுதீன் வயலையொட்டி முஸ்தபாவுடைய சின்ன வயலும் விரைப்போடு பூமணம் சுமக்கத்திணறும் மாப்பிள்ளை போல கதிர்ப்பாரம் தாங்காது விளைந்து குலைகட்டிக் கிடந்தது. இஸாத் தொழுகையை முடித்துவிட்டு வந்த முஸ்தபாவும் புதுநிலாவொளியில் ஏற்றைப் பிடித்து இறைத்துக் கொண்டிருந்தார். உடனே போடியாரின் ஆட்கள் ஓடிவந்து அவரைத் தடுத்தனர். "பொடியாரின் வயலுக்கு நாங்கள் தண்ணீர் இறைத்து முடிந்தபின்புதான் நீ உன் வயலுக்குத் தண்ணீர் இறைக்கலாம்' என்று அவர்கள் எச்சரிக்கை செய்தபோது முஸ்தபாவின் நரம்புகள் முறுக்கேறின, "ஏண்டாப்பா அகங்கார வெறியிலே அல்லா படைத்த தண்ணீரையுமா தடை செய்ய வேணும்?" என்று கொஞ்சம் உரக்கத்தான் கேட்டுவிட்டார். "உதையுங்கடா அந்த நாயை" என்று கூறிக்கொண்டே போடியார் சம்சுதீன் (பறனில்) உயரத்தில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தார். 'ஏண்டாப்பா ?" என்று ஒரு வார்த்தை கேட்டதன் காரணமாக முஸ்தபா "போடியாரின் ஆட்களான றவுடி 'ஹைப்பாட்டுகளால்' நன்றாக உதைக்கப்பட்டார். இதைக் கண்ட போடியார் சம்சுதீன் கை கொட்டி ஏளனமாய்ச் சிரித்தார். "ஹ ஹ.. ஹா..!.." "தரித்திரம் பிடித்த பிச்சைக்கார வடுவா! எதித்து கதைக்கிது. பல்லக்களத்துவன் பெர்ரிய தொழுகைக்காரன் ..' வராலில்லாக்குளத்தில் குறட்டை ஆட்சி நடத்தும்

காலம். புதுப்பணக்காரன்; முட்டாள்; காவாலி; இவனுடன் மோதிக் கொள்வதால் நம்மானம் போம், மரியாதை கெடும் வேண்டாமென்று முஸ்தபா பேசாமல் இருந்து விட்டார். உடம்பெங்கும் வேதனையின் வலி தாங்கவில்லை.

× × ×

கல்முனை பெரிய பட்டணமாக வந்து ஏறக்குறைய இரண்டொரு தலைமுறைகளுக்கு மேலாகி விட்டது. இருந்தாலும் சுமார் மூன்று வருடங்களுக்கு முன் அரசையடிச் சந்தியில் பெரிய பாய் ஒன்றை விரித்துப் போட்டுக்கொண்டு தவிட்டு வியாபாரமும், தயிர் வியாபாரமும் செய்தவர்தான் நமது சம்சுதீன். இவர் பரம்பரையைப்பற்றி இந்த ஊர் மக்களை விசாரிக்க வேண்டியதில்லை. கல்முனைச் சந்தியிலே கடலை வியாபாரம் செய்து வரும் கறுப்பனைக் கேட்டால் கூட எல்லாம் விபரமாய்ச் சொல்வான். மானத்தோடு கண்ணியமான முறையில் வியாபாரம் செய்த எத்தனையோ பெரிய முதலாளிமார்களையும் இந்த மூன்று வருடங்களுக்குள் பணத்தால் ஏணி கட்டிப் பிடித்துவிட்டார் சம்சுதீன் போடியார். தவிட்டு வியாபாரத்தில் முக்கால் மரைக்காலால் அளந்து கொடுத்து இருட்டடிப்புச் செய்ததின் பயனாகப் பண ஏற்றம் பெற்று விட்டார். "முயற்சி திருவினையாக்கும்" என்றபடி சம்சுதீன் போடியாரின் தவிட்டு வியாபாரம் நெல் வியாபாரமாக மாறி ஏறிக்கொண்டே போனது. இதற்கேற்றாற்போல கரவாகு வட்டையும் தொடர்ந்து இரண்டு வருடங்களாக நிலச் சொந்தக்காரரான விவசாயப் பெருமக்களைக் கை விட்டது. வானம் பொய்த்தது! ஏமாற்றியது! ஒன்றிரண்டிடங்களில் பயிர் பிடித்திருந்தாலும் பூச்சி விழுந்து அதையும் நாசமாக்கியது. போதாக் குறைக்குக் கூப்பன்கடையில் ஏற்பட்ட கொடுமையின் காரணமாய் அரிசி—நெல் விலை சரிந்து விட்டது. குத்தகைக்குக் கொடுத்தும் கூட நஷ்டம் கண்ட விவசாயிகள் பலர் கடன் பளுவைத் தாங்கமுடியாது நிலத்தை ஏலத்தில் விற்க ஏற்பாடு செய்தனர். கொழுத்த பணக்காரராகி விட்ட சம்சுதீன் தனது பரம்பரைக்கு அரை அங்குல நிலம்கூட சொந்தமில்லாமல் கிடந்த சம்சுதீன் எல்லா நிலத்தையும் ஏலம் எடுத்துத் தனக்கே சொந்தமாக்கிக் கொண்டார். கட்டிய மனைவியைக் காப்பாற்றாது காவாலி வாழ்க்கை வாழ்ந்த சம்சுதீனுக்கு எத்தனை பெண் கேட்டாலும் கொடுக்கப் பல ஏழைக் குமர்களின் பெற்றார் தயாராயிருந்தனர். ஆனால் கண்ணிய வாழ்க்கை வாழ்ந்த முஸ்தபாவின் மகள் அழகிய சல்மாவின் மேல்தான் சம்சுதீனின் கண்கள் விழுந்தன. விஷயம் முஸ்தபாவின் காதுகளுக் கெட்டியபோது அவர் காதில் சம்மட்டி கொண்டடிப்பது போலிருந்தது. "கல்யாண மில்லாமல் என் வாழ்வு பூராவுமிருக்க நேரிட்டாலும் பரவாயில்லை. அந்தக் காவாலி எனக்கு வேண்டாம்" என்று ஒரேவார்த்தையில் கூறி விட்டாள் சல்மா. இதற்குப் பிறகு நடந்தவை தான் முஸ்தபா குடும்பத்தினரின் வாழ்வையே பூண்டோடறுக்க சம்சுதீன் போடியார் திட்டங்கள் தீட்ட ஆரம்பித்தலும்; இடை இடை செய்துவந்த காடைத்தனங்களும்...

× × ×

நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக முஸ்தபாவின் உள்ளத்தில் நிழலிட்டன. இந்த நிலையில் சம்சுதீன் போடியாரும் ஆட்களும் தண்ணீர் இறைத்து முடித்துப் போய்க்கொண்டிருந்தனர். முக்காலியை நிமிர்த்தி நாட்டி ஏற்றைப் பிடித்து இறைக்க ஆரம்பித்தார் முஸ்தபா. நிர்மலமான தடாகத்திலே சின்னஞ்சிறு கல் விழுந்தாலும்கூட நீர்த் திவலைகளும், குமிழிகளுமாக விசும்புவதைப் போல சற்று முன் நடந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக

முஸ்தபாவின் இதயக் குளத்திலே அலை மோதின.

சோர்ந்துபோய் வீடு வந்த அவர் எப்போது கண்ணுறங்கினார் என்பது அவருக்கே தெரியாது! காலை யிளந் தென்றலிலே மிதந்துவந்த குளிர் அவருடலைக்கட்டிலோடு பிணைத்ததென்றாலும "பஜர்" தொழுகையின் அழைப் பொலி அவர் காதிலே விழுந்தபோது பள்ளிவாசலை நோக்கி விரைந்தார் முஸ்தபா. உள்ளம் இறை தியானத்தில் உருக அவர் உடல் குனிந்து வளைந்து தொழுகையின் பின் இரு கரங்களையுமேந்தி இறைவனிடம் பிரார்த்தித்தார். யாஅல்லாஹ் உன்னையும் வணங்காது பஞ்சமா பாதகங்கள் அனைத்தும் புரிந்து கொண்டு உன் அடியார்களாகிய நல்லோரின் வாழ்வுக்கும் படுகுழிவெட்டும் பாபிகளையும் நீ பார்த்துக் கொண்டிருக்கிறாய்! .. ..இது போலவே அல்லாஹ் வம்பரான பெருமைக் காரருடைய கல்புகள் எல்லாவற்றின் பேரிலும் முத்திரையை அழுத்துகிறான் ..." "கர்வங் கொண்ட வம்பர்கள் எல்லாரும் கெட்டார்கள்..." என்று உன் புனித மறையில் கூறினாயே. ஏழைக் குமர்கள் இப்பாவிகள் தொல்லையால் சீவிக்க முடியாதா அல்லாஹ் "நான் விரும்பும் போது என் அடியார்களைச் சீமானாக்குகிறேன்" என்றாயே. உன் மொழி பொய்யா மொழியல்லவா ?...... இறைவா நான் என்ன பாவம் செய்தேன்... "இப்படியே அவர் ஏந்திய கரத்துடன் இறையிடம் முறையிட்டார். அவர் கன்னங்களில் வழிந்த நீரின் சூடுபோல் அவர் உள்ளமும் கொதித்தது. வீடு வந்து சேர்ந்த அவரிடம் மகள் சல்மா பரபரப்போடு சொன்னாள்'...... வாப்பா! சம்சுதீன் போடியார் தண்ணீர் பொறுத்து மௌதாகி விட்டாராம். மாரடைப்பு என்று சொல்கிறார்களாம். பக்கத்துவீட்டுத் தங்க மாமி சொல்லிவிட்டுப் போனா. ஓட்டமும் நடையுமாகப் பள்ளி வாசலை நோக்கி விரைந்தார் முஸதபா, சம்சுதீன் போடியாரின் உடலைத் தாங்கிச் சென்ற பெட்டி பட்டுப் பிடவைகளால் போர்த்தப்பட்டுப் புதை குழியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. எல்லோரையும் போல் சம்சுதீன் போடியாரின் சவக்குழியில் முஸ்தபாவின் கரங்களும் மூன்றுபிடி மண்ணை அள்ளிப்போட்டன.

× × ×

மையிதை அடக்கி விட்டு வந்த முஸ்தபாவின் மடியிலே அவரின் கடைசிக் குழந்தை மர்லியா விசும்பிக் கொண்டிருந்தாள். உலக வாழ்க்கையின் நிலையாமையையும், இறைவனின் திருவிளையாடல்களையும் நினைத்தபோது அவர் தாடியிலேயே நீர் வழிந்தது !



*For Quality Printing*

*Visit*

# FATIMA PRINTERS

**17, Trinco Road, Batticaloa.**

அழகான அச்சு வேலைகளுக்கு

# பாத்திமா அச்சகம்

17, திருமலை வீதி, மட்டக்களப்பு.

---



எங்களிடம் நீங்கள் விரும்பும்

- மாலா மணிப்புரி சாரிகள்
- லதா மணிப்புரி சாரிகள்
- காஷ்மீர் பட்டுச் சாரிகள்
- வொயில் ரக சாரிகள்
- கூறை பட்டுச் சாரிகள்

மற்றும் பட்டு பருத்தி ஆகிய ஆடைகளும் நயமான விலையில் விற்பனைக்கு இருக்கிறது.

இன்றே விஜயஞ் செய்யுங்கள்

# கிறவுண்'ஸ்

12, பிரதான வீதி, மட்டக்களப்பு.

# உரைநடையின் மறுமலர்ச்சி

— சிறீதரன் —

மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலே எச். எஸ். ஸீ வகுப்பில் படித்து வரும் இளைஞர் இவர். ராதாகிருஷ்ணன் என்பது இவரின் இயற்பெயர். இலக்கியத் துறையில் ஆர்வமுள்ளவர்.

ஐரோப்பியரின் தமிழக வரவினுல் ''தமிழ் வசனநடை'' எழுந்ததாக பல நூல்களின் ஆதாரங்களால் நாம் அறிகிறோம். கிறிஸ்தவர்கள் தங்கள் சமயத்தை தமிழ் நாட்டில் வளர்க்க வந்ததன் பொருட்டு தமிழை நன்கு படித்து உரை நடை நூல்களை எழுதப் போந்து அச்சியந்திரங்களை வருவித்துப் பல தமிழ் நூல்களைத் தோற்றினர். இவ்வாருகத் தமிழில் ஒரு புதிய திருப்பம் உண்டானது.

16-ம் நூற்ருண்டில் தோன்றிய வசன நடையானது தமிழ் மக்களின் இலக்கிய வரலாற்றிலே புதிய திருப்பத்துடன் முற்றிலும் ஒருபுது எழுச்சியிலே உருவானது. அதன் வளர்ச்சி 16-ம், 17-ம், 18-ம், 19-ம் நூற்ருண்டுகளுடன் ஒப்பிடும் போது அவ்வளவாக விரிவெய்தியதாகக் கருத முடியாது. ஏனெனில் அக்காலத்தில் எழுந்த நூல்கள் ஒரு சிலவேதான் இன்றும் நிலைத்திருக்கக் கூடியனவாயுள்ளன. இக்காலத்தில் எழுந்த நூல்கள் மக்களின் வாழ்க்கையை ஒட்டி அவர்களுடன் ஒன்றித்துச் செல்லவில்லை. இந்நூல்கள் குறிப்பிட்ட ஒன்றிற்காகவே தோற்றுவிக்கப்பட்ட நூல்கள். பிற்காலத்தில் அழிவனவாயின.

1577-ம் ஆண்டில் எழுந்த முதல் உரை நடை வசனநூல் ''கிறிஸ்தவ வேதோபதேசம்'' 17-ம் நூற்ருண்டில் தத்துவ போதக சுவாமிகள் (Robert Denobili) எழுதிய ''ஆத்தும நிர்ணயம்'' ''கடவுள் நிர்ணயம்'' ''யேசுநாதர் சரித்திரம்'' என்பன சிறந்தவை. இதே காலத்தில் வாழ்ந்த வைத்தியநாத தேசிகர் என்பவரின் இலக்கண விளக்கம் என்ற நூலும் சிறந்த தொன்ருகும்

18-ம் நூற்ருண்டில் எழுந்த வீரமாமுனிவரின் (Constantius Beschi) ''வேத விளக்கம்'' ''வேதிய ரொழுக்கம்'' ''பரமார்த்தகுரு கதை'' என்ற வசன நூல்களும் ''தொன்னூல் விளக்கம்'' என்ற இலக்கண நூலும் ''சதுரகராதி'' என்ற அகராதியும் இவரால் இயற்றப்பட்டன. தமிழில் இயற்றப்பட்ட முதல் அகராதி இதுதான். இக்காலத்தினிடை வாழ்ந்தவர்களில் குறிப்பாகச் சொல்லப்பட வேண்டியவர் நம் நாட்டினிடைத் தோன்றிய ஆறுமுகநாவலர் ஆவர். இவருடைய உரைநடை நூல்கள் ''பெரிய புராண வசனம்'' ''திருவிளையாடற் புராண வசனம்'' ''சைவவினுவிடை'' முதலிய பலவாகும்.

இருபதாம் நூற்ருண்டின் முற்பகுதியில் எழுந்தவர்களில் பாரதி முதல் வைத்துப் போற்றுதற்குரியவர். பாரதியின் கட்டுரைகளும், கதைகளும் உரை நடைக்கு ஒரு புதிய மறுமலர்ச்சியைக் கொடுத்தன ஆனுல் தமிழைத் தனித்தமிழ் நடையாகப் பாவித்துத் தனித் தமிழுக்கு உள்ள சிறப்பையும் பெருமையும், இனிமையும் தமிழ் நாட்டிற்கு அளித்த பெருமை மறைமலையடிகளாரைச் சாரும் அவர் தூய தனித் தமிழ் நடை இன்று மிகவும் வரவேற்கப் படுவதாக இருக்கிறது.

இந்நூற்ருண்டில் ஏற்பட்ட தமிழுரை நடை மக்களிடையே ஏற்பட்ட தமிழார்வத்தாலும், தமிழ் வளரவேண்டும் என்ற விழிப் புணர்ச்சியாலும் விரைவாக முன்னேக்கிச் சென்று கொண்டிருக்கிறது. ஆங்கிலக் கல்வி, விஞ்ஞானக் கலை வளர்ச்சி, பொது மக்களின் விழிப்புணர்ச்சி இவைகளின் துணையினுல் ஏற்பட்ட புதுப்போக்கின் காரணமாக மக்களிடைத் தோன்றிய பழைய சாதிக் கட்டுப்பாடு, சமயக் கட்டுப்பாடு, பொருளாதாரப் பிரச்சனை என்பன மறைந்து செல்வனவாயின.

வ. வே. சு. ஐயர், டாக்டர் சாமிநாதையர் கல்யாண சுந்தர முதலியார், புதுமைப்பித்தன், தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, சுவாமி விபுலானந்தர். S. சோமசுந்தர பாரதியார், டாக்டர் மு வரதராசனார், டாக்டர் மா. இராசமாணிக்கம் பிள்ளை, கி. வா. ஜகன்நாதன். M. இராகவையங்கார், மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், கா. சுப்பிரமணியப்பிள்ளை. S. வையாபுரிப் பிள்ளை ரா. பி. சேதுப்பிள்ளை என்பவர்கள் போற்றுதலுக்கு உரியவர்கள். இவர்கள் யாபேரும் செய்த நூல்களும் இன்னும் குறிப்பிட முடியாமல் விடப்பட்டிருக்கும் இன்னும் அநேகர் செய்திருக்கும் நூல்களும் மற்ற நூற்றாண்டிலும் பார்க்கத் தமிழ் உரை நடை விருத்தியுற்றிருக்கிறது என்று நாம் பெருமைப்பட வேண்டும். இருபதாம் நூற்றாண்டு இன்னும் முற்றுப் பெறாமல் இருக்கும் இந்த அரை நூற்றாண்டில் இவ்வாறு தமிழ் விருத்தி பெற்று இருக்கும் நிலையை நோக்கின் இனிவரும் காலங்களில் இதனினும் தமிழ்விருத்தியடைந்துமேன்மை பெற்று விளங்கும் என்பது சொல்ல வேண்டியதில்லை.

ஆங்கிலேயரின் வரவால் நம் தமிழ் பல வழிகளிலும் சிறப்புற்றது. இதன் காரணமாகத் தமிழ் பலவேறுபட்ட மொழிகளுடன் சேர்ந்து புதிய மறுமலர்ச்சியினை அடைந்தது. இத்தகைய புதிய நடையில் இதன் வளர்ச்சி திரும்பியதால் தமிழ் உரை நடைக்கு உரம் கொடுப்பதாயிற்று.

பாரதி கவிதைக்கு ஒரு மறுமலர்ச்சியைக் கொண்டு வந்ததுபோல உரை நடைக்கு ஒரு புதிய உத்வேகத்தை உண்டாக்கி வைத்தார். அவரின் வழியே வந்த பிற்காலத்தோர் அதை வளம் பெற்ற ஒரு சோலை ஆக்கினார்கள்,

கவிதைகள் கொடுக்கும் உணர்ச்சிவேகம் உரை நடையிலும் உண்டு என்பதை முதன் முதலாக எடுத்துக் காட்டி அதன்படியே செய்துகாட்டியவர் ராஜமையாரகும.

சிறந்த சிறுகதைகளைப் புனைந்த புதுமைப்பித்தனும். கு பா இராஜகோபாலனும் இன்னும்எம்மிடையே இல்லா விட்டாலும் இவர்கள் செய்த சேவை அளப்பரியது எனக் கொள்ளல் மிகையாகாது. இன்று எம்மிடையே வாழும் இராஜாஜி, மணிவண்ணன், கி வா. ஜகன்நாதன், டாக்டர் மு. வ. ஆகிய இவர்களின் சிறு கதைகளிடையே பொதிந்துள்ள வாழ்க்கைத் தத்துவமும் அறமும் இலக்கிய நறுமணமும் குறிப்பாக உள்ளதை யாம் மறக்க முடியாது. சுத்தானந்த பாரதியார் C. N. அண்ணாத்துரை அகிலன் விந்தன் ஆகியோரால் எழுதப் பட்ட சிறு கதைகளிடையே சமுதாயத்தின் சிக்கல்களும் மனிதனின் வாழ்க்கைப் போராட்டமும், காதலும், கடமையும், வீரமும் ஒன்றுடன் ஒன்று மோத அவைகளில் பிறக்கும் சுவையும் உள்ளபடியே உள்ளபடி எமக்கு வெட்ட வெளிச்சமாக வெளிப் படுத்தும் தன்மையும் சாண்டில்யன் ஜெக சிற்பியன் கல்கி போன்றோர்களின் கற்பனையும் சரித்திரம் பல தரப்பட்ட குணுதிசயங்களைக் கொண்ட குணசித்திர பாத்திரங்கள் ஆகிய அடங்கிய அரசகதைகளும் முக்கியமாகக் குறிப்பிடப் படவேண்டியவையே.

இந் நூற்றாண்டின் கண்ணே நாடக நூல்களும் பல எழுந்தன. அவற்றில் பாரதி தாசன், சுத்தானந்த பாரதியார், மு. கருணாநிதி போன்றவர்கள் சிறப்பாகக் குறிப் பிடத்தக்கவர்கள்.

உரைநடையின் வரவின் காரணமாக பிறமொழியில் உள்ள இலக்கியம் விஞ்ஞானம் சரித்திரம் மற்றும்புதிய புதிய ஆராய்ச்சிகள் எல்லாம் தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப் படுவதாயிற்று. இவ்வாறாக தமிழ்மொழி தன் வளர்ச்சியில ஒரு இடத்தில் மாத்திரம் திளைத்து நிற்கவில்லை. எங்கெல்லாம் தமிழ்மொழி தமிழ் கலாச்சாரம் உண்டோ அங்கெல்லாம் வளர்வதாயிற்று.

இலங்கையில். குறிப்பாக கிழக்கு, வடக்கு மாகாணங்களில் தமிழ் உரைநடை வளர்ச்சி முன்னேக்கிக் கொண்டிருக்கும் இந் நேரத்தில் இதை ஈண்டு குறிப்பிடுவது அவசியமாகின்றது. திமிலைத்துமிலன், நவம், S. பொன்னுத்துரை, அருள் செல்வநாயகம். ரஜனி, சொக்கன், டொமினிக் ஜீவா, உதயணன், இளங்கீரன் ஆகிய மற்றும் பலர் செய்யும் பணிகள் எல்லாம் சிறுகதையின் போக்கிற்கு ஆதாரங்களாம். இத்துடன் தமிழ் உரைநடை இலக்கியத் துறையில் இந்நாட்டுக் கேற்ற சிறப்பான முறையில் பணி செய்பவர்களான பண்டிதர் ப. கந்தையா. V. கணபதிப்பிள்ளை, பண்டிதர் பூபாலப்பிள்ளை, பேராசியர் க. கணபதிப் பிள்ளை, கலாநிதி வித்தியானந்தன், பண்டிதர் சோ. இளமுருகனார் ஆகிய இவர்கள் வாயிலாக நம் தமிழ் உரை நடை வளர்ச்சி விருத்தி அடைந்து வருகிறது என்பதை நாம் மறுப்பதற்கில்லை

இக்காலத்தில் தமிழின் வளர்ச்சி இப் படியாக பல இன்ன லிடையேயும் வளர்ந்து வந்திருக்கின்றது. அஃது இன்னும் மென் மேலும் முன்னேறிக் கொண்டு செல்லும் என்பது தெளிவு.

"வளர்க தமிழ்!"

# அன்பளிப்பு செய்தவர்கள்

## கொமேசியல் கல்லூரி பழையமாணவர்கள்

| பெயர் | ரூ. ச. |
|---|---|
| செல்வி எம். . ஸீபாத்லெட் | 10 00 |
| திரு. ஈழத்து சிறி | 10 00 |
| ,, ஏ. ராஜதுரை | 10 00 |
| ,, கே. பொன்னுத்துரை | 6 00 |
| செல்வி எஸ். பரமேஸ்வரி | 5 00 |
| திரு. ரூபட் யோசேப் | 5 00 |
| ,, எஸ். தவராஜா | 5 00 |
| ,, ரீ. ஸீ. தேவசகாயம் | 5 00 |
| ,, த. சின்னத்தம்பி | 5 00 |
| ,, ஜீ. ஜெகந்நாதன் | 5 00 |
| செல்வி ஈ. கார்த்திகேசு | 5 00 |
| ,, ஆர். நல்லரெத்தினம் | 5 00 |
| திரு பீ. காந்தியடியான் | 5 00 |
| திருமதி கே. வள்ளிச்சாமி | 5 00 |
| திரு. ரீ. சிவசிதம்பரநாதன் | 5 00 |
| திருமதி ரீ. நேசராசா | 5 00 |
| திரு. எஸ். சாந்தலிங்கம் | 5 00 |
| ,, எஸ். சௌந்தரராஜன் | 5 00 |
| ,, ரீ. ஜெபராஜா | 5 00 |
| ,, எம். நடராஜா | 5 00 |
| ,, எஸ். ஏ. பெர்னண்டோ | 5 00 |
| ,, ரீ. தான்தோன்றி | 5 00 |
| ,, எம். விக்கிரமசிசன். | 5 00 |
| ,, ஸி. ரி. ஸ்ரீபன் | 5 00 |
| திரு. வீ. மகாலிங்கசிவம் | 5 00 |
| ,, நிக்கலஸ் | 5 00 |
| ,, கே. வீ. நவரெட்ணம் | 5 00 |
| ,, எம். கணபதிப்பிள்ளை | 5 00 |
| ,, ஸி. கே. பாஸ்க்கர் | 5 00 |
| ,, ரீ. நடனசபாபதி | 5 00 |
| ,, எம். பேரின்பநாயகம் | 5 00 |
| ஜனப் ஏ. யூ. எம். ஏ. ஹரீம் | 5 00 |
| ஜனப் யூ. எம். அபூபக்கர் | 5 00 |
| ,, எச். எம். அபூபக்கர் | 5 00 |
| திரு. ஜே. நல்லரெத்தினம் | 5 00 |
| ,, கே. சிவலிங்கம் | 3 00 |
| செல்வி எம். வைந்தராஜபிள்ளை | 3 00 |
| ,, ரீ. பொன்னுத்தம்பி | 3 00 |
| ,, எஸ். ஜாரரெட்ணம் | 2 00 |
| ஜனப் எம். எம். ஹனிபா | 2 00 |
| திரு. வீ. எஸ். திசவீரசிங்கம் | 2 00 |
| செல்வி பீ. அருளம்மா | 2 00 |
| ,, கே. அருளம்மா | 2 00 |
| திரு. கே. ஞானசூரியம் | 2 00 |
| ,, கே. பேரின்பம் | 2 00 |
| ,, கே. சுப்பிரமணியம் | 2 00 |
| ,, கே. பி. வேலுப்பிள்ளை | 2 00 |
| ,, கே. சோமசுந்தரம் | 1 00 |



## தற்போதைய மாணவர்கள்

### மட்டக்களப்பு மாணவர்கள்

| பெயர் | ரூ. ச. |
|---|---|
| திரு. செ. உருபசிங்கம் | 5 00 |
| ,, செ. வி. றமணி | 5 00 |
| ,, எஸ். வி. தர்மலிங்கம் | 3 00 |
| ,, ஏ. பூபாலப்பிள்ளை | 3 00 |
| ,, சி. பகவத்சிங்கம் | 3 00 |
| ,, பொ. தங்கவேல் | 2 50 |
| ,, பி. கார்த்திகேசு | 2 00 |
| ,, எம். லோகநாயகம் | 2 00 |
| ,, கே. பவளகாந்தன் | 2 00 |
| ,, கே. சித்திரவேல் | 2 00 |
| ,, எம். டானியல் | 2 00 |
| ,, எஸ். கனகாசலம் | 2 00 |
| ,, ரி. பி. அன்ரனி | 2 00 |
| ,, கே. பொன்னுத்துரை | 2 00 |
| ,, பி. சோதீஸ்வரன் | 2 00 |
| ,, இ. ஏ. ரி. சொய்சா | 2 00 |
| ,, எம். எவ். ஹஜறீன் | 2 00 |
| ,, எஸ். கருணகடாச்சரன் | 2 00 |
| ,, எஸ். கே. பொன்னுத்துரை | 2 00 |
| செல்வி கே. செல்லத்தங்கம் | 2 00 |
| ,, வி. விஜயகுமாரி | 2 00 |
| ,, எஸ். அருளம்மா | 2 00 |
| ,, பி. பூவனேஸ்வரி | 2 00 |
| ,, வி. விஜயலக்சுமி | 2 00 |
| ,, ஆர். அரியமலர் | 2 00 |
| ,, ரி. கமலாதேவி | 2 00 |
| ,, ஆர். அந்தோனியம்மா | 2 00 |
| ,, வி. தவமணி | 2 00 |
| ,, ஏ. வசந்தகோகிலம் | 2 00 |
| ,, சி. ஜேயேஸ்வரி | 2 00 |
| ,, பி. சாவித்திரி | 2 00 |
| ,, பி. ஜீவமலர் | 2 00 |
| ,, ஏ. சாரதா | 2 00 |

| பெயர் | ரூ. ச. |
|---|---|
| செல்வி எம். சோதீஸ்வரி | 2 00 |
| ,, க. மற்றில்டா | 2 00 |
| ,, கே. சிவலக்சுமி | 2 00 |
| ,, கே. அரியமலர் | 2 00 |
| ,, எஸ். சரஸ்வதி | 2 00 |
| ,, ஜே. வி. அரியமலர் | 2 00 |
| திரு. ரி. கந்தசாமி | 2 00 |
| ,, ஆர். சவுந்தரநாயகம் | 2 00 |
| ,, வீ. தட்சணாமூர்த்தி | 2 00 |
| ,, க. பாஸ்கரன் | 2 00 |
| ,, எஸ். சிங்கராசா | 2 00 |
| ,, வீ. சுந்தரமூர்த்தி | 1 00 |

### கல்முனை (கிளை) மாணவர்கள்

| பெயர் | ரூ. ச. |
|---|---|
| செல்வி ஜி. நடராசா | 5 00 |
| ,, ஆர். ஞானமலர் | 3 50 |
| ,, பீ. மயில்வாகனம் | 3 00 |
| திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி | 3 00 |
| செல்வி எம். சதாசிவம்பிள்ளை | 2 50 |
| ,, ஈ. ரீ. கார்த்திகேசு | 2 00 |
| ,, எம். கணபதிப்பிள்ளை | 2 00 |
| ,, ஸீ. கே. கந்தையா | 2 00 |
| ,, ஏ. சுகிர்தமலர் | 2 00 |
| திரு. கே. மெண்டிஸ்அப்பு | 2 00 |
| ,, எஸ். குமாரநாயகம் | 2 00 |
| ,, ரீ. கணேசமூர்த்தி | 2 00 |
| ,, ஏ. குலசேகரம் | 2 00 |
| ஜனாப் எம். எஸ். எஸ். ஏ. காதர் | 2 00 |
| திரு. கே. சண்முகம் | 2 00 |
| ,, ரீ. தர்மலிங்கம் | 2 [illegible] |
| ஜனாப் ஏ. எம். அமீர்அலி | 2 00 |
| திரு. ஜி. மயில்வாகனம் | 2 00 |
| ,, வீ. சிவலிங்கம் | 2 00 |
| ,, வீ. பாலசுந்தரம் | 2 00 |

*

ஆசீர்வாதம் அச்சகம், 32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

SASELvanayagam

**SELVANAYAGAM'S**

For Motor and Electrical Repairs, Lubrication Service etc.

**SELVANAYAGAM'S**

For Shell with I. C. A, Super Shell Diesoline & Shell Sun Kerosene

**SELVANAYAGAM'S**

For Motor Cars, Motor Cycles, Raleigh Bicycles, Electric pumps, Agricultural Pumps, Radios, Cookers, I. C. I. Paints, Oxygen etc.

**SELVANAYAGAM'S**

For Fertilisers For Agricultural Chemicals

For Forage & Poultry Foods

**SELVANAYAGAM'S**

For Motor, Fire, Burglary and All Other Classes of General Insurances.

# S. A. SELVANAYAGAM & Sons.

BATTICALOA.

Batticaloa

நகரத்திலே சிறந்த படப்பிடிப்பகம்

# 'ஸ்ருடியோ லேக்'

முனைத்தெரு, மட்டக்களப்பு.




*The Best Studio in the Town:*

# STUDIO LAKE

**Munai Street,** **Batticaloa.**

யாழ்ப்பாணம், 32, கண்டி வீதியிலுள்ள ஆசீர்வாதம் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.